www.tamilarangam.net


# ஈழத்தில்

**கவிதை மூலை**

சொந்த நாடோ சுகயீனம்
வந்த நாடோ சுகபோகம்
சொந்த வீடே எரிகையிலும்
சோகமில்லா மாந்தர்களோ

- சுடு கவி

திருவள்ளுவர் ஆண்டு 2026 சிலை 13 (27.12.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு: 40p


# சந்தி வெளியில் புலிகள் பாரிய தாக்குதல்

- அதிகாரி உட்படப் பல படையினர் பலி
- 3 போராளிகள் வீரச் சாவு
- பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

**23-12-95 மட்டக்களப்பு மாவட்டம் சந்திவெளி எனும் இடத்தில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும்சண்டை இடம்பெற்றது.**

நண்பகல் வேளையில் கிரானில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து சித்தாண்டி இராணுவ முகாமுக்கான விநியோக வேலையில் ஈடுபட்டிருந்த படையினரே கடுமையான தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இச்சண்டை நடை-பெற்றுக் கொண்டிருக்கும் போது துப்பாக்கிச் சத்தம் கேட்டு முறக்கொட்டாஞ்சேனை பகுதியிலிருந்து உதவிக்கு வந்த இன்னொரு அதிரடிப் படையணி மீதும் விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் 70க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதாக பி.பி.சி போன்ற பல செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவ் வெற்றிகரமான தாக்குதலில் பெருமளவு ஆயுதங்களும் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இச் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 3 போராளிகள்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# சுவிஸ் நாட்டில் விடுதலைப் புலிகளை தடைசெய்யும் சட்டமூலம் இரண்டாம் முறையும் நிராகரிக்கப்பட்டது

20-12-95 அன்று சுவிஸ் பாராளுமன்ற ஒன்றுகூடலில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினை சுவிஸ் நாட்டில் இயங்குவதற்குத் தடை செய்யக் கோரும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. எனினும் இதனை எதிர்த்து, பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் இச் சட்டமூலம் நிரா-கரிக்கப்பட்டுள்ளதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சுவிஸ் நாட்டின் சட்டத்தினை மதித்து, அதற்குட்பட்ட வகையில் இயங்குவதால் அவர்களுக்கு இந்நாட்டில் எவ்விதத் தடையும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இச் சட்டமூலத்தை எதிர்த்து, விடுதலைப் புலிகளைத் தடை செய்யக்கூடாது எனும் கருத்துக்கு தனது முழு ஆதரவைச் சுவிஸ் நாட்டின் நீதி அமைச்சர் வெளிப்படுத்தியிருந்தார்.

முன்னரும் இவ்வாறான சட்டமூலம் சுவிஸ் பாராளுமன்றத்திற் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் அதுவும் பெரும்பான்மை வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது. இது இவ்வாறிருக்க, மிக அண்மையிற் சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் சுவிஸ் நாட்டிற்கு விஜயஞ்செய்து நாடு திரும்பிய பின் மீண்டும் இவ்வாறான சட்ட மூலம் கொண்டு வரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் சிறீலங்காவின் முகத்திற் கரிபூசும் விதமாக இச்சட்டமூலம் நிரா-கரிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டில் புலிகளால் பரவலான தாக்குதல்கள்

21-12-1995 வியாழக்கிழமை குடாநாட்டிற் பல இடங்களிலும் பரவலான பலத்த தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டுள்ளது.

தொல்புரம், மூளாய், சண்டிலிப்பாய், துணைவி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிற் பரவலான தாக்குதல்கள் நடாத்தப்பட்டதை ஏற்றுக்கொண்ட சிறீலங்கா இராணுவ நடவடிக்கைச் செயலகம் வழமைபோற் சிறீலங்கா இராணுவத்துக்கு ஓரளவு இழப்புக்களே ஏற்பட்டதாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே சுதுமலைப் பகுதியிற் புதன்கிழமை 20-12-1995 அன்று பதினைந்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் அங்குநிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது நீண்ட நேரமாகத் தாக்குதல் நடாத்தியமையையும் சிறீலங்கா இராணுவ நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் பலாலிச் சிறீலங்கா இராணுவத் தளத்தின் கிழக்குப் பக்கம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுடன், இத் தாக்குதல்களும் ஒன்று சேர்ந்து சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரத்தில் பெரும் குழப்பத்தையும் அதிர்ச்சியினையும்

தொடர்ச்சி : 2 ஆம் பக்கம்

# வன்னியில் 10,000 வீடுகள் அமைக்கும் வேலை முழுவீச்சுடன் நடைபெறுகிறது

வலிகாமப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில் குடியேறிய மக்களிற்கென முதற்கட்டமாக பத்தாயிரம் வீடுகள் நிர்மாணிப்பதற்கான வேலைகள் தொடங்கியுள்ளன. இத் திட்டங்கள் தமிழீழ பொருண்மிய நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன. இடம்பெயர்ந்தவர்கள் வீடு கட்டுவதற்கென முக்கால் 'ஏக்கர்' வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தரிசு நிலங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருந்தவை பல தற்போது பயிர் செய்யக் கூடிய நிலங்களாக மாறி வருகின்றன. இடம்பெயர்ந்து வன்னியில் குடியேறிய மக்கள் இங்கு விவசாயம் செய்யத் தொடங்கியுள்ளமையே இதற்கு பிரதான காரணமாகும். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இவர்களுக்கான ஊக்கமும், ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் பயிர்ச் செய்கை மேற்கொள்வோர்க்கு தேவையான பொருட்களையும் வழங்கி வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டம் விஸ்வமடுப் பகுதியில் சிறு தானிய உற்பத்திக்கான கடன் வசதிகளை மேற்படி நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினர் வழங்கி வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து கிளிநொச்சி இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள 149 குடும்பங்களைச் சேர்ந்த 627 பேரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினராலும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினராலும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான பாற் பொருட்கள் அனைத்தையும் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினர் அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்.

தொடர்ச்சி : 2 ஆம் பக்கம்

# தமிழீழ மக்களின் துயர் கண்டு பொறுக்காத தமிழ் நாட்டு இளைஞன் தீக்குளித்துத் தியாகம்

## இளைஞனை நினைவு கூர்ந்து எழுச்சிநாள்

தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் ஈழத்தமிழ் மக்கள் மீதான பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கண்டித்தும், ஈழத்தமிழ் மக்களுக்குச் சகல தமிழ் பேசும் மக்களும் ஆதரவு தரவேண்டும் எனக் கோரியும், 15-12-1995 அன்று தமிழகத்தில் லப்பைக்குடிக்காடு எனும் கிராமத்தைச் சேர்ந்த அப்துல் ரகுவ் எனும் 24 வயதுடைய இளைஞர் தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்துள்ளார். திருச்சிக்கு அண்மையிற் பெரும்பலூர் எனும் இடத்திற் தான் பணிபுரியும் கணனிப் பயிற்சி நிறுவன அறிவிப்புப் பலகையிற் "சென்னையில் நடைபெற உள்ள தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், ஈழத்தமிழர்க்கு ஆதரவு காட்டும் வகையில் அனைவராலும் புறக்கணிக்கப்பட வேண்டும்" "சிறீலங்காவின் விளையாட்டு வீரர்கள் எவரையும் இதிற் கலந்து கொள்ள அனுமதிக்கக் கூடாது", "இன்று நான், நாளைத் தமிழகம்" என எழுதிவிட்டே அவர் தீக்குளித்ததாகவும் தமிழகத்தில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி : 3 ஆம் பக்கம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்தமிழீழத்தில் சிறீலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில்

# பல மனித உரிமை அத்துமீறல்கள்

## ■அம்பாறை மாவட்டத்தில் சுற்றிவளைப்பு
## ■பல தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர்

அம்பாறை மாவட்டத்திற் சில தினங்களுக்கு முன்னர் கோலாவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, போன்ற இடங்கள் சிறீலங்கா அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகச் சல்லடை போட்டுத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 300 க்கும் மேற்பட்ட மக்கள் கைது செய்யப்பட்டு அதிரடிப் படை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இப்படியாக எதுவித காரணங்களும் இன்றி இரண்டு தினங்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை உகுணை கிராமமும் அதிரடிப் படையினராற் சுற்றி வளைக்கப்பட்டு அங்குள்ள பெரும்பாலான கிராமத்தவர்கள் அனைவரும் படையினராற் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதில் 7 பேர் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை என்னும் பெயரில் மிகவும் மிருகத்தனமாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இரண்டு பிள்ளைகளின் தாயான மூத்ததம்பி சாந்தம்மா, பத்துப் பிள்ளைகளின் தந்தையான மூத்ததம்பி வயது 65, ஆறு பிள்ளைகளின் தாயான பானுமதி, 4 பிள்ளைகளின் தந்தையான மதியன் வயது 35, இரண்டு பிள்ளைகளின் தந்தை பி. சின்னத்தம்பி, ஐந்து பிள்ளைகளின் தந்தையான மகேஸ்வரன் வயது 28 ஆகிய இவர்கள் 15 நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் சித்திரவதைகளினால் ஏற்பட்ட காயங்களின் தாக்கம் அதிகரித்ததினாற் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட இன்னொரு சுற்றி வளைப்பில் இதே கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திற் சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும், ஏறாவூர், ஐயங்கேணி, ராமேஸ்புரம், செங்கலடி, களுவாங்கேணி போன்ற கிராமங்கள் 21-12-1995 அன்று சுற்றிவளைக்கப்பட்டு உள்ளே யாரும் வராதபடியும், வெளியேறாதவாறும் வீடு வீடாகச் சோதனையிட்டுள்ளனர். இதன் போது இக்கிராமத்தில் வாழ்ந்த பல பொதுமக்கள் விசாரணை என்னும் பெயரிற் கைது செய்யப்பட்டு முகாமுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மட்டக்களப்புப் பிரதான சாலைகளால் வாகனங்கள் செல்வதற்குச் சிறீலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் தடைவிதித்துள்ளனர். வாழைச்சேனையில் பொலிஸ், இராணுவ முகாம்கள் உள்ள பகுதிகளிலும் இவ்வாறான தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் சிரமங்களைக் கருத்திற் கொள்ளாது, தமது நலத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு சிறீலங்காப் படைகள் எடுக்கும் இந்நடவடிக்கைகளால், மக்கள் இராணுவத்தின் மீது ஆத்திரமடைந்தவர்களாக உள்ளார்கள் என மட்டக்களப்பு வாசிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பிற் சிறீலங்காப் படைகளின் பகுதியில் படையினரின் தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கையாற் பொதுமக்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். இத்தகைய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கையால், மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மாணவர்கள் பலர் தற்போது நடைபெற்ற ஆண்டிறுதித் தேர்வு எழுத முடியாமற்போயுள்ளதாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏனெனிற் பல மாணவர்கள் விசாரணை என்னும் பெயரிற் படையினராற் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதே இதற்கான பிரதான காரணமாகும்.

இதேவேளை இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் வந்து ஆட்கடத்தும் நடவடிக்கையிலும் சிறீலங்காப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறாகக் கடந்த 17ஆம் திகதி உன்னிச்சைப் பகுதியிற் கொக்கட்டிச்சோலை, முனைக்காட்டுப் பகுதிகளிலிருந்து மாடு மேய்க்கச் சென்ற இரு வயோதிபர் உட்பட ஆறுபேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். மேலும் மட்டக்களப்புப் பகுதியில் ரூபன் என்னும் அப்பாவித் தமிழிளைஞரைச் சிறீலங்காப் பொலிசார் சுட்டுக் கொன்றுள்ளனர். இவரது உடலைப் பொலிசாரிடம் இருந்து பெறுவதற்கு உறவினர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து இறுதியிற் பெற்றுக்கொண்டனர். இதேவேளை வாழைச்சேனைக்கும் – நாசியன் தீவுக்கும் இடையிலான வாவிப் படகுச் சேவையை மீண்டும் தொடங்குவதற்கு அனுமதியை வழங்க இராணுவத்தினர் மறுத்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள உயிலங்குளம், பள்ளிக்குடாப் பகுதிகளில் உள்ள சிங்கள இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இத் தேடுதல் நடவடிக்கையின் போது பல அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பள்ளிக்குடா பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் விறகு பொறுக்கச் சென்ற 10 வயதுச் சிறுவனின் மீது சிறீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படுகாயப் படுத்தியுள்ளனர். முழங்காலிற் காயப்பட்ட நிலையில் இருந்த அச்சிறுவனைப் படையினர் கூட்டிச் சென்றுள்ளனனர். தாம் கொக்கு என நினைத்தே அச்சிறுவனைச் சுட்டதாகக் கேலிக்கூத்தான விளக்கத்தைச் சிறீலங்காவின் இராணுவ வட்டாரம் தெரிவிக்கின்றது.

## திருமலை மாவட்டத்தில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகள்

இவ்வாண்டு ஐப்பசி மாதத்தில் மட்டும் திருமலையில் 27 தமிழ்ப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளதையும் அவர்களின் விபரம் எதுவும் அறிய முடியாமல் உள்ளதாகவும் மனித உரிமை அமைப்பு வெளியிட்ட அறிக்கையிற் தெரிவிக்கப்படுகிறது. இதில் 7 இளம்பெண்களும் அடங்குவர் என்றும், இதே ஆண்டில் இம் மாவட்டத்தில் மட்டும் 62 பேர் தொடர்ந்தும் படையினராற் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டுமென அவ்வறிக்கை கோரியுள்ளது.

இவ்வாறாகத் தென்தமிழீழத்திற் சிறீலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாழும் தமிழ் மக்கள் ஓர் இனம்புரியாத பயப்பிராந்தியில் எந்நேரமும் எதுவும் நடைபெறலாம் என்ற நிச்சயமற்ற தன்மையில், ஒருநாள் இப்பகுதிகள் தமிழர் படையின் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்ற நம்பிக்கையோடு அதுவரைக்கும் அப்பகுதி மக்கள் தமது பிறந்த மண்ணை விட்டுப் போவதில்லை என்னும் வைராக்கியத்துடனும், திடமான நம்பிக்கையுடனும் வாழ்ந்து வருகின்றனர்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளையின் வெளியீடு

**தாயக மண்ணின் காற்று**

**வாத்திய இசைவடிவில் அமைந்த விடுதலைக் கீதங்கள் அமைந்த இசைத் தட்டு தற்பொழுது விற்பனையாகிறது.**





## வன்னியில் 10,000 வீடுகள்...

இதேபோன்று இடம்பெயர்ந்த மக்களுக்கென 750 ரூபாய் பெறுமதியான உதவிப்பொருட்கள் அடங்கிய 5000 பொதிகளை 'றொட்டரிக்' கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இதேவேளை வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவும் பொருட்டு தொண்டர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றன. பின்னர் இவர்கள் பத்துப்பேர் அடங்கிய குழுக்களாக வன்னிப் பகுதிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை தமிழீழ சமூக பொருண்மிய வளர்ச்சி நிறுவனம் 500 வீடுகள் அமைக்கும் சிறிய வீடமைப்புத் திட்டத்தை கிளிநொச்சியில் தொடங்கியுள்ளது. இதன் தொடக்க நடவடிக்கையாக உடையார்கட்டு, கேராவில் பகுதியில் 100 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. ஏனைய வீடுகள் இதனைத் தொடர்ந்து அமைக்கப்படும் எனவும் இவ்வீடுகள் ஒவ்வொன்றுக்கும் 8000 ரூபாய் வரை செலவாகும் எனவும் அறிவித்துள்ளது.

## குடாநாட்டில் புலிகளால்...

தோற்றுவித்துள்ளது.

இது ஒரு புறமிருக்க 21-12-95 அன்று அதிகாலை ஆனையிறவு முகாமிலிருந்து தெற்குப் பக்கமாக வெளியேற முயன்ற சிறீலங்காப் படையினரை விடுதலைப் புலிகள் தடுத்து கடும் தாக்குதல் நடாத்தினர். பல மணிநேரம் நடை பெற்ற மோதலையடுத்து, டாங்கிகள், கவச வாகனங்களுடன் வெளியேறிய பெருந் தொகையான சிறீலங்காப் படையினர் மீண்டும் முகாமுக்குள் பின்வாங்கினர்.

இம் மோதலிற் கிளிநொச்சியைச் சேர்ந்த வீரவேங்கை ஈழத்துமிலன், வேவுராஜ் ஆகிய இரு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் மூர்க்கத்தனமான தாக்குதலால் புறமுதுகிட்ட இராணுவத்தினர் வழமைபோல் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடாத்திய எறிகணைத் தாக்குதலிற் பரந்தன் பகுதியில் வயோதிபர் ஒருவர் படுகாயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

இதே தினத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்றில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட சித்தங்கேணியைச் சேர்ந்த வீரவேங்கை மாமலரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காகக் கனகபுரத்திலுள்ள விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்புச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மண்மீட்புப் போரில் தம்மையும் மாவீரர் ஆக்கிக்கொண்ட இவ் வீரவேங்கைகளுக்கு எமது வீரவணக்கங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# 1995 தரும்செய்தி

1995ம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மகத்தான திருப்பங்களை ஏற்படுத்திச் செல்கிறது. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட முடியாதவர்கள் என்ற உண்மையைச் சந்திரிகாவுக்கு இவ்வாண்டு உணர்த்தியுள்ள அதே நேரத்தில் அழிக்கப்பட வேண்டியவர்களாக சந்திரிகாவின் சிறீலங்காப் படையினை யாழ் குடாநாட்டில் விட்டுச் செல்கிறது. இதனால் மண் மீட்புப் போரை, துரிதமாகவும், ஒற்றுமையாகவும், பலத்துடனும் முன் எடுத்துச் செல்லவேண்டிய கடமையை ஒவ்வொரு தமிழன் மீதும் சுமத்திச் செல்கிறது.

இவ்வாண்டின் முதல் – காலாண்டில், சந்திரிகா சமாதான வேடம் தரித்து, சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மேல் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு இன அழிப்புச் செய்து ஆட்சி நடத்துகிறது என சர்வதேச ரீதியில் நிலவிவந்த கருத்தினை மாற்றும் திட்டங்களைத் தீட்டினார். தமிழ் மக்களின் துன்பங்களுக்கு முன்னைய அரசுகளின் இராணுவவாதமே காரணம் எனக்கூறித் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்னைய அரசுகள் தீர்க்கத் தவறியதினாலேயே தீவிற் போர் நிலை தோன்றியது எனத் தத்துவம் பேசி, போரை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்துவதே தன் கடன் எனச் சிங்கள மக்களுக்கும் சூளுரைத்தார். ஏற்புடைய தீர்வு முன்வைக்கப்பட்டால் ஆராயத்தயார் என விடுதலைப் புலிகளும் சமாதானத்திற்கான கதவை அகலத்திறந்தனர். ஆனால், சந்திரிகா உதட்டளவில் சமாதானம் பேசி, செயலளவில் அவரின் அதிகாரிகளால் பேச்சு வார்த்தைகளின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கூட எள்ளளவும் நடைமுறைப்படுத்தாது விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களையும் வேறு வேறானவர்களெனக் காட்டும் தன் அரசியற் சதிகாரத்தனத்திற்கும், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அழித்து, தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பு வலிமையைச் சிதறடிப்பதற்கான இராணுவ வலுப்படுத்தல் முயற்சிகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வந்தார். இந்தக் கட்டியணைத்து முதுகில் குத்தும் கபடத்தனத்தை இனங்கண்டு கொண்ட விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் எனச் சந்திரிகாவுக்குக் காலக்கெடு கொடுத்ததும் சந்திரிகா அதனை அலட்சியம் செய்து மோதல் தவிர்ப்பின் முறிவுக்கு முழுமுதற் காரணியானார்.

இதனை அடுத்து, இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில், சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகளே மோதல் தவிர்ப்பினை முறித்துக் கொண்டனர் என உண்மைக்கு மாறான பிரச்சாரங்களை உலக ரீதியில் முடுக்கிவிட்டு, அதேவேளை சர்வதேச நாடுகளைக் கவரக் கூடிய சந்தைச் சலுகைகளின் இருப்பிடமாகச் சிறீலங்காவைக் காட்டித் தான் தமிழ் மக்கள் மேல் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இன அழிப்பு நடவடிக்கைகளைச் சர்வதேச நாடுகள் வெளிப்படையாகக் கண்டிக்காத சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதில் கடுமையாக முயன்றார். இதனை வலுப்படுத்த அரசியற் தீர்வுத்திட்ட யோசனைகளைத் தான் முன்னறிவிப்புச் செய்வதாகக் கூறித் தமிழ் மக்களின் அரசியல் யதார்த்தத்தினை அங்கீகரிக்காது கேலிக்கூத்துக்களை ஆரம்பித்தார். ஆனால் அக்கேலிக்கூத்துக்களைக்கூட பௌத்த–சிங்கள பேரினவாதிகள் ஏற்கமாட்டார்கள் என்ற உண்மையை உலகு கண்டுகொண்டது.

மூன்றாம் காலாண்டுப் பகுதியில் யாழ் குடாநாடு மீதான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கான இராணுவ ஆளணி–ஆயுதப் பெருக்கங்களைச் செய்து முடித்த சந்திரிகா நாலாங்காலாண்டுப் பகுதியில் தமிழீழ மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப் போவதாகத் தமிழ் மக்களின் அரசியல் யதார்த்தத்தினையே நிராகரிக்கும் போலிக்காரணத்தைக் கூறிக் குடாநாடு மீதான வகைதொகையற்ற சுடுதிறன் பிரயோகத்தையும் ஆளணி ஆக்கிரமிப்பையும் இராணுவ ரீதியாக முடுக்கிவிட்டுத் தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசை சிதறடித்துச் சிறீலங்கா முழுவதும் ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள இறைமையுடன் இருப்பதாகக் காட்ட முயன்றார். ஆனால் ஐநூறாயிரம் மக்கள் சிறீலங்காவின் படைகளின் ஆக்கிரமிப்புக்கு அஞ்சி, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்தமை, தமிழீழ மக்களின் அரசியல் அதிகாரத்தை உண்மையில் வெளிப்படுத்துபவர்கள் விடுதலைப் புலிகளே என்பதினை உலகறியச் செய்து தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசின் இருக்கை நிலையைத் தெளிவுபடுத்தித் தொடரவும் செய்துள்ளது. விடுதலைப் புலிகளும் வன்னிப் பகுதியில் மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளைத் துரிதகதியில் நிறைவேற்றி வருவதன் மூலம் விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழீழ மக்களின் நிர்வாக, பணியகத் திறனை உலகறியவைத்து வருகின்றனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்படவேண்டியவர்களாக ஆக்கிரமிப்பாளர்களான சிறீலங்கா இராணுவம் நிற்கிறது என்ற உண்மையை 95 கூறிச் செல்கிறது. இதைச் சந்திரிகா உணர்ந்து கொண்டால் அழிவுகள் தவிர்க்கப்படலாம்

# வாரம் வந்தென்ன? வருடம்பிறந்தென்ன?

ஊரில் உழலும் உற்றார் உறவினர்
நாராய் நலிந்து நடைப்பிணமாகையில்
பீரும் உவைனும் பிணத்தோடருந்தி
காரும் போனும் வாழ்வென நினைக்கும்
காறியுமிழ் தகு நம்போல்வார்க்கு
வாரம் வந்தென் வருடம் பிறந்தென்

இன்றிலும் நாளை நன்றிதாய் அமையும் என்றெணும் உளத்தின்
இயற்கைப் பண்பினால் பிறக்கவிருக்கும் தொண்ணூற்றாறு
உறைத்துக் கடிக்கும் தமிழர் நோவை
குறைக்கப் பிறக்கும் நல்லாண்டாக
சிறக்கப் பொலிக சுகமெலாம் தருகென
அறக் கடவுள் பதம் அன்புடன் பணிவமே

கவிஞர் செ. சிறீக்கந்தராசா

# தமிழீழ மக்களின் துயர்கண்டு...

தமிழீழ மக்களின் துன்ப துயரங்களைக் கண்டு மனம் குமுறி, அவர்களுக்குச் சகலரும் உதவ முன்வரவேண்டும் எனும் கோரிக்கையுடன் தமிழ்நாட்டிற் தீக்குளித்துத் தன் உயிரைத் தியாகம் செய்த தமிழ் இளைஞனுக்குத் தமிழீழ மக்கள் தமது வீர அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர். தமிழீழத்தின் வீதியெங்கும் தோரணங்கள் தொங்கவிடப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் சோக கீதங்களும் இசைக்கப்பட்டுள்ளது. "முகம் தெரியாத உறவுக்கு" என்ற தலைப்பிற் கவிதைகளும், அஞ்சலி உரைகளும் சகல மக்களுக்கும் வழங்கப்பட்டு உணர்வு பூர்வமாகப் பாடப்பட்டு அத்தியாக வீரனுக்குத் தமிழீழ மக்கள் வணக்கம் செலுத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில், சிறீலங்கா கலந்து கொள்வதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் திரு. கோபால்சாமியின் தலைமையில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# முகம் அறியாத உறவிற்கு ஒரு கடிதம்

*—தமிழீழத்திலிருந்து, தமிழகத்தில் ஈழத் தமிழினத்திற்காக உயிர் துறந்த தியாக இளைஞனுக்கு ஓர் உணர்வுள்ள கடிதம்!*

எனக்காகத் தீக்குளித்த உடன்பிறப்பே!

இனத்திற்காக உயிர் துறந்த உறவே, உன் பெயர் அறியேன், உன் முகம் அறியேன், சரியான உன் முகவரி, அதுதானும் அறியேன், ஆயினும் இதை எழுதுகிறேன். இக்கடிதம் உனக்கு வந்து சேராது என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் உன் அர்ப்பணிப்பைக் கூறாமல் இருக்க முடியவில்லை. எம் தேசத்தின் இளம் தலைமுறை இன்று புதிய விதத்தில் சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்பதற்காய் எழுதுகின்றேன்.

உடன்பிறப்பே நீ தீக்குளித்த செய்தி அறிந்து திகைத்தேன். வேதனையோடு வெட்கத்துள் முகம் புதைத்து அழுதேன். உனக்காக மட்டுமல்ல, என்னையும் எண்ணித்தான். பேர் அறியா உறவே! என்னை உனக்குத் தெரியாது. ஆனால் இன்று எனக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே உன்னைத் தெரிந்துவிட்டது. என் மனக் கண்ணில் நீ நடாத்திய யாகம் தெரிகிறது. நீ எழுதிய இறுதி வரிகளும் தெரிகிறது. நீ எரிகிறாய்! நெய்யாய் உருகிறாய்! புழுவாக நெளிந்து விழுகிறாய்! ஐயனே! நீ படும் வேதனையை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லையே! ஏன் இந்த வேதனை! யாருக்காக இந்தத் தியாகம், எனக்காகத்தானே!

என் உறவுக்காகத்தானே! என் அம்மாவுக்காக, அப்பாவுக்காக, அக்காவுக்காக, தம்பி, தங்கைகளுக்காக, என் குடும்பத்திற்காக! எங்கிருந்தோ நீ உன்னை வருத்தி உயிரைவிட்டாய். ஆனால் நான் மட்டும் இங்கே? என் உறவிற்காக உயிர்நீத்த உத்தமனே! ஏன் இப்படிச் செத்தாயோ! எனக்குப் புரிகிறது. உனக்கும் ஒரு சொந்த நாடு இருந்திருக்குமானால் நீ இப்படி யாசித்து மாண்டிருக்கமாட்டாய்.

படை திரட்டி வந்து தமிழன் யார் என்பதைக் காட்டி இருப்பாய். என்ன செய்வது? உலகெங்கும் பரந்துவாழும் தமிழனுக்கு ஒரு நாடு இல்லை. சுதந்திரமாய் குந்தி இருக்க ஒரு கூடு இல்லை. தமிழனாகப் பிறந்ததற்காக நிம்மதியான ஒரு வாழ்வு இல்லை. இந்த அவலநிலையை மாற்றப்போவது தமிழீழம் தான் என்பதை நீ சரியாகப் புரிந்து கொண்டாய்.

தமிழன் என்றாலும், உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவன் என்ற தத்துவத்திற்கு நீ புத்துயிர் ஊட்டிவிட்டாய். என் இரத்தத்தின் இரத்தமே! உன் தேசத்தில் நீ மூட்டிய நெருப்பு உன்னை மட்டும் எரிக்கவில்லை. தமிழ் குலத்தின் எதிரிக்கு கொள்ளி கொடுக்கும் கோடரிக்காம்புகளின் போலி முகத்தோலையும் எரித்துவிட்டது.

எம் தேசத்தின் இளைஞர், யுவதிகளின் நெஞ்சத்திலே புதிய வேகத்தை ஊட்டிவிட்டது.

இனியும் எம் இளம் தலைமுறை உறங்காது!

விழித்து எழும்!

எம்பகை வேருடன் விழும்!

உன் நினைவும் எம் நெஞ்சத்தில் நீங்காது வாழும்!

இப்படிக்கு

தமிழ் ஈழத்தின் உடன்பிறப்பு

# முக்கிய அறிவித்தல்

களத்தில் பத்திரிகை எதிர்வரும் புத்தாண்டிலிருந்து முழுவண்ணப் பதிப்பாக வெளிவருகிறது என்பதனை மகிழ்வோடு அறியத் தருகிறோம்
அத்துடன் அடுத்த வெளியீடு களத்திலின் 100 வது சிறப்பு இதழாகவும் மலர்கிறது. ஆக்கங்கள் அனுப்ப விரும்புவோர் தயவுசெய்து தாமதிக்காது அனுப்புக.
புத்தாண்டிலிருந்து களத்திலின் விலை 60p ஆக அமையும் வாசகர்கள் தொடர்ந்தும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்

ஆ- ர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேலதிக வைத்திய அதிகாரிகள் தேவை

## அரச அதிபரிடம் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்திய சாலைக்கு மேலும் இரண்டு உதவி வைத்திய அதிகாரிகள் தேவை என அண்மையில் வெளிநோயாளர் பகுதியில் நடைபெற்ற வைத்தியசாலையின் தேவைகளிற்கான கூட்டமொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இடம்பெயர்ந்து வந்த நோயாளர்கள் இரண்டு மடங்காக அதி- கரித்து உள்ளதால் தற்போது 4 உதவி வைத்தியர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களைவிட 2 உதவி வைத்தியர்களும் 1 வைத்திய அதிகாரியும் தேவை எனக் கேட்கப்பட்டுள்ளது.

**யாழ். மருத்துவமனை மருத்துவர்களை கொழும்புக்கு அழைப்பு**

சிறீலங்கா இராணுவத்தின் யாழ். நகர் மீதான ஆக்கிரமிப்பையடுத்து மக்கள் எல்லோரும் வெளியேறிய நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை தற்காலிகமாகச் சாவகச்சேரி மருத்துவமனையில் இயங்கி வருகின்றது.

இங்கு கடமையாற்றிய யாழ். மருத்துவ மனை மருத்துவர்களில் எட்டுப்பேரை உடனடியாக கொழும்புக்கு வரும்படி, சிறீ லங்காவின் சுதாகார அமைச்சின் செயலாளர் யெரி பெரெரா அறிவித்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வறிவித்தல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு 22-12-95 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இடம்பெயர்ந்தவர் எண்ணிக்கை அதிகரிப்புடன் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதி- கரித்துள்ளது. இவர்களைக் கவனிப்பதற்கு போதுமான மருத்துவர்கள் இல்லை என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ள இவ்வேளையில் இதனை நன்கு அறிந்திருந்தும் விசமத்தனமான முறையில் இனவாத வன்மம் பிடித்த சிங்கள சிறீலங்கா அரசு திட்டமிட்டு, இடம் பெயர்ந்து அகதிளாகியுள்ள தமிழ் மக்களின் துன்ப துயரங்களை மென்மேலும் அதி- கரித்து மக்களை விரக்தி நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஆவலாய் இருக்கின்றது. இவ்வாறான மனித உரிமை மீறல்களை நடைமுறைப்படுத்த சிறீலங்கா அரசு தன்னால் முடிந்த சகல நடவடிக்கைகளையும் செய்கின்றது என்பதை இவ்விடயம் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

# மூவாயிரம் பேரிற்கு மண்மீட்புப் பணம் மீளளிப்பு

தமிழீழ விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்திற்கு, மண்மீட்புப் போரிற்காக பண வைப்புச் செய்த பல ஆயிரம் தமிழீழ மக்களில் இவ் ஆண்டிக்குரிய மூவாயிரம் பேரிற்கு பணம் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் விபரங்களை தமிழீழ நிதிப் பிரிவு, தமிழீழத்தில் இருந்து வெளியாகும் 'ஈழநாதம்' செய்தித்தாளில் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இடம் பெயர்ந்த சூழ்நிலையிலும் தமிழீழ வைப்பகம் தனது சேவையினை தமிழ் மக்களுக்கு ஆற்றிவருகிறது. சிறீலங்கா தமிழர் தாயகப் பிரதேசங்களில் பணப் புழக்கத்தை முடக்கிய வேளையில் இதனது நேர்மையான, துரிதமான நடவடிக்கைகள் தமிழர்களிடையே அது பற்றிய நன்மதிப்பை மேன்மேலும் உயர்த்தியுள்ளது.

# தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையும் மக்கள் உணர்வுகளும்

"வலிகாமம் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தபோது அனைத்தையுமே இழந்துவிட்டது போன்ற உணர்வே குடிகொண்டது. ஆனால் தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை நொந்து போயிருந்த உள்ளத்திற்குப் புத்துயிரூட்டிவிட்டது என்கிறார் வைத்திய கலாநிதி பி. பிலிப்ஸ் அவர்கள்".

"ஒரு சில போராளிகளுடன் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடங்கப்பட்ட ஒரு சில காலப்பகுதிக்குள்ளேயே அது பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுக் கடற்புலிகள், கரும்புலிகள், கடற்கரும்புலிகள், விமான எதிர்ப்புப் படைப்பிரிவு என வளர்ச்சி பெற்று உலகில் எந்தவொரு 'கெரில்லா' அமைப்பிடமோ, ஏன் ஒரு நாட்டு அரசபடைகளிடமோ இல்லாதளவிற்குத் தற்கொடைப் படைகளைக் கொண்டு இயங்கி வருவதுடன் அளப்பரிய சாதனைகளையும் படைத்து வருவது தலைவரின் தலைமைத்துவத் திறமைக்குச் சான்று பகர்ந்து நிற்கிறது".

"எழுந்தமானமாகப் பார்க்கும்போது சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டது என்றே எண்ணத் தோன்றியது. ஆனால் தலைவர் பிரபாகரனின் உரையைக் கேட்டபோது தான் படையெடுப்பின் முழுவடிவமும் தெரிய வந்தது. பல்லாயிரக்கணக்கான இராணுவத்தைக் குவித்து நூற்றுக்கணக்கான டாங்கிகள், கவசவாகனங்கள் மற்றும் விமானங்களைப் பயன்படுத்தி மிகவும் ஒடுங்கிய, தனக்கு சாதகமான பகுதிகளூடாக ஆக்கிரமித்து விட்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டதாக வெட்கம் கெட்ட அரசு மார்தட்டிக் கொள்வது வேடிக்கையாகவுள்ளது".

பல்லாயிரக்கணக்கான படையினருடன் சில நூற்றுக்கணக்கான போராளிகள் எதிர்த்து நின்று போராடுவது சாத்தியமற்றது தான். எனினும் தனது முழுப்பலத்தையும் ஒன்று திரட்டிக்கூட யாழ்ப்பாணத்தை முழுமையாக கைப்பற்ற முடியாது திணறும் சிறீலங்காப் படைகளை விரட்டியடிக்க எமக்கு ஆட்பலம் போதாதிருப்பது வேதனைக்குரியது. எமது இளைஞர்களும், யுவதிகளும் இதனை உணர்ந்துகொண்டு எமது மண்ணை எதிரியிடமிருந்து விடுவிக்க முன்வரவேண்டும்.

சிறீலங்காத் தொடர்புச் சாதனங்கள் ஆயிரக்கணக்கிற் புலிகளைக் கொன்றுவிட்டதாகப் பிரச்சாரப்படுத்தியபோது உண்மையாக இருக்குமோ எனக் கலங்கிவிட்டேன். ஆனாற் தலைவர் பிரபாகரனின் உரை தெம்பூட்டியது. போர்முனையில் உயிரை விட்டால் மட்டும் அது போராக மாட்டாது. போர் முனையில் நிற்கின்ற உயிர் தேவைப்படும் போது தன்னைப் பாதுகாத்துத் தொடர்ந்து போராடுவதே போரில் வெற்றி பெறும் உபாயமாகும். போர் ஒரு சதுரங்கம். போர் முனை உத்திகள் ஓர் சதுரங்க விளையாட்டே. வெற்றி பெறுவதற்காகவே தற்காலிகப் பின்னடைவுகளைச் சந்திப்பதையும், பின்னடைவுகளை ஏற்படுத்துவதையும் காணலாம்.

ஆகவே "வலிகாமத்திற் புலிகளுக்குத் தோல்வியல்ல அது ஒரு தற்காலிகப் பின்னடைவே" என தமது மாவீரர் தின உரையிற் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது அவரது தீர்க்கதரிசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. போர் முனை யுக்தியின் ஒரு 'மைல்' கல். தமிழீழக்கரு தலைவர் பிரபாகரன் அவர்களின் எண்ணத்தில் உதித்து விழுதுவிட்ட ஒரு ஆல விருட்சமாக இன்று வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி வெறும் வாய்ப்பேச்சால் வளர்ந்ததில்லை. இது உயிராயுதத்தின் சாதனைகளாலும், தற்கொடைகளாலும் வளர்ந்துள்ள ஒரு வரலாறு.

"அதனை இலகுவில் யாரும் அழித்துவிட முடியாது என்பதுபோல் சிறீலங்காப் படைகள் விரைவில் பாடம் படிக்கப் போகிறார்கள். விரைவில் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து எமது தேசம் விடுவிக்கப்படும் என்ற தேசியத் தலைவரின் உறுதி தமிழர்களாகிய எமக்கு ஒரு மகிழ்வைத் தருகிறது. தேசம் விடியும் என்ற நம்பிக்கையின் ஒளியாக அது மின்னுகிறது. தலைவரின் அழைப்பை ஏற்று இளைஞர்களும், யுவதிகளும் இனியும் காலம் தாழ்த்தாது இணைந்து போராடித் தலைவரின் உறுதியை மெய்ப்பித்துத் தமிழ்த் தேசத்தை உருவாக்கிடும் என்பதில் ஐயமில்லை.

# யேர்மனி கட்டிங்கன் நகர வரசித்தி வினாயகர் ஆலயம் புலிகளின் வெற்றிக்காக யாகம் நடாத்தியது

சென்ற 08-11-95 அன்று கட்டிங்கன் நகர வரசித்திவினாயகர் ஆலயத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்தும் நியாயமான போர் வெற்றிபெறவும் இனவாத ஆக்கிரமிப்பு இராணுவம் வீழ்ச்சியுறவும் வேண்டி யாகம் நடாத்தப்பட்டது.

யாக முடிவில் உரையாற்றிய அருட்திரு நித்தியானந்தக் குருக்கள் 'காலம் காலமாக நாம் கொண்டுள்ள நம்பிக்கையின்படி, தொடர்ச்சியான எமது மனமொப்பிய பிரார்த்தனையும், உச்சாடனமும் சக்தி பெற்றுப் பலனளிக்கும். அதேவேளை எமது உணர்வுகளை, ஆதங்கத்தை, பங்களிப்பை, எம்மாலான அனைத்து வழிகளிலும் வெளியிடவேண்டிய கால கட்டம் இது. நீதிக்காகப் போராடும் தலைவனையும், படையையும் வாழ்த்தியும், அவர்தம் ஆன்மபலத்துக்கும், ஆயுட்பலத்துக்கும் இறையருள் வேண்டியும் யாகங்கள் நடாத்துவது காலம் காலமாக நமது மரபாக இருந்து வந்துள்ள ஒன்று" எனக் குறிப்பிட்டார்.

தமிழீழ மக்களின் துன்பம் தீரவும், தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு ஆயுட்பலம் வேண்டியும், நீதிக்காக போராடும் புலிகளின் வெற்றிக்காகவும், இனவாதச் சிங்கள அதர்ம இராணுவ வீழ்ச்சிக்காகவும் இறைவனைவேண்டி நடாத்தப்பட்ட இந்த யாகத்தை அருட்திரு நந்தியானந்தக் குருக்கள் தலைமை தாங்கி நடாத்தினார்.

கோயில் அர்ச்சகர் அன்றைய அருச்சனையைத் தனியார் நலனுக்காக ஒன்றாக நடத்தாமல் பொது அருச்சனையாக நடாத்தி அன்றைய வசூலைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கினார்.

கோயில் நிர்வாகத்தினர் ஏற்கனவே இனவாத ஆக்கிரமிப்பு யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களைக் கவனிக்கும் பொருட்டுத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினிடம் ஆயிரம் மார்க்குகளை வழங்கியிருந்தபோதும் யாக முடிவில் ஐயாயிரம் மார்க்குகளை மீண்டும் கையளித்து இனப்பற்றை வெளிப்படுத்தினர்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனியக் கிளையின் வெளியீடு

**விடுதலை வேள்வி**

நாட்டிய நாடக இசைத் தட்டு
தற்பொழுது விற்பனையாகிறது.



www.tamilarangam.net



# அதிமுக்கிய கட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம்

❖ யாழ்ப்பாணப் படையெடுப்பின் அரசியல் இராணுவ நோக்குகள் விடுதலைப் புலிகளால் முறியடிப்பு!
❖ கல்லறையை எதிர்பார்த்து சிங்கள இராணுவம், இதனால் உடனடி ஆட்சேர்ப்பில் சிறீலங்கா!
❖ ஆக்கிரமிப்பாளனை அடித்து விரட்ட அனைத்துத் தமிழர்களதும் இயலுமான எல்லா உதவிகளும் உடன்தேவை!

தமிழீழ விடுதலைப் போராட்டம் அதிமுக்கிய கால கட்டமொன்றை எய்தியுள்ளது. யாழ்ப்பாண மக்களை இராணுவ அழுத்தங்கள் கொண்டு விடுதலைப்புலி களை விட்டுப் பிரித்துத் தனிமையாக்கி அரசியல் அடிமை ப்படுத்த நினைத்த சந்திரிகாவின் அரசியல் நோக்கும், பல்லாயிரம் படையினரைப் பலகோடிரூபா பெறுமதியான சுடுதிறன் உடன் விடுதலைப் புலிகளுடன் நேரடி மோதலை ஏற்படுத்தி அவர்களைப் பலமிழக்கச் செய்தல் வேண்டும் எனும் சிறீலங்காவின் இராணுவ நோக்கும், ஏககாலத்தில் விடுதலை புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதனால் விடுதலைப்புலிகளுக்கு பலத்த இழப்புக்களையோ அல்லது பலவீனத்தையோ எதிர்பார்த்தவாறு ஏற்படுத்த முடியாமல் தான் பறித்த குழிக்குள் தானேவிழுந்து பலத்த ஆளணிச் சேதங்களையும் ஆயுத தொழில் நுட்ப இழப்புக்களையும் சந்தித்து நிற்கிறது சிறீலங்கா இராணுவம்.

ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை தன் வரட்டுக் கௌரவத்திற்காகப் பலியிட்டு யுத்தம் செய்யும் சந்திரிகா, கட்டாந்தரைகளிலும் வெட்டவெளிகளிலும் நின்று சிங்கக் கொடியை மாமன் அனுருத்த தூக்கிப் பிடிக்க அதை பார்த்து மகிழும் சந்திரிகா, இதுவே எங்கள் சாதனை என வானொலியிலும் உரையாற்றுகின்றார். எல்லாமே முடிந்து விடும் என்பது போல் பகிரங்க மன்னிப்பு பற்றி பேசி உலகை ஏமாற்றப் பார்க்கிறார்.

இதனால் உண்மைநிலையை விளங்காத சிங்கள பௌத்த பேரினவாதிகள் இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்களைக் கேலி கிண்டல் செய்து அடிமைகள் போல் நடத்தவும் முற்படுகின்றனர். சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கேவலமான செயல்களுக்கு ஒரு உதாரணமாகக் கம்பளை முத்துமாரியம்மன் கோவில் மேல் சிங்ககொடியை ஏற்றியுள்ளனர். அப்பாவித் தோட்டத்தொழிலாளர்கள் கோயில்களிலும், திருமணம் மற்றும் மரணச் சடங்குகளிலும் கலந்து கொள்கையில் சுற்றிவளைத்து கைது செய்யப்படுகின்றனர். மலையகம் முழுவதும் இனரீதியான அச்சுறுத்தல் தமிழருக்கு நாளாந்த அனுபவமாகி வருகிறது.

கொழும்பில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாகச் சந்தேகத்திற்குரியவர்களாகவும் எதிரிகளாகவும் கருதப்படு கின்றனர். வவுனியாவில் நிரந்தர வசிப்பிடம் உள்ளவருக்கு மட்டுமே கொழும்பு வரச் சிறீலங்கா அனுமதி வழங்கத் தொடங்கியுள்ளது. இதற்கிடை அனுருத்தரத்வத்த கொழும்புக்கு வரும் தமிழர்கள் வீடுகளில் தங்கமுடியா தெனவும் பொது மண்டபங்களை தாம் ஒழுங்கு செய்ய போவதாகவும் கூறியுள்ளார். இதன் மூலம் அகதிமுகாம்கள் என்ற பெயரில் தமிழ்மக்களை ஒன்று திரட்டி பின்னர் பலவந்தமாக தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ்குடா நாட்டின் பகுதிகளுக்கு கொண்டு சென்று குடியேற்றச் சிறீலங்கா திட்டம் தீட்டி வருவதாகச் செய்திகள் தெரிவிக் கின்றன. மேலும் தாண்டிக்குளம் ஊடாக யாழ்செல்ல வரும் பயணிகளையும் இவ்வாறே சிறீலங்கா தடுத்து கப்பல்களில் ஏற்ற முயல்வதாகவும் இவர்களையும் யாழ்பிரதேசத்தில் வலுக்கட்டாயமாகக் குடியமர்த்தச் சிறீலங்கா திட்டமிடுவதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இடம் பெயர்ந்த 500,000 மக்களையும் உணவு மருத்துவ வதிவிட அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி அவர்களை இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி நகர வைக்க சிறீலங்கா திட்டம் தீட்டுவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் சிங்களக் காடையர்களை ஆயுதமயப்படுத்தி யாழ்குடாநாட்டில் குடியமர்த்தி இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களை தன் மயப்படுத்தலாம் எனவும் சிறீலங்கா சிந்திப்பதாகத் தெரிகிறது.

ஆயினும் சிறீலங்கா இராணுவம், உறுதியின் உறைவிடமான மாவீரர் குருதியில் குளித்த மண்ணில், தம்மால் நிலைத்து நிற்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்வதினால் தங்கள் கல்லறை நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உளநிலையுடன் காணப்படுவதாக இராணுவ ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. இதனைச் சமாளித்து தமது படையினரை உசார்படுத்தும் வகையில் 10,000 ஆளணியினரை சிறீலங்கா திரட்டி எட்டு வார பயிற்சியின் பின் தமிழ்ப் பிரதேசங்களில் நிலைநிறுத்த முயற்சிக்கிறது. எனினும் விடுதலைப் புலிகளின் மண்ணில் பெருந்தொகையான இராணுவத்தினரைக் குவிப்பது விடுதலைப் புலிகளின் பொறிக்குள் சிங்கள இளைஞர்களின் தலையை வைப்பதற்கு ஒப்பான செயல் என சிறீலங்காவின் எதிர்க்கட்சி வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். வடக்கு–கிழக்கு மாகாணத்தில் இதுவரை சிறீலங்கா இராணுவத்தால் முற்றாக கைப்பற்றப்பட்ட பிரதேசமென எதுவும் இல்லை எனவும் காலத்துக்கு காலம் சிறீலங்கா அரசால் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசமெனக் கூறப்படும் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் கிழக்கு முதல் தீவுப்பகுதிவரை மாதகல் முதல் காங்கேசன்துறை வரை சிறீலங்கா கடும் இழப்புக்களைச் சந்தித்து வருவதைக் குறிப்பிட்ட சிங்கள சமூகத்தலைவர்கள் பலர் யாழ். குடாநாட்டுள் படைகளைக் குவித்துக் கிழக்கை இழந்ததும் அல்லாமல் விடுதலைப் புலிகளின் பெருந் தாக்குதல்களுள் பெருந்தொகையான சிங்களவர் களையும் சிக்க வைத்துவிட்டதாகச் சந்திரிகா அரசைக் குறைகூறுகின்றனர்.

கோப்பன்கேனில் சமாதானக் கதைகளையும், நியூயோர்க்கில் போர்ப் பிரகடனத்தையும் செய்யும் சிறீலங்கா சனாதிபதியின் முன்னுக்குப் பின்னான போக்கு தெளிவாகி வருவதினால் சர்வதேச சமூகத்திடையே சந்திரிகாவுக்கு இருந்த செல்வாக்கு சரியத் தொடங்கிவிட்டது. இதனால் முதலீட்டாளர்களின் தொகை குறையத் தொடங்கியுள்ளது. இதனால் பங்குச் சந்தையில் சிறீலங்கா படுமோசமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. கொலன்னாவை எண்ணெய்க் குதங்கள் நாசமாக்கப்பட்டதை அடுத்து மேலும் சிக்கலான சூழ்நிலையை பொருண்மியத்தில் சிறீலங்கா அனுபவித்து வருகிறது. சமீபத்தில் போர் தீவிரமடைந்துள்ளது. ஆனால் முதலீட்டாளர்கள் அஞ்சத் தேவையில்லை என அவசர அவசரமாக சிறீலங்காவின் அமைச்சரான பீரிஸ் முதலீட்டாளர்களை அழைத்துச் சமாதானப்படுத்தினார். ஆயினும் அவர் அழைப்பிதழ் அனுப்பிய 92 வெளிநாட்டு முதலீட்டாளர்களில் 52 பேர் மட்டுமே இக்கூட்டத்திற்கு வருகை தந்தமை சிறீலங்காவுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. உல்லாசப் பயணிகள் வருகை முற்றாக தடைப்பட்டது போற் காட்சி அளிப்பதாகக் கொழும்பு உல்லாசப் பயணத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரித்தானியப் பாராளுமன்றத்திலும் பிரித்தானிய தொலைக்காட்சியிலும் சிறீலங்காவுக்கு உல்லாசப்பயணிகள் செல்வது மிகுந்த ஆபத்தானது என அறிவித்துள்ளார்கள். இதற்கிடையே 1995க்கு திட்டமிடப்பட்ட சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவு எதிர்பார்த்ததை விட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் சிறீலங்கா அரசு பொருண்மிய ரீதியாகப் போரை நடாத்துவதில் அதிக சிரமங்களை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையே விடுதலைப் புலிகள், புதிய நிலைகளிலிருந்து, புதிய உத்திகளுடன், பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதற்கான திட்டங்களை ஆறுதலாகவும் ஆழமாகவும் தீட்டி வருவதாக சிறீலங்கா வட்டாரங்களில் பெரும் அச்சம் எழுந்துள்ளது. சிறீலங்காவின் யாழ்ப்பாணம் மீதான ஆக்கிரமிப்புப் போரினால் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், பெண்கள் ஏன் குடும்பமாய் இருப்பவர்கள் கூட தினம் தினம் தாயக மண்மீட்புப் போரிற்கு இணைந்து கொண்டிருக்கின்றனர்.

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் தினச் செய்தியில் "எவ்வளவு இளைஞர்கள் எமது அணியில் விரைவாக சேர்கின்றார்களோ அவ்வளவு விரைவில் எதிரியை தமிழீழ மண்ணில் இருந்து ஓட விரட்டி அடிப்போம்" எனக்கூறி விடுத்த தேசக் கடமைக்கான அழைப்பை ஏற்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், உயர்பீட மாணவர்கள் எனப் பல தரப்பினரும் விடுதலைப் புலிகளுடன் இணைகின்றனர்.

இந்நேரத்தில் புகலிட நாடுகளில் வாழும் தமிழீழத்தவர்களுக்கு எமது தேசியத் தலைவர் விடுக்கும் செய்தி "மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் எவ்வித உதவியுமின்றி ஒரு இனஅழிப்புப்போரை நாம் தனித்து நின்று முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான நேரத்தில் உலகத்தமிழினத்தின் உதவியையும், ஆதரவையும் நாம் வேண்டி நிற்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் எமது உரிமைப் போருக்குக் குரல் கொடுப்பதுடன் தம்மாலான உதவிகளையும் செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்....."தேசியத் தலைவர் அவர்கள் புகலிட வாழ் தமிழீழத்தவர்களுக்கு உள்ள தார்மீகக் கடமையை தமிழீழத்தின் விடிவிற்காய் மரணித்தவர்களை நினைவுகூர்ந்த நாளில், சகலருக்கும் உணர்த்துகின்றார். எனவே காலம் கடந்துவிட முதல் தமிழீழ மக்கள் முழுப்பேரும், நாம் எமது விடுதலையை வென்றெடுப்பதற்காக என்ன செய்தோம் என ஒவ்வொருவரும் கேட்போமானால் இதற்கான விடை தேசியத் தலைவர் அவர்கள் விடுத்திருந்த கோரிக்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கப்படுவதாய் இருக்கும். எனவே தாயகத்தில் எமது முழுத் தமிழீழ சமூகமே மண்மீட்புப் போரில் ஈடுபடத் தொடங்கியுள்ளதால், இறுதி இலட்சியமாம் தமிழீழம் என்ற உயிர்மூச்சுடன் காவியமாகி விட்ட ஆயிரமாயிரம் மாவீரர்களது கனவை நனவாக்க எல்லோரும் ஒன்றாய் இணைவோம். குரல் கொடுப்போம்!

**இடம் பெயர்ந்த 500,000 மக்களையும் உணவு மருத்துவ வதிவிட அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி அவர்களை இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி நகர வைக்க சிறீலங்கா திட்டம் தீட்டுவதாகவும் தெரிய வருகிறது. அத்துடன் சிங்களக் காடையர்களை ஆயுதமயப்படுத்தி யாழ்குடாநாட்டில் குடியமர்த்தி இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களை தன் மயப்படுத்தலாம் எனவும் சிறீலங்கா சிந்திப்பதாக தெரிகிறது.**

# வழி

மூன்று நான்கு நாட்களாகத் தூக்கமில்லை. ஒன்றிலும் ஆர்வமில்லாமலிருந்தது. ஆழ்ந்த யோசனையில் இருந்தான். வீடுவாசல், சொத்து, வளவு எல்லாத்தையும் இழந்தாச்சு. இப்ப இரவல் கோடியில் தஞ்சம் இதுவும் எத்தினை நாளைக்கு என்ற குழப்பம்.

இப்ப இந்தக் குழப்பமெல்லாம் தீர்வதுபோல ஒரு உணர்வு. ஆனால் இன்னொரு எண்ணம் மண்டைக்குள் குடைகிறது.

"சீ, எங்கடை மண்ணைப் பிடிக்கிறதுக்காக எவ்வளவு சிரமப்படுகிறான் எதிரி? எவ்வளவு இழப்புக்களையும், உயிர்களையும் கொடுத்தும் எங்களை அடிமைப்படுத்த அவன் படுகிறபாடு. ஏனிப்பிடி ஒருவெறி எதிரிக்கு?"

"அந்நிய மண்ணைப் பிடிக்கிறதுக்கு எவ்வளவு விலை கொடுக்கிறான் எதிரி? ஏன் எங்கட சொந்த மண்ணை மீட்க நாங்கள் பின்னிற்கிறம்? சீ, எவ்வளவு முட்டாள் தனமாக இவ்வளவு நாளும் இருந்திருக்கிறோம். முதலே இதையோசித்து ஒழுங்கா ஏதாவது செய்திருந்தால் இவ்வளவு வாலாட்டுவானோ?"

அவனுக்குத் துக்கமும், தன்னை நினைக்க ஆத்திரமும் வந்தது. என்றாலும் அம்மாவின் ஞாபகமும் தம்பிமாரின் நினைவும் ஏதோ செய்தது.

இப்படிப் பார்த்துப் பார்த்துத் தானே இப்ப குடும்பத்தோடேயே ஊரை விட்டு ஓடிவந்தது. இனியும் பொறுத்தால் இங்கையும் எதிரி வருவான். பிறகு, எங்க போறது?

அவன் தீர்க்கமான முடிவுக்கு வந்தான்.

"எதிரியைக் கலைக்கிற கைகளில என்ரை கையும் இரண்டாக இருக்கட்டும். இந்த மண்ணை மீட்கிறதுக்கு என்ர உயிரும் ஒன்றாகட்டும்."

அம்மாவின் கையில் கிடைத்த கடிதத்தில் இப்படி எழுதியிருந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இழப்புகளுக்கு அப்பால்....

"டேய்! ஏன்ரா பனிக்கை கிடக்கிறாய். எழும்பி உள்ளுக்கை படன் ". அப்பரின் குரல் அகோரமாய் ஒலித்தது.
"சும்மா கிடவணை நித்திரை வரேல்லை மகன்காறன் பதிலளித்தான்.
"கடுமையா யோசிக்கிறாயாக்கும். அதுதான் நித்திரை வரேல்லைப் போல "
"பாடுபட்டு உழைச்சு, கஸ்ரப்பட்டுச் சேர்த்து வாங்கின காணி, கட்டின வீடு எல்லாத்தையும் விட்டிட்டு வந்தா யோசிக்காம இருக்க ஏலுமோ ".
அவர் தனக்குத் தானே கூறிக்கொண்டது, இவனுக்குத் தெளிவாகவே கேட்டது. குவைத்துக்குப் பறந்து போனதும், உழைத்துச் சேமித்ததும் கடையாய், வீடாய் நிமிர்ந்ததும் எல்லாம் ஒரு பொழுதில் கரைந்து போனாலும்கூட, நம்பிக்கை தளரக் கூடாது என்பதற்காக தந்தை கூறிய வார்த்தைகள் இவனுக்கும் சரியென்றே பட்டது. எனினும் அதை அப்படியே ஒப்புக்கொள்ள மனமின்றி,
"அந்நிய இடத்தில் இருந்து ஓடி வாறது

**"வெட்ட வெட்ட முளைவிடும் வாழை, குலை ஈனும் வரை தன் முயற்சியைத் தொடரும். வாழையடி வாழை போல் இம் மண்ணில் எமது சந்ததி வாழுமடா"**

"இருக்க ஏலாதுதான். ஆனா அதுக்கென்ன செய்யிறது. ஊரோட ஒத்ததுதானே "" தந்தையின் ஆறுதல் மொழிகள் செவிப்பறை வழியால் மண்டைக்குள் புகுந்தது. அவன் படுத்திருந்த வாங்குக் கட்டிலைத் தூக்கிக் கொண்டு விறாந்தைக்குள் புகுந்தான். ஆர்ப்பிக்கோ மெத்தையுடன் கூடிய கட்டிலில் உறங்கிய நாட்கள் மனத்திரையில் பளிச்சிட்டது.
"எடேய் ஒண்டுக்கும் கவலைப்படா தையடா. 58-ல் வியாங்கொடயிலிருந்து உடுத்த உடுப்போடதான் கப்பல் ஏறினனான். பிறகும் 77-ல் வத்தளையிலிருந்து வெறுங்கையோடதான் யாழ்ப்பாணம் வந்தனான். செத்தா போனன். சீவிச்ச நாங்கள்தானே ."
சுருட்டுப் புகையைக் காறித் துப்பியபடி வேறு. சொந்த இடத்தில இருந்து அகதியாகிறது எண்டால்....அதோட சொத்தும்".....அவன் இழுத்தான்
"உன்ரை சொத்து என்ன ஒரு ஐந்து லட்சம் வருமே. உங்க தருமண்ணையைப் பார்—அவற்ரை சொத்து குத்துமதிப்பாய் பார்த்தாலும் பதினைஞ்சு லட்சம் தேறும். சொக்கலிங்கத்தார் ஆறு கார் வைச்சு ஓடித் திரிஞ்சவர். கடைசியா அவரும் கால்நடையாய்த்தானே வந்தவர்".
"ஊர்க் கதை எனக்கு ஏன்? எனக்கு என்ரை சொத்துப் பெரிசு".
"உனக்கு இப்ப என்ன, வலிகாமத்தில இரண்டு பரப்புப் போனதுக்காக யோசிக்கிறாய். வன்னியில கொம்மாவுட காணி பத்து ஏக்கர் கிடக்கிறதை மறந்து போனாய் போல"
முத்தையன்கட்டுக் குளத்துக்கரையில் மிளகாய்த் தோட்டமாய் விரிந்த நிலப்பரப்பு கண்ணில் விரிந்தது. காலை விடியும் என்ற நம்பிக்கையுடன் அவன் கண்களை மூடி உறங்கத் தொடங்கிவிட்டான் என்பதை அவனது குறட்டை ஒலி உணர்த்தியது.

"எங்கட சனத்தை அசைக்க ஏலாது மச்சான்" தெருவழியே போய்க் கொண்டிருந்த ஒருவர் தெரிவித்தார்.
"வேரோட பிடுங்கி எறிஞ்சது மாதிரி சனமெல்லாம் தெருத்தெருவாய் திரியுது. நீயென்னடாவெண்டால் அசைக்கேலாது எண்டுறாய்".
மற்றவரின் மறுமொழி சற்றுச் சூடாக எதி–ரொலித்தது.
"உண்மைதான், இஞ்சபார் என்ன நடக்குதெண்டு". முதலாமவர் சுட்டிக்காட்டிய திசை வழியில் பார்வை திரும்பியது.
நடுத்தர வயதுடைய ஒருவர், கத்தியால் சில தடிகளைச் சீவிக்கொண்டிருந்தார். இளைஞன் ஒருவன் நிலத்தில் துளை போட்டுக் கொண்டிருந்தான். அப்பால் இரு பெண்கள் தென்னோலைகளில் கிடுகு பின்னிக்கொண்டிருந்தனர். குடிசையொன்றை அமைப்பதில் ஒரு குடும்பம் தீவிரமாகி இருக்கிறது என்பது பார்த்த மாத்திரத்திலேயே பளிச்சிட்டது.
"எட எங்கட தருமண்ணை மாதிரிக் கிடக்கு".
"ஓமோம். அவர்தான். கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில என்ன

**"எங்கட சனத்தை அசைக்க ஏலாது மச்சான்" தெருவழியே போய்க்கொண்டிருந்த ஒருவர் தெரிவித்தார் "வேரோட பிடுங்கி எறிஞ்சது மாதிரி சனமெல்லாம் தெருத்தெருவாய்த் திரியுது நீயென்னடாவென்றால் அசைக்கேலாது எண்டிறாய்"**

மாதிரி வீடு. எத்தினை பரப்புத் தோட்டக் காணி. எப்படி இருந்த மனிசன்".
"கண்டிட்டம், சரியில்லை வாமச்சான். கிட்டப் போய் கதைச்சிட்டுப் போவம்".
"அதுக்கென்ன" என்றபடியே, சைக்கிளை விட்டிறங்கி உருட்டிக்கொண்டு வீதியைக் கடக்க எத்தனித்தனர்.
அது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. சனம் சாரி சாரியாகப் போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு சைக்கிளிலும் ஒரு லொறியில் ஏற்றக்கூடிய சாமான்களுடன் ஆட்கள் போய்க்கொண்டிருந்தனர். தளபாடங்கள் முதல் கோழிக்கூடு வரை, குளிர்சாதனப் பெட்டிமுதல் மின்விசிறி வரை, ஆட்டுக்கல்லு– அம்மி முதல் இடியப்ப உரல் வரை பொருட்களைச் சுமந்தபடி வாகனங்கள் ஊர்ந்து கொண்டிருந்தன.
"கரண்டைக் கண்ணால கண்டே வரியம் அஞ்சு முடிந்து போச்சு. சனம் இன்னும் பிரிட்சையும், பானையும் கைவிடேல்லை பாத்தியே".
"எடேய் இத்தனை ஷெல் அடியுக்குள்ளையும், இவ்வளவு கெடுபிடியிக்கையும் தப்பியொட்டி வாழுவம் எண்ட நம்பிக்கை தான்ரா பெரிசு. அதாலதான் சனம் இதுகளையெல்லாம் கைவிடாமற் கொண்டு போகுது கண்டியே".
"சனம் ஏன் கொண்டு போகுதோ தெரியா. ஆனா உன்ரை விளக்கம்... அவன் முடிப்பதற்கிடையில் ஒரு இடைவெளி வரவே வீதியைக் கடந்து தருமண்ணையிடம் சென்றனர்".
"என்ன தருமண்ணை...என்ன மாதிரி வந்தியள்".
"வேற என்ன மாதிரி எல்லாரையும் போலத்தான். இந்த மாடு கண்டுகளையும் ஆடுகளையும் கொண்டாறதுக்கிடையில் சீயெண்டு போச்சு. அது கிடக்க நீங்கள் என்ன மாதிரி".
"இப்பதான் நாவற்குழியைத் தாண்டி வாறன். கைதடிக்கு இங்காலவர இவரைக் கண்டாப்போல கதைச்சுக்கொண்டு வந்தம்".
"என்ன அண்ணை கொட்டில் போடப்போறியள் போல".
"இதிலையும் எத்தினை நாளைக்கு இருக்கமுடியுமோ தெரியாது. ஆனா இருக்கும் வரையும் தலை சரித்துப் படுக்கவும், அடுப்பு நெருப்பு மூட்டவும் ஒரு கூரை வேணும்தானே".
"அது மெய்". என்று உச்சரித்து முடிப்பதற்கு இடையில் எறிகணையொன்று ஏவப்படும் இடியோசை கேட்டது.
"விழுந்து படுங்கோ". என்ற குரல் ஒலிப்பதற்கு இடையில் அனைவரும் மண்ணோடு மண்ணாக ஒட்டிக்கிடந்தனர். சுமார் ஐநூறு யார் தூரத்திற்கு அப்பால் அது விழுந்து பெரும் ஓசையுடன் வெடித்தது. அடுத்தடுத்து மேலும் இரண்டு குண்டுகள் அதே இடத்தில் விழுந்து வெடித்தன. பெரும் புகாரும், தூசு மண்டலமும் எங்கும் பரந்தது.
"கருங்காலித் தண்டுக்கு நாணாத கோடாலி இருங்கதலித் தண்டுக்கு நாணுமே". என்று பாட்டிசைத்தபடி தருமண்ணா எழும்பிப் புழுதியைத் தட்டிவிட்டுக் கொண்டார்.
"வெட்ட வெட்ட முளைவிடும் வாழை, குலை ஈனும் வரை தன் முயற்சியைத் தொடரும். வாழையடி வாழைபோல இம்மண்ணில் எமது சந்ததி வாழுமடா".
"எங்கடை சனத்தை ஒருத்தராலையும் அசைக்கேலாது". இருவரும் ஏக காலத்தில் உதடுகளை அசைத்தனர்.

# மண்ணின் குரல்...

"ஆறு பெருகி வரும்போது மண் வெட்டியால் மண்ணை வெட்டிப் போடுவதால் கட்டுப்படுத்த முடியாது போகலாம். ஆனால் கூடை கூடையாகப் பெருமளவு மண் கொட்டப்படும் போது, ஆற்று வெள்ளமும் அடங்கிப் போவது தவிர்க்க முடியாதே"
இவ்வாறு, சந்தையில் மரக்கறி வாங்கிக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர் தெரிவித்தார்.
"அது மெய்தான். ஆனா அதுக்காகப் பாடுபட எல்லாரும் வரவேணுமே" இது, மற்றவரின் ஆதங்கம்.
"அவை இவை எல்லாம் என்ன செய்யினம் எண்டு பார்த்துக் கொண்டு நிக்கிறதை விட்டிட்டு, நான் என்ன செய்யலாமென யோசிச்சு, ஒவ்வொருதரும் பாடுபட்டா எல்லாம் சரிவரும்" பெரியவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியதைத் தொடர்ந்து....
"உவவின்ர பம்மாத்துக்கள் உலகத்துக்கு இன்னும் விளங்கேல்லையோ" அடுத்த கேள்வியொன்றுக்குத் தாவினார் அவர்.
"உலகமென்ன உலகம். விழுந்த பாட்டுக்குக் குறிசுட்டிட்டுப் போற மாதிரித்தான் உலகம் செயற்படும். நாங்கள் பலத்தோட உறுதியோட நிண்டா, உலகம் நாங்கள் சொல்லுகிறதைக் கேக்கும்". அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"நல்ல புதுப் புது ஆயுதங்களை வாங்கினா, உயிரிழப்புக்கள் எங்கட பக்கத்தில வராம, அவங்களுக்குப் பெரிய சேதம் ஏற்படுத்தலாமெண்டு நினைச்சன்.



அதுதான்"
"எட தம்பி......ஆயுதங்களை விலை குடுத்து வாங்கலாம். அல்லது அடிச்சுப் பறிக்கலாம். அது வேறவிசயம். ஆனா ஆள் பலத்தை விலைகுடுத்து வாங்கவும் ஏலாது. வலுக்கட்டாயமாய் பிடிச்சு வைக்கவும் ஏலாது கண்டியோ" பெரியவர் கூறினார்.
மின்னல் கீற்றுப் போல சிந்தனையில் ஒரு பொறி தட்டியது. படைபலம் விலை கொடுத்து வாங்க முடியாததுதான். விடுதலையின் தேவையை.....எமக்கென்றொரு நாடு இருக்க வேண்டியதன் அவசியத்தை......இந்தப் போராட்டத்தின் நியாயத்தை......உணர்வு பூர்வமாக ஏற்று நாங்கள் போராட முன்வராதவரை எமது மக்கள் விடுதலைக்குத் தகுதியற்றவர்களாகவே இருந்து விடநேரும்.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் சிந்தப்பட்ட வியர்வைத் துளிகளும் சொரியப்பட்ட இரத்தமும் அனுபவித்த வேதனைகளும் அர்த்தமுடையதாக வேண்டுமானால், அதற்கு இன்றைய சந்ததி தனது தோள்களில் பாரம் தூக்க முன்வர வேண்டும்.
சந்தையில் வாங்கிய பொருட்களை விடவும், மனம் பாரத்தால் கனத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசத்தின் குடிமக்களுக்கு ஒரு புலிவீரனிடமிருந்து...

இதயத்தைப் பிழியும் இழப்புக்களால் உயிர் வதங்கியவர்களை நான் சந்தித்திருக்கின்றேன். தென்தமிழீழத்தைச் சேர்ந்த எம் தோழர்கள் கதை கதை யாகச் சொன்ன, ஊர் விட்டுப் பிரியும் துயரங்களை நான் கேட்டிருக்கிறேன். அவர்களின் உள்ளத்து வேதனைகளை நான் விளங்கிக் கொண்டேனே அல்லாமல், அவற்றை என்னால் ஆத்மார்த்தமாக உணர்ந்து கொள்ள முடிந்ததில்லை.

-இனியவன்-

**பாசத்துக்குரிய என் பெற்றோர்களே!**

**பிரியத்துக்குரிய என் சகோதரர்களே!**

**அன்புக்குரிய என் உறவுகளே!**

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில், ஆர்.பி.ஜி சிலைக்குப் பக்கத்தில் உள்ள மாடிவீட்டின் தண்ணீர் தாங்கிக்குக்கீழே 'சூரியப் பிரகாசம்' சமர்முனையின் சண்டை அரணொன்றிலிருந்து களம் ஓய்ந்து துப்பாக்கிச் சுடுகுழல்களின் சூடு தணிந்துள்ள ஒரு மாலைப்பொழுதில், எனக்குக் கிடைத்த இந்தச் சிறுபொழுது அவகாசத்தில் 'ஜி3ஏ3'யை மடியில் வளர்த்தி, அந்தக் குழந்தையின் ரவைக்கூட்டில் வைத்து உங்களுடைய படைவீரன் உங்களுக்கு எழுதுகிறேன்.

எனக்கு முன்னால் எதிரி, அதோ அந்த ஆலமரத்தின் இலைகளுக்குள் குறிபார்த்துச் சுடுபவன் காத்திருக்கிறான்! இரைதேடும் வல்லூறாய் இலக்குத்தேடி, 'சினைப்பர்'களின் தொலைவுக் குறிகாட்டிகளில் வைத்த கண் வாங்காமல், அவனைப்போல இன்னும் பலர் மறைவுகளுக்குள் காத்திருக்கிறார்கள். அதோ அந்த பனங்கூடலின் கீழ், அதோ அந்த வீடுகளுக்கிடையில், இந்த தோட்டவெளிக்குள்ளும், வாழைகளுக்கு அப்பால்–கோண்டாவில் குறுக்கு வீதியின் ஓரத்தோடு–பகைவனின் தாக்கி நகரும் முன்னணிப் படைப்பிரிவுகள் நிலைகொண்டுள்ளன, 'டாங்கி'களும், கவசவண்டிகளும், மோட்டார்ப் பீரங்கிகளும் அணிவகுத்துள்ளன. இதேபோல யாழ்ப் பாண மாநகரப் பிரதேசத்தைச் சூழ அதன் விளிம்போடு கொக்குவில் கிழக்கிலிருந்து கொழும்புத்துறைக் கடல் வரை, தனது முன்னணித் தாக்குதலணியை சிங்களப்படை நகர்த்தி நிறுத்தியிருக்கிறது.

இந்த அரைவட்ட வியூகத்தின் எந்த ஒரு முனையிலிருந்தும், அல்லது பல முனைகளிலிருந்தும், அல்லது இன்னொரு புதிய உபாய முன்னேறுகையூடு–யாழ் நகரை நோக்கிய கடைசிப் படைநகர்த்தல் இனி எந்த வேளையிலும் ஆரம்பிக்கலாம்!


இந்த வலிகாமச்சமரின் இராணுவப் பரிமாணம் பெரியது.

இயலுமானவரைக்கும் நாங்கள் தடுத்தோம், முயலுமானவரைக்கும் நாங்கள் முயற்சித்தோம், வெளிமாவட்டப் படையணிகளையெல்லாம் வலிகாமத்திற்குள் வரவழைத்தோம், காயம்பட்டுக் களம்விட்டுப் போனோரையும், காயம் ஆறுமுன்னே களத்துக்கு மீள்வித்தோம், வீரர் விழுந்து அரண்கள் உடையவும், மீளவும் வளைத்து வியூகமிட்டோம், என்ன செய்ய?...... ஆட்பல சக்தியும், படைக்கல சக்தியும் அவனுக்கு அதிகம். காட்டாற்று வெள்ளமென நகர்ந்த பகைவனை அணைபோட்டுத் தடுக்க கூடிய வளம் போதாமையால், நேரே திராய் மோதி வழிமறி க்கும் போர் முறையில் எம்மால் வெல்ல முடியவில்லை, போர் 'டாங்கி'களின் இரும்புச் சங்கிலிகளால் எம் தாயக மேனியைப் புண்ணாக்கிக் கொண்டு, சிங்களப் பகைவன் இன்று முன்னேறி வந்து விட்டான்.

இந்த ஊர், ஊரின் எழில், அழகான தோட்ட வெளி, எக்காலமும் செழித்திருக்கும் இதன் மதாளிப்பு, அதில் மிளிரும் முயற்சி, அறிவுழைப்பாலும் உடலுழைப்பாலும் செழித்த வாழ்க்கை, வாழ்வின் உயர்நிலையைப் பிரதிபலிக்கும் குடிமனைகள், மனநிறைவோடும், நிறைமகிழ்வோடும் வாழ்வசைந்த காலங்கள், 'அண்ணா!' என்றென்னை ஆசையோடு சுற்றிவந்த சிறியோர்கள், 'பெற்றவர்களாகிப்' பரிவோடு ஆதரித்த பெரியோர்கள், என்னில் அன்பு செலுத்திய மக்கள், நான் தினம் வலம்வந்த சாலை, அந்தக் குச்சொழுங்கை, அதிலிருந்த எம்முகாம், கூடிவாழ்ந்த தோழர்கள், கும்மாளமடித்த கோலங்கள், 'சூரிய' எரி 'கதிர்'கள் பொசுக்கி விடாமல், தம்மையே தடுப்பாக்கி மக்களைக் காத்த வீரர்களுள் ஒருவனாய் – காலிரண்டையும் இழந்து களப்பலியாகிய என் நண்பன் கிங்ஸ்லி,........

விழி மடல்களுக்குள் நீர் நிறைகின்றது, அது என் ஆன்மாவின் குருதி. காலநதியில் ஓடிக் கரைந்து போன அந்தப் பழைய நாட்களின் நினைவுகள், எண்ண அலைகளில் மிதந்து இன்று என் ஆன்மாவின் சுவர்களில் மோதுகின்றன. நெஞ்சத்தில் சுமை, உள்ளத்தில் கனம், இன்னதென்று சொல்ல முடியாத ஒரு உணர்வுக் கொதிப்பு, வார்த்தைகளால் விபரிக்க முடியாத ஒரு தவிப்பு.

இதயத்தைப் பிழியும் இழப்புக்களால் உயிர் வதங்கியவர்களை நான் சந்தித்திருக்கின்றேன். தென்தமிழீழத்தைச் சேர்ந்த எம் தோழர்கள் கதை கதையாகச் சொன்ன, ஊர் விட்டுப் பிரியும் துயரங்களை நான் கேட்டிருக்கிறேன். அவர்களின் உள்ளத்து வேதனைகளை நான் விளங்கிக் கொண்டேனே அல்லாமல், அவற்றை என்னால் ஆத்மார்த்தமாக உணர்ந்து கொள்ள முடிந்ததில்லை. ஆனால் இன்று – அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கக் கூடிய அதே மனப்பாதிப்புகள் என்னையும் வாட்டுகின்றபோதுதான் – அந்த உணர்வுத் தாக்கங்களின் ஆழமான சோகப்பரிமாணங்கள் எனக்கு முழுமையாகப் புரிகின்றன.



நான் நம்புகிறேன் – தனித்துவமான பண் பாட்டுக் கோலங்களையும், சமூக–பொருண்மிய வாழ்வமைப்புக்களையும் கொண்ட மக்களாக விளங்கி – ஆழ வேரோடி, அகல விழுதெறிந்து – ஆண்டு பல நூறாகப் புரையோடி வாழ்ந்த பூர்வீக நிலம் விட்டு, இடம் பெயர்ந்து சென்ற ஒவ்வொரு வலிகாமக் குடிமகனது மனதுக்குள்ளேயும் இத்தகைய ஆன்ம வேதனை நெருடும், நெருட வேண்டும்.

அந்த நெருடல் கோபாவேசமாக மாற வேண்டும். அந்தக் கோபாவேசத்திலிருந்து மனவுறுதி பிறக்க வேண்டும். அந்த மனவுறுதி செயலாக்கத்தைப் பெற வேண்டும். அந்தச் செயலாக்கம் – பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து எம்மைப் பயந்தோட வைத்த பகைவர்களுக்குப் பாடைகட்டும் போர்க்களமாய் வெடிக்க வேண்டும்.

ஆண்டு பல நூறாகப் புரையோடி வாழ்ந்த பூர்வீக நிலம் விட்டு, இடம் பெயர்ந்து சென்ற ஒவ்வொரு வலிகாமக் குடிமகனது மனதுக்குள்ளேயும் ஆன்ம வேதனை நெருடும், நெருட வேண்டும். அந்த நெருடல் கோபாவேசமாக மாற வேண்டும். அந்தக் கோபாவே சத்திலிருந்து மனவுறுதி பிறக்க வேண்டும். அந்த மனவுறுதி செயலாக்கம் பெற வேண்டும். அந்த செயலாக்கம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து எம்மைப் பயந்தோட வைத்த பகைவர்களுக்குப் பாடை கட்டும்.

யாழ்ப்பாணச் சமருக்கென மட்டக்களப்பிலிருந்து வரவழைக்கப்பட்ட படையணியைச் சேர்ந்த ஒரு நண்பன் என் நினைவில் நிலைத்துவிட்டான்.

பீரங்கிகளின் முழக்கம்! 'டாங்கி'களின் உறுமல்! சூழவும் வெடியதிர்வுகள்! இரத்தச் சிதறல்கள்! உக்கிரமான சண்டை! எதிரி முன்னேறத் தொடங்கிய ஓர் அதிகாலை! 120 எம். எம். பீரங்கியின் எறிகணையொன்று அந்தப் போர் வீரனைத் தூக்கியெறிந்தது. காலுடைந்து, கையுடைந்து, இடுப்பில் எலும்புடைந்து குருதியில் தோய்ந்து விழுந்தவனை, காவுங்குழு வீரர்கள் பின்னுக்கு எடுக்கத் தூக்கிய போது, **நினைவிழந்த நிலையிலும் அவன் "யாழ்ப்பாணத்த விட்டிடாதேங்கோடா! யாழ்ப்பாணத்த விட்டிடாதேங்கோடா!!" என்று கத்தினான். இப்போதும் என் காதுகளில் அசரீரியாக முழங்கிக் கொண்டேயிருக்கின்றது அந்தக் குரல்.**

அன்புக்குரிய எம் மக்களே! யாழ்ப்பாணத்தை நாங்கள் விட்டுவிடப்போவதில்லை. எல்லோரும் கதை முடிந்தது என நினைத்திருக்கும் வேளையில்தான், கதையே தொடங்கப் போகின்றது யாழ்ப்பாணச் சமரின் போர் முறை, இனி ஒரு மாறுபட்ட புதிய கட்டத்திற்குள் பிரவேசிக்கின்றது. இனி அதன் வடிவம் வேறு, பரிமாணம் வேறு, போராட்டம் பெறுகின்ற இன்னொரு பரிமாணமாக அது விரியப்போகின்றது. போரியல் ரீதியில் முற்றிலும் சாதகமான ஒரு களச்சூழ்நிலை, இப்போது வலிகாமத்திற்குள் கருக்கொண்டிருக்கிறது. இந்த ஏது நிலையை நாம் எப்படிப் பயன்படுத்தப் போகின்றோம் என்பதில்தான், போரின் முடிவு தங்கியிருக்கின்றது. அந்தப் போர் முடிவில்தான்– தமிழினத்தின் வாழ்வும் சாவும் தங்கியிருக்கின்றது.

வரலாற்றின் – கிடைத்தற்கரிய – இந்தக் கால கட்டத்தில், தேசத்தின் ஒவ்வொரு தனிக்குடிமகனை நோக்கியும், போர் முனையிலிருந்து, உங்களின் படைவீரன், மிக நெருக்கமான உரிமையுடன் அறைகூவல் விடுக்கிறேன். இளைய பரம்பரையின் ஒவ்வொரு அங்கத்தவரையும் போருக்கு அழைக்கின்றேன். முதிய பரம்பரையைத் தோள் கொடுக்க வேண்டுகிறேன். அறிவுலக மேதைகளையும், கல்விமான்களையும்– இந்த நாளில் உங்களால் ஆற்றக்கூடிய ஆகக்கூடிய தேசப்பணியை, இந்தப் போருக்கு ஆற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

போர் டாங்கிகளின் இரும்புச் சங்கிலிகளால் எம் தாயக மேனியைப் புண்ணாக்கியபடி சிங்களப் பகைவன் இன்று முன்னேறி வந்துவிட்டான்.. இந்த ஊர், ஊரின் எழில், அழகான தோட்ட வெளி, எக்காலமும் செழித்திருக்கும் இதன் மதாளிப்பு, அதில் மிளிரும் முயற்சி, அறிவுழைப்பாலும், உடலுழைப்பாலும் செழித்த வாழ்க்கை, வாழ்வின் உயர்நிலையை பிரதிபலிக்கும் குடிமனைகள், மனநிறைவோடும், நிறை மகிழ்வோடும் வாழ்வசைந்த காலங்கள்,...விழி மடல்களுக்குள் நீர் நிறைகிறது.

நன்றி.

என்றும் அன்புடன்

உங்களின் ஒரு படைவீரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என்றைக்குப் போவோம்

இளையவன்

"எப்ப ஊருக்குத் திரும்பலாம்"
"எந்த மட்டில் ஊருக்குத் போகலாம்"
"ஊருக்குப் போக கன காலம் செல்லுமோ"

"தீவுப்பக்கத்துச் சனத்தைப் போல வரியக்கணக்கில
ஊருக்குப் போக ஏலாமல் போகுமோ"

"பக்கத்து வீட்டுச் சனங்கள் ஊர் ஆட்கள்,
மற்றும் அயலவர்கள் எங்கெங்க இருக்கினம்
என்ற விபரம் தேடுவது"

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள சுமார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானவர்களின் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகளில் சில தான் இவை.

ஊருக்குத் திரும்ப வேண்டும்.
ஓலைக் குடிலில் வாழ்ந்தவர்கள் முதல் மாடி மனைகளில் வாசம் செய்தவர்கள் வரை பலருக்கும் இருக்கின்ற பொதுவான ஆதங்கம் இது.

அன்றாடம் காய்ச்சிகளாக உடலுழைப்பைத் தினமும் விற்று வாழ்ந்தவர்கள் தொட்டு, அரசாங்க ஊழியர்கள் அறிவு ஜீவிகள் வரை அனைவருக்கும் இருக்கின்ற ஏக்கம் இது.

பால் மணம் மாறாத பாலகர்கள் முதல் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இருக்கிற தாகம்.
கட்டையில் போவதற்காகக் காத்திருக்கிறேன் எனக் கூறும் முதியவர்கள் கூட, சொந்த வீட்டில் மீண்டும் காலடி வைக்கத் துடிக்கின்றனர்.

தவழ்ந்து திரிந்த மண்ணில் மெல்ல மெல்ல அடியெடுத்து நடை பழகிய நிலத்தில் மீண்டும் அடியெடுத்து வைக்க ஆசைப்படுவது இயல்பானது, தவிர்க்க முடியாதது.

முப்பாட்டன் காலத்திற்கும் முன்பு தொட்டு இன்று வரை ஓடித்திரிந்தும், ஆடி மகிழ்ந்தும் திரிந்த பூமியில் மீண்டும் வாழ வேண்டும் என ஏங்குவது நியாயமானது தேவையானது.

அப்புவும் ஆச்சியும் கூடி மகிழ்ந்திருந்த மண்ணில் குலக்கொழுந்துகளாய் குடியிருந்த காணிகளுக்கு மீண்டும் நாம் போக வேண்டும் என்பது சாத்தியமானது, அவசியமானது.

எனவே ஊருக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படுவதையும் அதற்காக அவசரப்படுவதையும் எவரும் தவறென்று கூற முடியாது.

ஆனால் "எப்ப ஊருக்குப் போவது என்பதை விடவும் எத்தகைய சூழலில் ஊருக்குப் போக வேண்டும்" என்பதுவே முக்கியமானது.
சிங்கள இராணுவத்தின் சப்பாத்துக் கால்களுக்குள் எமது அன்னை மண் மிதிபட்டும் நசிபட்டும் துடித்துத் துவழ்கிறது.
அந்த மண்ணில் கைகட்டி, வாய் பொத்தி எதிரிக்குச் சேவகம் செய்தாயினும் உயிர்வாழலாம் என்று எண்ண முடியுமா?

ஆக்கிரமிக்கவந்த அந்நியருக்குப் புதைகுழி வெட்டி, கொண்டு வந்து குவித்திருக்கும் படைக்கலங்களை எமது மண்ணின் பாதுகாப்புக் கவசங்களாக்கி, பலாலி படைத் தளத்திற்கு மூடு விழா நடத்தி விட்டுத்தான் இனி நாங்கள் எங்கள் வீட்டு வளவின் எல்லைக் கதிகால்களை நடமுடியும். அப்போதுதான், எதிரிகள் ஏவி விடும் எறி–கணைகள் பற்றிய அச்சமின்றி, அந்நிய விமானங்களின் உறுமுதல் பற்றிய பதற்றமின்றி எங்கள் குடிசைகளில் நாங்கள் நிம்மதியாக நீட்டி நிமிர்ந்து உறங்க முடியும்.

எனவே, எப்போது ஊருக்குப் போவது என்று அவசரப்படுவதை விட்டுவிட்டு, அதற்கான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் இப்போது ஈடுபடுவதுதான் உத்தமமானது. அதாவது, படையணியில் நாங்கள் போய்ச் சேருவது முதல் தமிழர் படைப்பலத்தின் பெருக்கத்திற்கு உற்ற வழிகளில் உதவ வேண்டும். எங்களை நிலை நிறுத்திக் கொள்வதும், அச்சமுற்ற இளைஞர் சமுகத்திற்கு உற்சாக மூட்டி உத்வேகம் அளிப்பதும், நாங்கள் வீடு திரும்புவதை விரைவுபடுத்துவதற்காகவே இருக்கும்.

## இன்றைய நாட்களில்

"அழுது குழறிக் கூட்டிக்கொண்டு வந்தியே.. இப்ப என்னத்தைக் கண்டிட்டாய்...சொல்லு பாப்பம்"

சைக்கிளின் மிதியடிகளை மிதித்துக் கொண்டிருந்த வாலிபன் ஒருவன் கேள்வி எழுப்பினான்.

அவனது சைக்கிள் முன் பக்கத்தில் நடுத்தர வயதுடைய மாது ஒருத்தி அமர்ந்து இருந்தாள்.

பின் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த உரப்பைகளும், அவர்கள் வந்துகொண்டிருந்த கோலமும், இடம் பெயர்ந்து வந்துகொண்டிருக்கின்றனர் என்பதை உணர்த்தப் போதுமானதாக இருந்தது.

தெருவின் சன நெருசல் சைக்கிளின் வேகத்தை மட்டுப்படுத்திக் கொண்டிருந்தது.

"நான் மட்டுமே அழுது குளறினனான். அங்க எத்தின தாய்மார் என்னைப் போல நிண்டவை தெரியுமே" அந்தப் பெண் பதிற் கேள்வி போட்டாள்.

"ஓமோம் எனக்குத் தெரியாததே. இயக்கத்தில போய்ச் சேர்ந்திட்டா உடன செத்த வீடு கொண்டாடிறது தானே அம்மாமாரின்ர வேலை. இயக்கத்தின்ரை காரியாலயங்களிலை போய் கத்திக்குளறுறதும், கெஞ்சிக் கூத்தாடுறதும்... என்ரை பிள்ளைய மட்டும் விடுங்கோ என்று அடம் பிடிக்கிறதும்" அவன் கூறிக்கொண்டே போனான்.

"உன்னை வெளியில எடுக்கிறதுக்காகப் பட்ட கஷ்டத்தைப்பற்றித் தெரியாமல் கனக்கக் கதைக்கிறாய்"

"உது தெரியாதே. ஒவ்வொரு முகாம்களாய் ஏறி இறங்கினீர்கள்...இப்ப பார் ஊர் முழுக்க ஓடவேண்டியதாய்ப் போய்ச்சே"

"நீ வராமல் இருந்திருந்தால் ஓட வேண்டி வந்திருக்காதோ?" "நான் மட்டுமல்ல என்னைப் போல இருக்கிற ஒவ்வொருத்தரும் மற்ற அலுவல்களையெல்லாம் விட்டிட்டு இயக்கத்தோடபோய்ச் சேர்ந்து சண்டை பிடிச்சிருந்தால் பலாலிக்குள்ளையே ஆமிக்குச் சமாதி கட்டியிருக்கலாம்." திட்டவட்டமான உறுதி அவனது குரலில் பிரதிபலித்தது.

"நீ விட்டிட்டுப் போட்டாய் எண்ட கவலையில் நான் இருக்க, ஒழுங்காய் பிள்ளையை வளர்த்திருந்தால் ஏன் அவன் இயக்கத்துக்குப் போறான் என்று வாறவை திட்டினால் எப்பிடி இருக்கும் சொல்லு பாப்பம். வீட்டிலிருந்து உதுகளைக் கேட்கிறதை விட அலையிறது சுகம் எண்டு நினைச்சுத் தானே திரிஞ்சனான்" அவள் தன் நிலையை எடுத்துரைத்தாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். அவனது பார்வையில் ஒருவித கனிவு தெரிந்தது. "எணேய் போனதெல்லாம் போகட்டும் இனிமேலும் அவையிவையின்ரை கதையைக் கேட்டுக் கலவரப்படாதை. நான் என்ரை கடமையைச் செய்ய வேணும் தடுக்காதை" அவன் கூறியது தெளிவாகக் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அவனது முகத்தில் இருந்த தெளிவும், பிரகாசமும் என்னையும் கவர்ந்து இழுப்பதாய்...

## இனவாதம் கிணறு தோண்டுகிறது

"கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல" என்பது பொருள் பொதிந்த தமிழ்ப் பழமொழி.

எதையோ சாதித்துவிடும் கற்பனையில் – என்னத்தையோ செய்ய, அந்தக் கற்பனைக்கு எதிராக – ஏதாவது வந்து தொலைக்கும் போது, இந்தப் பழமொழியைச் சொல்லி உதாரணம் காட்டுவது எமது மக்களின் வழமை.

1983 ஆம் ஆண்டு, திருநெல்வேலித் தாக்குதலில், 13 இராணுவத்தினர் செத்தனர். இதை ஒரு சாட்டாக எடுத்துக் கொண்ட அன்றைய சனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா – தமிழர்க்கு ஒரு பாடம் படிப்பிக்க முடிவெடுத்தார். தனது குண்டர் படையை ஏவிவிட்டு – இனக்கலவரம் என்ற பெயரில் – தமிழர்களைக் கொல்லவும், அவர்களது சொத்துக்களைக் கொள்ளையிடவும், எரித்தழிக்கவும் – அனுமதிப்பத்திரம் வழங்கினார். இந்த வன்செயல் மூலம் தமிழ் இனத்தைப் பணிய வைப்பிக்க முடியும் என்று ஜே. ஆர் கற்பனை செய்தார்.

ஆனால், அந்த வன்முறையின் கோரத்தையும் – அரசு கொடுத்த திட்டமிட்ட ஆதரவையும் கண்டு, தமிழ் இனம் கொதிப்படைந்தது. தமிழர்களையும் – அவர்களது சொத்துக்களையும் பகிரங்கமாக எரித்தழித்த காட்சிகளைத் தொலைக்காட்சிகள் வழியாக, தம் கண்களால் பார்த்த, உலகமக்கள் சிங்கள மக்கள் மீது சினம் கொண்டனர்.

விளைவு: சில பத்துக்கள் என்றிருந்த போராளிகளின் எண்ணிக்கையை அது பல்லாயிரமாக வளர்த்துவிட்டது. அதேவேளை சர்வதேச ரீதியாக, தமிழ் இனத்திற்கு அனுதாப அலையையும் – சிங்கள இனத்திற்கு அபகீர்த்தி உணர்வையும் அந்த வன்முறை பெற்றுக் கொடுத்துவிட்டது.

தமிழினத்தைப் பணியச் செய்விப்பதற்காக ஜே. ஆர். அரசு செய்த இனவன்முறை கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதைபோல தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தி – அதன் படைபலம் வளரவும் வழிசமைத்துவிட்டது.

இது 1995. விடுதலைப் போருக்கு முதுகெலும்பாகவும், இரத்த ஓட்டமாகவும் இருந்து செயற்படும் யாழ்ப்பாண மக்களை – படையெடுப்பு ஒன்றின் மூலம் – பணியச் செய்வித்துப் பாடம் படிப்பிக்க இன்றைய சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா முடிவெடுத்தார். தனது முப்படைகளையும் ஏவிவிட்டு – புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில் – யாழ்ப்பாண மக்களைக் குண்டுவீசிக் கொல்லவும், அவர்களது சொத்துக்களை அழித்து–இடம்பெயரச் செய்விக்கவும் அவர் அனுமதிப் பத்திரம் வழங்கினார்.

இப்போது 5 இலட்சம் மக்கள் வலிகாமத்தை விட்டு இடம்பெயர்ந்து – துயரவாழ்க்கை வாழுகின்றனர். இந்த மக்களது துன்ப–துயரங்கள் மீது கட்டி எழுப்பப்பட்ட இராணுவவெற்றியைக் கொண்டாடும் வெற்றிவிழாக்கள் பற்றி, சந்திரிகா அம்மையார் பெருமையுடன் பேசி வருகின்றார். அத்துடன் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவிகள் புரியவிடாது வெளிநாட்டு நிறுவனங்களையும் அவர் தடுத்துள்ளார். உயிர் தப்பிப் பிழைத்தலுக்கான கிளாலிப் பயணத்திற்கும் அவர் தடைவிதித்துவிட்டார். இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீது குண்டு வீசியும் வருகின்றார்.

சந்திரிகா அரசின் இந்த அடாவடிச் செயல்களைச் சர்வதேசச் சமூகமும் அவதானித்த படியே உள்ளது. சில இராசதந்திர அழுத்தங்களையும் அது மறைமுகமாகக் கொடுத்து வருகின்றது. இதேவேளை, நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்க ஒரு நாடு அவசியம், அந்த நாட்டைப் பாதுகாக்க ஒரு படை அத்தியாவசியம் என்ற உண்மையை மனப்பூர்வமாக உணர்ந்துள்ள தமிழ் இளைஞர்கள், யுவதிகள், முன்னரைவிட இப்போது பெருந்தொகையில், தமிழர்படையில் இணைகின்றனர். அத்துடன் "நாங்கள் தமிழர்கள்"–"வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் ஒன்றாகவே இருப்போம்" என்ற இன ஒற்றுமையையும் யாழ்ப்பாணச்சமர், மக்களுக்கு உண்டு பண்ணி வருகின்றது.

83ஆம் ஆண்டு இனவன்முறையின் விளைவாக தமிழினம் ஒற்றுமைப்பட்டது – தன் படைபலத்தையும் வளர்த்தது.

95ஆம் ஆண்டு யாழ்ப்பாணச்சமரின் விளைவாக தமிழினத்திடம் மேலும் ஒற்றுமை உணர்வு அதிகரித்து வருகின்றது. தமிழர் படைப்பலம் – அதிகரிக்கும் சூழலும் உருவாகி வருகின்றது. இடம்பெயர்ந்து–இழப்புக்களைச் சந்தித்த மக்கள் துன்பத்தைச் சுமக்கின்றார்கள் என்பதை எவரும் மறுதலிக்கமாட்டார்கள். ஆனால் இந்தத் துன்பங்களும் – சுமைகளும் போராட்ட வெற்றியை விரைவாக்குகின்றது என்பதையும் எவரும் மறுக்க முடியாது.

பாதிக்கப்பட்டவர்கள் துன்பத்தை அனுபவிக்கின்றனர். ஆனால், அதன் விளைவுகள் தமிழினத்திற்கு – தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குப் பாரிய நன்மைகளை வழங்குகின்றது. இது வரலாற்றிற் தவிர்க்க முடியாத ஒரு அம்சம். முடிவாகச் சொன்னால், யாழ்ப்பாணச்சமர் தமிழினத்திற்குத் தோல்வி அல்ல. 83 இன வன்செயலின் எதிர்விளைவைப் போல யாழ்ப்பாணச்சமரும்–சிங்கள அரசுக்கு–கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகவே அமையப் போகின்றது.

எமது மக்களே! நாங்கள் நம்பிக்கையுடன் செயற்படுவோம். சிங்கள இனவாதப் பூதம் தன் பேரினவாதச் செயல்களால் தனக்குத்தானே புதைகுழி அமைத்து வருகின்றது. இதில் எவர்க்கும் சந்தேகமே எழத்தேவையில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணச் சமர்

# எங்கிருந்து? எப்படி?

சூரியக் கதிர் நடவடிக்கையை அரசபடைகள் ஆரம்பித்து இன்றுடன் இருமாதங்களுக்கு மேலாகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதே சூரியக்கதிரின் இராணுவ இலக்கு என அரசு அறிவித்தது. ஆயினும், யாழ்ப்பணத்திற்கான சமரை சிங்கள அரசு, 91ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே ஆரம்பித்துவிட்டது. ஜெனரல் கொப்பேகடுவவின் தலைமையில் அது தொடங்கப்பட்டிருந்தது. பூநகரியைக் கைப்பற்றி – கொம்படிப் பாதையை மூடி யாழ்ப்பாணச் சமரைக் கொப்பேகடுவ தலைமையிலான சிங்களப் படைகள் ஆரம்பித்திருந்தன.

ஊடாக நகர்ந்து, புலிகளை இருமுனைகளிற் சண்டையிட அழைத்து, பின்னர், தமக்கு வாய்ப்பான முனையால் நகர்ந்து யாழ்நகரைக் கைப்பற்றுவது என்றும் சிங்களத் தளபதிகள் திட்டமிட்டு வைத்திருந்தனர். ஆனால்,

கட்டத்திற்கு, கடற்புலிகளால் ஆபத்து ஏற்படும் அபாயம் இருந்ததையும் சிங்களத் தளபதிகள் கவனத்தில் எடுத்திருக்கக்கூடும். எனவேதான், தோல்வியை ஏற்றுக்கொண்டு, முன்னேறிப்பாய்தலில் இருந்து பின்வாங்கி, அதில் படித்த இராணுவப்பாடங்களைப் பயன்படுத்திப் புதியதொரு நகர்வுப் பாதையைக் கண்டுபிடிக்கச் சிங்களத் தளபதிகள் முயன்றனர்.

இந்தப் புதிய நகர்வு வாய்க்காலிற்கு இரண்டு வரப்புகளை விட்டுவைக்க சிங்களத் தளபதிகள் விரும்பவில்லை. ஒரு வரப்பையே அதாவது புலிகள் போரிட ஒரு பக்கத்தை ஒதுக்கிக் கொடுக்கவே படையினர் திட்டமிட்டனர். மறுபக்க வரப்பிற்கு புலிகளை வரவிடாது பார்த்துக் கொள்ளக்கூடிய புவியியல் அமைப்பை உடைய நிலப் பகுதி ஊடாக முன்னேற இராணுவ அதிகாரிகள் திட்டம் போட்டனர்.

அச்சுவேலியில் இருந்து நாயன்மார்கட்டையும் கடந்து நாவற்குழியைத் தழுவிச் செல்லும் உப்பாற்றையும் தரவை வெளியையும் கொண்ட பெரும் வெளியை, புலிகள் வரமுடியாத வரப்பாகப் பயன்படுத்தி தங்களது நகர்வு வாய்க்காலை அமைக்க முடிவெடுத்தனர்.

ஆயினும், பலாலித்தளத்தில் இருக்கும் இராணுவ சமுத்திரத்தை அச்சுவேலி–புத்தூருக்கு நகர்த்திவிட்ட பின்னரே அங்கிருந்து, குறித்த பெருவெளியைப் பயன்படுத்தி நாயன்மார்கட்டுவரை நகர்வு வாய்க்காலை அமைத்து யாழ் நகரைக் கைப்பற்றமுடியும். இடிமுழக்கம் இராணுவ நடவடிக்கை பலாலியில் இருந்த படைவெள்ளத்தை அச்சுவேலி–புத்தூர் வரை பரவச்செய்தது. பின்னர் அங்கிருந்து சூரியக்கதிர் நடவடிக்கை மூலம் உரும்பிராய்–கோப்பாய் பகுதிகள் வரை முன்னேறி, பின்னர், கோப்பாயில் இருந்து இருபாலை, நாயன்மார்கட்டு ஊடாக கொழும்புத்துறை வரை நகர்ந்து வலிகாமம், தென்மராட்சி போக்குவரத்தைத் துண்டாடினர். இந்த நகர்வுப் பாதையால் சிங்களப் படை மேலும் ஒரு நன்மையைப் பெற்றுள்ளது. அதாவது டாங்கிகளுடன் முன்னேறிவரும் படையினரை, பாதுகாப்பாக நின்றபடி தடுத்து நிறுத்திப் போராடக்கூடிய சூழல் அமைப்பை, புலிகள் கொண்டிருக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால் வலிகாமத்தின் புவியியல் அமைப்பையும்–புலிகளின் படை பலத்திற்கு (ஆள், ஆயுதம்) இருந்த பற்றாக்குறையையும் பயன்படுத்தி யாழ்ப்பாணச் சமருக்கான போர்த்திட்டத்தைத் தீட்டி சிங்களப்படை நடைமுறைப்படுத்தியது.

புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் காரணமாக பெரும் எடுப்பில், யாழ்ப்பாணச் சமரில், வான் தாக்குதல் நடை–பெறவில்லை என்பது உண்மை. ஆயினும் வான் வழி மூலம் புலிகளின் நிலைகள் மீது போடப்படும் குண்டுகளைவிட அதிக தொகையான குண்டுகளை டாங்கிகள் மூலமும் ஆட்டிலறிகள் மூலமும் மோட்டோர்கள் மூலமும், சிங்களப்படைகள் பயன்படுத்தின.


ஆனால் மாபெரும் இடப்பெயர்வின் மூலம், ஒரு அரசியல் வெற்றியை, வலிகாமம் மக்கள் புலிகள் இயக்கத்திற்கும் – போராட்டத்திற்கும் வழங்கி ஒரு வரலாற்றுப் பணியைச் செய்துள்ளார்கள்.

இதேவேளை, இராணுவ ரீதியாவும், சிங்களப் படையினர் பாரிய வெற்றிகள் எதையும் பெறவில்லை. நிலத்தைக்

**யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்ற இராணுவக் குறிக்கோளில் சிங்களப்படைகள் வெற்றி பெற்றிருந்தாலும் அந்தக்குறிக்கோள் மூலம் சிங்களப் படைகள், அடைய முயன்ற நோக்கங்கள் ஈடேறவில்லை. இது அரசுக்குப் பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. யாழ்ப்பாணச் சமரிலிருந்து கிடைக்குமென அரசு எதிர்பார்த்த அரசியல் வெற்றி இல்லாமலே போய்விட்டது. அந்த அரசியல் வெற்றியை, மாபெரும் இடப்பெயர்வின் மூலம் வலிகாமம் மக்கள் புலிகள் இயக்கத்திற்கும் - போராட்டத்திற்கும் வழங்கி ஒரு வரலாற்றுப் பணி செய்துள்ளார்கள்.**

ஆயினும், கடற் புலிகளின் துரித வளர்ச்சியும் கொப்பேகடுவவின் சாவும் அத்துடன் 'இதய பூமி', 'தவளை' மற்றும் யாழ்தேவி முறியடிப்புத் தாக்குதல்கள் உட்பட, புலிகள் நடாத்திய சில வெற்றிகரச் சண்டைகள் காரணமாக

முன்னோக்கிப் பாய்தலின் முதலாங்கட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துவிட்டு இரண்டாங் கட்டத்திற்காகக் காத்திருந்த படையினர் மீது நிகழ்ந்த 'புலிப்பாய்ச்சலால்' நிலைகுலைந்த சிங்களப்படை, பின்வாங்கும்படி




நிர்ப்பந்திக்கப்பட்டது.

வயலை ஊடறுத்துச் செல்லும் வாய்க்காலைப் போலவே முன்னேறிப்பாய்தலின் போது படையினரின் நகர்வுமுறை இருந்தது. இதனால் வாய்க்காலின் வரப்புகளைப் போல

யாழ்ப்பாணச்சமர், சிங்களப் படைக்குச் சாத்தியமில்லாத ஒன்றாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் 'கிழக்கைத் தாரை வார்த்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது' என்ற புதிய இராணுவக் கொள்கையுடன் சிங்களப் படையின் பெரும்பலம் வலிகாமத்திற்குட் குவிக்கப்பட்டு, யாழ்ப்பாணச் சமர் முடுக்கி விடப்பட்டது.

## முடுக்கி விடப்பட்ட யாழ்ப்பாணச்சமரின் முதற்கட்டமும் படிப்பினையும்

நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட படையினரை வலிகாமத்திற்குள் குவித்துவிட்டு, கொப்பேகடுவவின் முன்னைய திட்டத்தில் இருந்து சில விடயங்களைக் கடன் வாங்கி, ரத்வத்த–தளுவத்த கூட்டு, யாழ்நகர் நோக்கிய ஒரு நகர்வுத் திட்டத்தை வகுத்தது. 'முன்னோக்கிப்பாய்தல்' என்று அதற்குப் பெயரிட்டு அளவெட்டி–மாதகல் பகுதிகளில் இருந்து படையினர் தமது நகர்வுகளை ஆரம்பித்தனர். அதன் முதற் கட்டமாக, ஒரு பகுதிப் படையினர் வட்டுக்கோட்டை வரை நகர்ந்துவந்து காரைநகர் துருப்புகளுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்த முயன்றனர். மறுபகுதியினர் சங்கானை, சண்டிலிப்பாய் பகுதிகளைக் கைப்பற்றி, நிலைகொள்ள முயன்றனர். முதற் கட்டத்தை நிறைவேற்றிய பின்னர், வட்டுக கோட்டையிலிருந்து, கடற் படையின் பக்கபலத்துடன் அராலி வெளி தாண்டி நீரேரிக் கரையோரமாக யாழ்நகரை அடையப் . படையினர் திட்டமிட்டனர். அதேபோல், சங்கானை – சண்டிலிப்பாய் பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் மானிப்பாய்

**வலிகாமம் இடம்பெயர்விற்குப் பின்னர் எமது இளைஞர்களும் - இளம் பெண்களும் தமிழர் படையில் இணையும் தொகையில் ஏற்பட்டுள்ள வியத்தகு அதிகரிப்பும் வெளிநாடுகளில் வதியும் ஈழத் தமிழர்கள் தமிழர் படைக்கு வழங்கி வரும் அதிகரித்த உதவியும் - ஆதரவும் நிச்சயம் போரில் வெற்றியைப் பெற்றுத்தரும்.**

இருமுனைகளிலும் நிலை கொண்டிருந்த புலிவீரர்கள் இரு முனையில் இருந்தும் வாய்க்காலைத் தூர்க்க முயன்றனர். வெற்றியும் பெற்றனர். புலிப்பாய்ச்சலில் ஈடுபட்ட போராளிகளுக்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்த சொத்து இந்தத் தாக்குதல் தந்திரோபாயம் ஆகும். இந்த நிலையில் சங்கானை, சண்டிலிப்பாய் வரை அமைத்து வாங்கிக் கட்டிக்கொண்ட வாய்க்கால் நகர்வை, மேலும், ஆனைக்கோட்டை வரை கட்டமுயன்றால் ஏற்படும் அபாயம் பற்றி சிங்களத் தளபதிகள் சிந்தித்திருக்கலாம்.

அதே நேரம், வட்டுக்கோட்டையிலிருந்து நீரேரிக் கரையோரமாக யாழ்நகர் நோக்கி நகர இருந்த இரண்டாம்

கைப்பற்றியதை வெற்றிகரமான செயல் என சிங்கள அரசு பிரசாரம் செய்கின்றது. ஆனால் கைப்பற்றிய நிலத்தைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்ற உண்மையைச் சிங்கள அரசு உணரும்போது, நிலத்தைக் கைப்பற்றியதால் என்ன பயன் ஏற்பட்டது என்ற கேள்வியை அரசே எழுப்பும். இது ஒரு புறம் இருக்க பெருந்தொகைப் படையினரையும் பிரமாண்டமான படைக்கல சக்தியையும் சிங்களப்படைகள் பயன்படுத்திச் சமரை நடாத்தியும் கூட புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பை விட இராணுவத்திற்கு ஏற்பட்ட உயிரிழப்பு அதிகமானது. அத்துடன் விமானங்கள்,

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா விதைத்த வினைகளும் புலிகள் பதித்த தடங்களும்

# ரிவிரெச?

வலிகாமச் சமர் யாழ்ப்பாண இராச்சியத்தை தற்காலிகமாக வெற்றிகொண்டது ஆயினும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போரியல்த் தந்திர, யுக்திமுறைகளை தமிழீழப் போராட்ட வரலாற்றிற்கு வழங்கிச் சென்றுள்ளது. தமிழீழப் போராட்டத்தினை புதிய பரிமாணம் நோக்கி நகர்த்தியுள்ளது. ஒரு சிறுபான்மை இனம் பெரும்பான்மை அடக்குமுறைக்கெதிராகப் போரிடும் போது தனக்கான போராட்டமுறையாக வரித்துக் கொண்ட கெரில்லா போர்முறைத் தத்துவத்தை போரிடும் இயக்கத்துக்கு மட்டுமல்லாமல், தன் முழு இனத்துக்குமே பிரயோகிக்க வைத்த சமர். இதனை நேரடியாக நோக்காது நுணுகி ஆராய்ந்தால் புரியும். பாரிய அளவில் ஒரு பெரும் படை இன அழிப்பு நோக்கோடு படையெடுக்கும் போது அதிலிருந்து தற்காத்துக் கொள்ள இடம் பெயர்வது தவிர்க்க முடியாததே. ஆனால் எதிரி வர வரத் தனக்குச் சாதகமான இடங்களில், சூழ்நிலைகளில், வியூகங்களில் தாக்கி அவனுக்குப் பேரழிவை ஏற்படுத்தும் தத்துவத்தையும் புலிகள் மேற்கொள்ளத் தவறவில்லை.

முன்னைய இதழிற் குறிப்பிட்டதுபோன்று இடப்பெயர்ச்சியின் இன்னல்களிடையே எமது வீரர்கள் செய்த அளப்பெரும் தியாகத்தை மறந்து விட முடியாது. மக்கள் பாதுகாப்பாக நகரும் வரை, ஆயுதங்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் வரை, இயக்க இரகசியங்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தும் வரை, பெரிய அளவிலான ஆள் ஆயுத பலங்களுடன் முன்னேறும் எதிரியை முன்னின்று தடுத்து நிறுத்தும் பணியில் பல வீரர்கள் தங்கள் இன்னுயிரை ஈகம் செய்துள்ளார்கள். இதனை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படி அவர்கள் போராடியிருக்காவிட்டால் பெரியளவில் எமது மக்கள் மடிந்திருப்பார்கள்.

இடப்பெயர்ச்சியின் சந்தடிக்குள் அவர்கள் தியாகம் அமிழ்ந்துவிடக்கூடாது. இன்னல்களுக்கிடையே அவர்களது ஈகம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிடக்கூடாது. அவர்கள் முன்நின்றதால்தான் நாம் பின்வாங்கி எமது உயிரைக் காத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எனவே அவர்கள் எவ்வாறு முன்னின்று மூச்சோடு போராடினார்கள் என்பதையும் சிறீலங்கா அரசு எப்படி பேடித்தனமான முறையில் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டது என்பதனையும் பதிவுசெய்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம். வலிகாமச் சமரின்போது புலிகள் மேற்கொண்ட ஏனைய வெற்றிகரமான தாக்குதல் விபரங்களை இக் கட்டுரை கொண்டிருக்கவில்லை என்பதனைக் கவனத்திற் கொள்க.

## 01-11-1995 புதன்கிழமை

❖ கோப்பாய் வடக்கு உரும்பிராய் ஆகிய பகுதிகளில் இராணுவம் முன்னேற முயல்கின்றது. அந்தப் பகுதிகளில் புலிகள் வீராவேசமாக எதிர்த்து, கடும் சமரில் ஈடுபடுகின்றனர்.

❖ குண்டுத்தாக்குதல்களுக்கு மத்தியில் தாங்கியொன்று தகர்க்கப்பட, அதிலிருந்த ஒரு அதிகாரி உட்பட அச்சமரில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்படுகின்றார்கள்.

❖ இராணுவம் நாவற்குழிப் பாலத்தைத் தகர்க்க எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளின் அதிரடி அணியின் துணிச்சலான எதிர்த் தாக்குதலால் முறியடிக்கப்படுகின்றது.

❖ வலிகாமத்தின் பெரும்பாலான மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்கின்றனர். இடம் பெயர்ந்த மக்கள் தொகை 5 இலட்சத்திற்கும் அதிகம் என அவர்கள் நலனைக் கவனிக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவிக்கின்றது.

## 02-11-1995 வியாழக்கிழமை

❖ தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்து கொண்டிருந்த மக்களை நோக்கி சிறீலங்கா செம்மணிப் பகுதியில் வீசிய குண்டு வீச்சில் இருவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட 5 பேர் படுகாயமடைகின்றனர்.

❖ விடுதலைப் புலிகளில், பல பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் இணைந்து கொள்கின்றனர்.

❖ தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மக்கள் அணி திரள்கிறார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பேரணிகள் நடைபெறுகின்றன.

## 03-11-1995 வெள்ளிக்கிழமை

❖ தொடர்ந்து பலாலி முகாமிலிருந்து எறிகணை வீச்சுக்களும் இடம் பெயரும் மக்கள்மீது விமானக் குண்டு வீச்சும் தொடர்கின்றது.

## 04-11-1995 சனிக்கிழமை

❖ இடம்பெயர்ந்த மக்களின் அவசர நிவாரண உதவி கோரி ஐ.நா செயலாளருக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் அவசரக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்கின்றார்.

## 05-11-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ நிர்வாக அலகுகள் யாவும் தென்மராட்சிக்கு இடமாற்றம் பெறுகின்றது.

## 08-11-1995 புதன்கிழமை

❖ உரும்பிராய், கோப்பாய் பகுதிகள் மீது மீண்டும் எறிகணை, குண்டு வீச்சுக்கள் நடாத்தப்படுகின்றது.

❖ அத்துடன் தரை நகர முயன்ற இராணுவத்தினரைத் தடுத்து விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடாத்துகின்றனர்.

## 09-11-1995 வியாழக்கிழமை

❖ பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் கைதடி தெற்குக் குடியிருப்புகள் மீது விழுந்து 6 பொதுமக்கள் படுகாயமடைகின்றனர். குண்டு வீச்சில் பல வீடுகள் சேதமடைகின்றன.

## 10-11-1995 வெள்ளிக்கிழமை

❖ நீர்வேலிப் பகுதியிலிருந்து கோப்பாய், உரும்பிராய் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடுஞ்சமர் தொடுக்கின்றனர்.

❖ சிறீலங்கா இராணுவத்தரப்பில் 59 படையினர் இறந்ததாகவும் 150 இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

❖ இச்சமரில் 25 விடுதலைப் புலிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொள்கின்றார்கள்.

## 11-11-1995 சனிக்கிழமை

❖ மூன்று முனைகளில் இராணுவம் முன்னேற முயல்கின்றது. சுோண்டாவில் இராச வீதியில், கோப்பாயை அண்டிய பகுதிகளில் கடுஞ் சமர் ஏற்படுகின்றது.

❖ அன்றைய தாக்குதலில் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

❖ 5 விடுதலைப் புலிகள் வீரச் சாவடைகின்றனர்.

❖ கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய், திருநெல்வேலி, நல்லூர், கல்வியங்காடு பகுதிகட்கு சிறீலங்கா இராணுவம் அகோர எறிகணை வீச்சை நடாத்துகின்றது.

❖ அதேவேளை, வடமராட்சிப் பகுதிகட்கும் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் 6 பொது மக்கள் பலியாகியதோடு 21 பேர் படுகாயமடைகின்றர்.

www.tamilarangam.net

## 12-11-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ எறிகணைத் தாக்குதலில் பொலிகண்டியில் நித்திரையிலிருந்த 8 வயதுச் சிறுமி பலியாகின்றார். அதேவேளை, கைதடி, நாவற்குழியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினால் இளைஞன் ஒருவர் பலியாகின்றார்.

## 14-11-1995 செவ்வாய்க்கிழமை

❖ தொடர்ந்து கோண்டாவில், இருபாலைப் பகுதியில் உக்கிர சண்டை நிகழ்கின்றது.

❖ எறிகணை வீச்சில் நல்லூர்ப் பகுதியில் இளைஞன் ஒருவர் கொல்லப்படுகின்றார்.

❖ வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகள் மீது மேற்கொள்ளப்படும் மனிதாபிமானமற்ற எறிகணை வீச்சால் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கு வன்னிப் பகுதிக்குச் செல்லுமாறு மக்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் கோருகின்றனர்.

## 16-11-1995 வியாழக்கிழமை

❖ வல்வெட்டித்துறை மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா இராணுவம் நிகழ்த்திய கண்மூடித்தனமான எறிகணை வீச்சினால் 8 பொது மக்கள் படுகாயமடைகின்றனர்.

❖ வடபகுதிக்குப் பணம் எடுத்துச் செல்வதில் சிறிலங்கா அரசு புதிய கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. முன் அனுமதியின்றி 5 ஆயிரம் ரூபாய்கள் மட்டுமே கொண்டு செல்லலாம் என்றும் 50 ஆயிரம் ரூபா வரையிலான பணத்திற்கு வவுனியா பிரிகேடியரின் அனுமதியைப் பெற வேண்டுமெனவும் அதற்குக் கூடுதலான பணத்திற்குப் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதியைப் பெறவேண்டுமெனவும் சிறிலங்கா அரசு அறிவிக்கின்றது.



## 18-11-1995 சனிக்கிழமை

❖ சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான Y-8 விமானம் கடற்புலிகளின் சிறப்புப் படையணியினரால் பலாலிக் கடற்பகுதியில் வைத்துச்சுட்டு வீழ்த்தப்பட்டது. இது விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட 5வது விமானமாகும்.

❖ சுப்பசொனிக் விமானம் மூலம் இன்பருட்டி, பொலிகண்டிப் பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதலில் இரு சிறுவர்கள் உட்பட 4 பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர்.

❖ பலாலி இராணுவ முகாமிலிருந்து பரவலாக நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டு 11 பேர் படுகாயமடைகின்றனர்.

❖ நாகர் கோவில் வடக்கில் எறிகணை வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் அவர்களது உறவினர்களுமாக 6 பேர் அவ்விடத்திலேயே பலியாகின்றார்கள்.

❖ சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனத்தை, இனப்படுகொலையைக் கண்டித்தும், தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக் கோரியும் இலண்டன் மாநகரிலும், கனடாவிலும் பாரிய வில் ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. இலண்டனில் வரலாறு காணாத அளவில் 12,000 இற்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்து கொள்கின்றார்கள்.

## 19-11-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ கோண்டாவில், இருபாலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் தமது இறுதிக்கட்டப் போரை அகோர எறிகணைத் தாக்குதலுடன் ஆரம்பிக்கின்றனர். தாங்கிகள், கனரக வாகனங்கள், விமானங்களின் உதவியுடன் தமது நிலைகளிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு உக்கிர தாக்குதல்களைத் தொடுக்கின்றனர்.

❖ இதில் இரண்டு T-72 ரக யுத்த தாங்கிகள் முற்றாகச் சேதமாக்கப்படுகின்றன.

❖ இத்தாக்குதல்களில் மட்டும் 100 இராணுவத்தினர் இறந்ததை சிறிலங்கா அரசு ஒத்துக் கொள்கின்றது.

## 20-11-1995 திங்கட்கிழமை

❖ இன்று இருபாலைப் பகுதியிலிருந்து கல்வியங்காடு, நாயன்மார்கட்டு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலைத் தொடுக்கின்றனர்.

❖ காலை ஆறு மணிக்குத் தொடங்கி மாலை வரை இடை நிறுத்தமின்றி உக்கிரமாக அச்சண்டை தொடர்கின்றது.

❖ நாயன்மார்கட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் படையணியொன்று விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு கடுந் தாக்குதலுக்குள்ளாக்கப்படுகின்றது. இத்தாக்குதலில் இரண்டு சீனத் தயாரிப்புத் தாங்கிகள் அழிக்கப்பட்டதோடு 50 இற்கு மேற்பட்ட படையினரை சிறிலங்கா இழந்தது.

❖ நாவற்குழிப்பகுதி மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஒரு குழந்தை கொல்லப்பட்டதுடன் 11 பேர் படுகாயமடைகின்றனர். மேலும், அப்பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம், ஐயனார் கோயில் அகதி முகாம், பிள்ளையார் கோயில் முகாம் பகுதிகளில் சிறிலங்கா மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலால் 24 பேர் காயமடைகின்றனர்.

## 21-11-1995 செவ்வாய்க்கிழமை

❖ அரியாலை நோக்கி நகர முயன்ற இராணுவம் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுக்கின்றனர். இதில் 10 போராளிகள் வீரச் சாவடைகின்றனர்.

❖ இராணுவம் சுண்டுக்குழி, குருநகர், கைதடி, நாவற்குழிப் பகுதிகளுக்குக் கடும் எறிகணை வீச்சுக்களை மேற்கொள்கின்றனர்.

❖ பொலிகண்டிப் பகுதியில் புக்காரா விமானங்கள் வீசிய குண்டில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 5 பேர் காயமடைகின்றனர்.

## 22-11-1995 புதன்கிழமை

❖ இன்று சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உக்ரெய்ன் நாட்டுத் தயாரிப்பான AN-32 ரக விமானத்தைச் சிறிலங்காப் படைகள் இழந்தமை சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

❖ இந்த இழப்பின் பின்னர் பலாலியில் போர் விமானங்கள் தரையிறக்குவதற்கான பாதுகாப்பு நடைமுறைகளில் புதிய விதிமுறைகளைச் சிறிலங்கா கொண்டுவருகின்றது.

## 23-11-1995 வியாழக்கிழமை

❖ அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் சண்டை தொடர்கின்றது. சிங்கள இராணுவம் அரியாலையிலிருந்து கொழும்புத்துறைப் பக்கமாக முன்னேற முயல்கின்றனர்.

❖ சிறிலங்கா இராணுவத்தால் கண்மூடித்தனமாக யாழ்நகரின் பல பகுதிகளுக்கும் எறிகணைகள் வீசப்படுகின்றன.

## 25-11-1995 சனிக்கிழமை

❖ அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளுக்குள் ஊடுருவி, புலிகள் தாக்குதல் தொடுக்கின்றனர். மும்முனைகளில் இத்தாக்குதல்கள் இடம் பெறுகின்றது.

❖ அதிகாலை 1 மணிக்கு ஆரம்பித்த சண்டை விடியும் வரை தொடர்கின்றது. பல இராணுவத்தினர் உயிரிழக்கின்றனர்.

❖ இத்தாக்குதலில் 25 போராளிகள் வீரச்சாவடைகின்றனர்.

❖ வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் பொது மகன் ஒருவர் கொல்லப்படுகின்றார்.

## 26-11-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ தொடர்ந்தும் அரியாலையில் சண்டை இடம்பெறுகின்றது.

❖ முன்னேற முயன்ற ஒவ்வொரு அங்குலத்திலும் சிறிலங்காப்படை தாங்கிகள், ஆயுதங்கள், இராணுவத்தினர் என்று பெரும் இழப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

❖ அதேவேளை, வல்வெட்டித்துறைப்பகுதியில் நடைபெற்ற றொக்கட் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட 9 பேர் படுகாயமடைகின்றனர்.

❖ அதேபோன்று கைதடி, நாவற்குழிப் பகுதியிலும் எறிகணை வீச்சினால் இரண்டு பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர்.

## 27-11-1995 திங்கட்கிழமை

❖ யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி அகோர எறிகணை வீச்சுக்கள் இடம் பெறுகின்றன.

❖ இதில் மூன்று குழந்தைகளின் தாயொருவர் பலியாகின்றார்.

## 28-11-1995 செவ்வாய்க்கிழமை

❖ முன்னேற முயலும் சிறிலங்கா இராணுவத்தை எதிர்த்து நல்லூர், கந்தர்மடம், அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலைத் தொடுக்கின்றனர்.

❖ அவர்களைத் தடுத்து நிறுத்தி காலை முதல் இரவு வரை கடும் சமர் நடைபெறுகின்றது.

❖ இச்சமரில் மூன்று அதிகாரிகளும் 24 இராணுவத்தினரும் கொல்லப்படுகின்றனர்.

## 01-12-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ நல்லூர்ப் பகுதியில் விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தை எதிர் கொள்கின்றனர். நாவலர் வீதியில் பெரும் சண்டை மூள்கின்றது.

❖ இத்தாக்குதலில் மோட்டார்கள், கனரக ஆயுதங்கள் கொண்டு விடுதலைப் புலிகள் மிகக் கடுமையாகத் தாக்குகின்றார்கள்.

❖ நீண்ட நேரம் நடைபெற்ற இச்சண்டையில் 28 படையினர் இறந்ததாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா அறிவித்ததாயினும் கொல்லப்பட்ட சிறிலங்காப் படையினரின் தொகை மிக அதிகம் என்று விடுதலைப் புலிகளும் கொழும்புப் பத்திரிகை ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர்.

## 02-12-1995 திங்கட்கிழமை

❖ இன்றும் எறிகணைத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரின் நிலைகள் மீது ஊடுருவி RPG மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல்கள் நடாத்துகின்றனர்.

❖ போர் முனையில் குறியாக இருக்கும் ஆட்லறிகள் சில நாட்களில் மக்கள் குடியிருப்புகள் மீது திருப்பி விடப்பட வாய்ப்பு உண்டு என்பதனால் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலிருந்தும் மக்களை வன்னிப் பகுதி செல்லுமாறு விடுதலைப் புலிகள் ஆலோசனை வழங்குகின்றனர்.

## 03-12-1995 செவ்வாய்க்கிழமை

❖ சிறிலங்கா இராணுவம் யாழ் நகருள் நுழைய முனைந்த வேளை, யாழ் செயலகப் பகுதியில் பாரிய குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்படுகின்றது. இதன் போது சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிய செய்திகளை சர்வதேச செய்தி நிறுவனங்கள் உறுதிப் படுத்திய போதும் சிறிலங்கா அரசு இருட்டடிப்புச் செய்கின்றது

## 04-12-1995 புதன்கிழமை

❖ ஆரியகுளம், நாவலர் வீதிப் பகுதிகளில் கடும் சண்டை நடைபெறுகின்றது.

❖ கட்டடங்களினுள்ளிருந்தும், வீடுகளினுள்ளிருந்தும் விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல்களை நடாத்துவதாய் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் அறிவிக்கின்றார்கள்.

❖ இறுதிவரையும் விடுதலைப் புலிகள் தமது எதிர்த் தாக்குதலைத் தொடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

## 05-12-1995 வியாழக்கிழமை

❖ பல்லாயிரக் கணக்கான சிங்கள இராணுவத்தினருடன் கோடிக்கணக்கான ரூபாய்களைக் குண்டுகளாகவும், வெடிப் பொருட்களாகவும் செலவு செய்து, ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனது படையினரைப் பலி கொடுத்து, இறுதியாக சிறிலங்கா இராணுவம், அரசு நோக்கிய அரசாக தமிழீழ அரசு நிலை கொண்டிருந்த யாழ் மண்ணில் கால் பதித்துக் கொள்கின்றது.

www.tamilarangam.net







அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற மாவீரர் நாளின் போது அவுஸ்திரேலியப் பிரதி நிதி தி. ஜெயக்குமார் அவர்கள் தேசியக் கொடியேற்றி ஆரம்பித்து வைப்பதையும் , 700 மாவீரர்களின் திருவுருவப் படங்களைத் தாங்கிய 4 மாவீரர் நினைவுப் பந்தலில் , ஒன்றினையும் படத்திற் காணலாம்

# அவுஸ்திரேலியாவில் மாவீரர் நாள் 1995

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற் தம் இன்னுயிரைக் கொடுத்து, விடுதலைப் பயிரை வளர்த்த மாவீரர்களை நினைவுகூர்ந்து கடந்த மாதம் 25ஆம் நாள் சனிக்கிழமை அவுஸ்திரேலியாவில், மெல்பேண் நகரில் மாவீரர் நாள் கொண்டாடப்பட்டது. இதிற் சுமார் இரண்டாயிரம் மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர்.

மாலை 6.30 மணியளவிற் தமிழீழத் தேசியக் கொடியும், அவுஸ்திரேலிய நாட்டுக் கொடியும் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து மாவீரர்களின் உறவினர்கள் விளக்கேற்றினர். முதல் நிகழ்ச்சியாக மாவீரர் நாளின் முக்கியத்துவம் பற்றி இங்கு வாழும் இளம்சந்ததியினருக்காக ஆங்கிலத்தில் ஒரு நாடகம் அரங்கேறியது. கடற்புலிகளின் சாதனைகளைப் புலப்படுத்தும் வகையில் மூன்று நாட்டிய நிகழ்ச்சிகள் நடந்தன. இறுதி நிகழ்ச்சியான திரு. முருகையன் அவர்கள் எழுதிய "மண்ணில் ஒரு பிடி" எனும் நாடகம் பலரினதும் பாராட்டைப் பெற்றது. நிகழ்ச்சிகள் யாவும் இரவு 11.00 மணியளவில் கொடியிறக்கத்துடன் நிறைவடைந்தன.

மண்டபத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த 70 மீற்றர்கள் நீளமான மாவீரர் பந்தலிற் சுமார் எழுநூறுக்கும் மேற்பட்ட மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தமை பலரதும் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

இதே நாள் தெற்கு அவுஸ்திரேலியாவிலும் மாவீரர் நாள் சிறப்பாக நடைபெற்றது.

26-11-1995 அன்று தலைவரின் பிறந்த நாளையொட்டி மெல்பேணில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் யாகமும், அபிசேகமும் நடைபெற்றது. தலைவரின் நீண்ட ஆயுள் வேண்டியும், போரில்வெற்றி காணவும் இவ் வழிபாடு மெல்பேண் நகரத் தமிழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அறுநூறிக்கும் அதிகமான தமிழர்கள் கலந்துகொண்டனர்.

## சந்தி வெளியில்...

வீரச்சாவடைந்தனர்.

மேஜர் புஸ்பகுமார்,கப்டன் ராஜேஸ் 2ஆம் லெப்டினன்ட் தமிழ்வாணி ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

குறுகிய நேர இடைவெளிக்குள் அப்பகுதிக்குள் கடல் மார்க்கமாக ஊடுருவிய விடுதலைப் புலிகள் இத் துணிகரத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், மாலை வரை அப்பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அங்கு நிலையெடுத்து நின்றதினால் அப்பகுதியை நெருங்குவதற்கு படையினர் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததாகவும் தெரியவருகின்றது. இதனால் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த படையினரது உடல்கள் தாக்குதல் நடந்த பகுதியிலேயே மாலைவரை கிடந்துள்ளது. அன்று மாலை விடுதலைப் புலிகள் அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னரே படையினர் அவ்விடத்தை நெருங்கக்கூடியதாக இருந்துள்ளது. இவ்வேளையில் படுகாயமடைந்த படையினரில் மேலும் பலர் இறந்துபோக, காயமடைந்த பலர் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னர் சிறிலங்காப் படையினர் மாலையிலிருந்து தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு எவரும் செல்ல முடியாதவாறு தடைவிதித்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தாக்குதலில் தமது தரப்பில் 34 படையினர் கொல்லப்பட, 33 பேர் காயம் அடைந்துள்ளதாக சிறிலங்கா அரசு செய்தி வெளியிட்டுள்ளது. இருப்பினும் இத்தாக்குதல் தொடர்பான செய்திகள் எதுவும் வெளியில் செல்லாதவாறு சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் பலவாறாக முயன்று இருட்டிப்புச் செய்துள்ளபோதும், இந்த இருட்டடிப்பையும் மீறி கொல்லப்பட்ட படையினரின் தொகை தாம் அறிவித்த தொகையிலும் கூடுதலாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் மூலம் வெளிவந்துள்ளதையடுத்து கையறு நிலையில் பாதுகாப்பு வட்டாரங்கள் இருக்கின்றது. எனவே தென்பகுதியில் சிங்கள மக்கள் அதிருப்தி அடைதிருக்கும் வண்ணம் பெரும் தொகையான விடுதலைப் புலிகள் இறந்துள்ளதாக தமது பொய்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் பற்றி கேள்வியுற்ற சிறிலங்காவின் தற்போதைய பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை அவசர சந்திப் பொன்றை கிழக்கு மாகாண இராணுவத் தளபதிகளுடன் நடத்தியுள்ளார்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டதாக பிரச்சாரம் செய்த சிறிலங்கா அரசிற்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் கொடுத்த இரண்டாவது பலத்த அடி இதுவாகும். அத்துடன் தற்போது கிழக்கின் பெரும்பாலான பகுதிகளை குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள விடுதலைப் புலிகள், சிறிலங்கா அரச படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மிகுதியாக உள்ள பகுதிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள் என்பதில் ஐயமேதுமில்லை என்பது தெளிவாகிறது.

இத் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

ஏ.கே 47 -20

ஏ.கே.எல்.எம்.ஜி-01

ஆர்.பி.ஜி- 01

ஆர்.பி.ஜி. எறிகணை-04

'புறொப்லர்'-05

தொலைத்தொடர்பு சாதனம்- 2

ஏ.கே மகசின்- 44

எல்.எம்.ஜி. 'லிங்'-345

ஐ.எம் ரவைகள்- 701

## பொஸ்னியாவில்...

வாரங்கள் அல்லது மாதங்கள் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படையினர் பொஸ்னியாவின் 600 மைல் அளவு நீளமான போர் ஓய்வு எல்லைகளில் கடமையில் ஈடுபடுவர்.

போரிடும் பகுதியினரைப் பிரித்து வைத்திருப்பதுதான், இந்த ஓகையோ ஒப்பந்தத்தின் நோக்கமாயின் அது வெற்றி பெற்றதாகவே கருதப்படுகின்றது. ஏனெனில் போரிடும் பகுதியினர் நேட்டோ படைகளின் பிரசன்னத்தையும் தம்மை வேறாக வைத்திருப்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளது போலத் தெரிகின்றது.

ஆனால் இந்த ஒப்பந்தம், போரிடும் பகுதியினரை ஒற்றுமைப் படுத்தவெனில் அது போல்கன் தீபகற்பச் சிக்கலில் ஏற்பட்டுள்ள பல சந்தேகங்களுக்குத் தெளிவான விடை தராமலேயே உள்ளதெனலாம்.

## யாழ்ப்பாணச் சமரில்...

டாங்கிகள் உட்பட ஒரு தொகை இராணுவ தளபாடங்களையும் அரசு இழந்துவிட்டது. ஆகச் சொத்திழப்பால் வலிகாமத்தில் வசித்த ஒவ்வொரு குடும்பமும் பட்ட-படும் வேதனையும் அந்த சொத்திழப்பால் குடும்ப பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும் தேசம் சந்தித்த இழப்பாகவே கருத வேண்டும். ஆயினும் வெளியேறாதிருந்து படையினர் கையில் அகப்பட்டு அல்லது சண்டைக்குள் சிக்கி பாரிய உயிர்சேதத்தைச் சந்தித்து வாழ்நாள் முழுவதும் துயர வாழ்க்கை வாழ்வதைவிட சொத்திழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள சோகங்கள் மிக மிகக் குறைவானவை என்பதுடன் நாளை, எமது கடின உழைப்பால் அவற்றை ஈடுசெய்யவும் முடியும் என்பதும் கவனிக்கத்தக்கவை.

சிங்களப் படைகள் வலிகாமத்தைக் கைப்பற்றிய செயல் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகப் போவதை உலகம் விரைவிற் காணும். வலிகாமம் இடம்பெயர்விற்குப் பின்னர் எமது இளைஞர்களும்-இளம் பெண்களும் தமிழர் படையில் இணையும் தொகையில் ஏற்பட்டுள்ள வியத்தகு அதிகரிப்பும் வெளிநாடுகளில் வதியும் ஈழத் தமிழர்கள் தமிழர் படைக்கு வழங்கி வருவதாகக் கூறப்படும் அதிகரித்த உதவியும்-ஆதரவும் நிச்சயம் போரில் வெற்றியைப் பெற்றுத்தரும்.

வலிகாமம் சமரிற் தமிழர்படை சந்தித்த பின்னடைவிற்கு பிரதான காரணம் அதன் ஆட்பலப்பற்றாக்குறையும்- படைக்கல சக்திப் பற்றாக்குறையுமாகும். அதேவேளை, தென்மராட்சியையோ, வடமராட்சியையோ அல்லது வன்னியையோ இழந்து, எமது மக்கள் மேலும் துன்பமுறாமல் இருக்கவும் தமிழரின் படைபலம் அதிகரிக்கப்படட்டே தீரவேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் தமிழரின் படைபல உயர்வே இன்று தமிழினத்தின் அத்தியாவசிய தேவையாகவுள்ளது. இந்த உண்மையை தலைவர் பிரபாகரன் தெளிவாகவும்- வெளிப்படையாகவும் மாவீரர் நாள் உரையில் விளக்கிவிட்டார்.

www.tamilarangam.net



# சொந்தச் சகோதரர்கள்

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டு
சிந்தையிரங்கிச் செயலினில் காட்ட
வாயைக் கட்டி இன்று வயிற்றையுந்தான் கட்டி,
தாய் நாட்டில் எங்களது சகோதரரின் துயருக்காய்
உண்ணா நோன்பிருக்கும் உயர்ந்தோரே!.... வணக்கங்கள்.
பின்னாலிருந்து பேராதரவு நல்கிநிற்கும்
அன்புத் தமிழ்மக்காள்! அனைவருக்கும் வணக்கங்கள்...

ஐயா கதைகேளும்... இந்த
அகதிகள் கதைகேளும்.
பொய்யோ அன்றிப் புனைகதையோ இதுவல்ல.
மெய்யாய் நடந்த கதை...கேட்க
மேனி சிலிர்க்கும் கதை...

எண்பத்து மூன்றிலிருந்து ஈழத்தில் நாங்கள் படும்
துன்பங்கள்... ஐயா தொடர் தொடராய்ச் சொல்லிடலாம்.
ஒன்றிரண்டா அவலங்கள் ஒரு நொடியில் சொல்வதற்கு,
என்றிருந்து எதைச்சொல்ல எதைநீக்க எதைச் சேர்க்க...

பூண்டோடு ஒழிப்பேன் எனப் புறப்பட்ட "தர்மிஷ்ட"
ஆண்டிமகன் செய்துவிட்ட அக்கிரமம் ஏராளம்....
காக்கவென வந்த காந்திவழிப் பூட்டர்கள்
தாக்கி யெமையழித்த தனிக்கதைகள் தாராளம்...

வாழைத் தோட்டத்து மன்னவனும் வந்தபின்னே
ஆளையே "டம்" பண்ணி அடையாளம் அழிக்கின்ற
வேலையைத்தொடக்கிவைத்தான்...வெளுத்ததெல்லாம்பாலென்று
நம்பவைக்க எத்தனைதான் நாடகங்கள் ஆடிவைத்தான்...

ஆடிய கூத்தெல்லாம் 'அம்பாள் கபே' முன்னாலே
கூட்டி அள்ளிக் குவித்ததன் பின்னாலோர்
பெருச்சாளி வந்தந்தப் பெருங்கதிரை மீதமர்ந்து
அரிச்சுவடி தேடியது... அனைத்துத் தமிழனுமே
புலிகள் என்றுசொல்லிப் புதுக்கவிதை பாடியது...
ஒழிப்பேன் இதுஉறுதி என்றுரக்கக் கூவியது.
ஒழித்த தென்னவோ உண்மைதான் "கஜானாவை"...

வெள்ளைக் கலையுடுத்து "வெண்தாமரைப்" பூவெடுத்து
உள்ளம் திறந்து உருகுகின்றேன் என்றுரைத்து
நீலக் கொடியோடும் நீலிக் கண்ணீரோடும்
ஆளவென்று இன்றிந்த அக்கா "வந்திரிக்கா"
அக்காவும் என்ன கொக்கா விடுவதற்கு
"புக்காரா" "டோரா" புடைசூழ "வந்திரிக்கா"...

பரம்பரையாய் தமிழனுக்குப் பாடைகட்டிப் பார்த்தவரின்
அரசாங்கம் தானிப்போ....ஆளவந்த அக்காவின்
"தாத்தே"தான் எங்களது தமிழுக்குக் குழிபறித்த
மூத்த பெருமகனாம்.... மொட்டையொன்றின் புண்ணியத்தால்
ஆத்தை பின்வந்தாள்... தமிழுக்கு வாய்க்கரிசி
அள்ளியள்ளிப் போட்டவள் அவள்தான்... அவளின்
பிள்ளைதான் இப்போ துள்ளிக் குதிக்கிறது...

அச்சுவேலி புத்தூர் ஆவரங்கால் கோப்பாய்க்
குச்சொழுங்கை எல்லாம் கொடியவரை அனுப்பியது...
மாமா அங்கே வயாவிளானில் பெருங்கூத்தாம்
ஆமாம் கதிர்காமத்தான் அயல்நாட்டில் காவடியாம்...
எல்லாம் எதற்காக... எல்லாம் எதற்காக..
சில்லாலை மாதகல் சித்தங்கேணி சங்கானை
எல்லாம் எங்கே.... எப்போதும் துயரின்றி
நெல்லோடு வயல்சூழ நீள்கடலில் மீன்சூழ
வாழ்ந்திருந்த எங்களது வளமான வாழ்க்கையெங்கே?
தாழ்வாரம் கூடத் தவிடுபொடி யாக்கியதார்?

மேலிருந்து குண்டு விழும் வீடழியும் சொத்தழியும்
காலிழந்தோர் கையிழந்தோர் கணவனையே தானிழந்தோர்
தாலியேறும் வேளையிலே தனிமரமாய்ப் போனவர்கள்
நாலிரண்டு லட்சம் தான் நமக்கெல்லாம் இது சகஜம்

அண்ட வந்த சனமில்லை அயல் நாட்டுப் பிரஜையில்லை
தொண் டடிமை செய்வதற்காய் தோணி யேறி இறங்கவில்லை
கண்டி மிலே ஆட்சி செய்த கல்வெட்டு இன்று முண்டு
அண்டவென "அசைலம்" தேடி அலைவ தெங்கள் புதியகதை...

எடுத்த எடுப்போடும் இடுப்பிற்கைப் பிள்ளையொடும்
உடுத்த உடுப்போடும் உறக்கம் உணவுமின்றி
நடக்கத் தொடங்கிவிட்டார்... நடக்கத் தொடங்கிவிட்டார்...

ஐம்பத்து ஆறில் அப்பன் தொடக்கிவைக்க
ஆராய்ச்சி மாநாட்டில் "ஆச்சி" முடுக்கிவைக்க
ஓடத் தொடங்கினோம்...இன்னும் ஓட்டம் முடியவில்லை..
எப்போ திந்த ஓட்டம் முடியும்?
எண்ணிப் பாருங்கள் எமக்கும் கைகளுண்டு...

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டு
சிந்தையிரங்கிவிட்டோம் இனிச் செயலினில் காட்டிடுவோம்.

**—இரத்ன. விக்னேஸ்வரன்**

## எரிந்திடும் மண்ணை எதிரியின் குருதியால் அணைப்போம்!

**ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் யாழது
மீட்டிய மொழியது
ஊமையாய் போனது
ஆயிரம் ஆயிரம்
வீரர்கள் துயிலிடம்
அரக்கர் கால்பட்டு
கறைபட்டு போனது
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் அமைந்திட்ட
வாழ்விடம் அரைநாளில்
அழிவுண்டு போனது
கரும்பனை தானே
நிமிர்ந்திடும் தன்மைபோல்
கலங்காது நிமிர்ந்திடும்
வாழ்வு நமதல்லவா
கடலலை போலவே
ஓயாது என்றுமே
உழைத்திட களைத்திடா
உணர்வு நமதல்லவா
அசைந்திடும் உலகையும்
அசைந்திடா வண்ணம்
ஒருகணம் நிறுத்தும்
ஆற்றல் நமதல்லவா
எம்நெஞ்சில் எரிந்திடும்
எரிமலை வெடிக்கட்டும்
எதிரியின் மேனியோ
எரிந்து பொசுங்கட்டும்
எரிந்திடும் எம்மண்ணை
எதிரியின் குருதியால்
அணைத்திட வேண்டும்
ஆயுதம் முழங்கட்டும்
எழுந்திடும் தமிழினம்
அழிந்திடும் சிங்களம்
எங்குமே எரிந்திடும்
விடுதலை தீயிதுவே.**

**- யோகரத்தினம் யோகி**

## இழந்திருப்போமா இந்த மண்ணை

எட்டநின்று பார்க்கின்றேன் - என் வயலை
பசுமையிலே செழிந்த நிலம் பலர் கூடி உழைத்த நிலம்
புழுதியாகிப் பறக்கிறது கும்பிகளாய் இடைமிடையே
குப்பை மேடுகள் போல் குவிந்து கிடப்பவைகள்
குடியிருந்த வீடுகள் இடுகாட்டு மண்டபங்கள் போல்
இரண்டொரு தூண்மிஞ்சி இடிந்து கிடப்பவைகள்
எங்களின் ஊரகங்கள் அரைகுறையாய் அங்கங்கே
அசைந்தும் தவழ்ந்தும் அலைந்து திரிபவைகள்
ஆவிகள் அல்ல அவர்கள் எம் மக்கள்
இழப்பதற்கு இவர்களிடம் இன்னும் இருப்பவை
உயிர்கள் மட்டும்தான் உடமைகள் அல்ல
ஏகமாய் இன்று இழந்து கொண்டிருப்பதை
வீரமாய் முன்பே இழக்கத் துணிந்திருந்தால்
இழந்திருப்போமா இந்த மண்ணை

**-கல்வயல் கீரன்**

*வாத்தியார் வாய்மொழி*

## போர்முனையில் சண்டை ஊர்முனையில் குண்டு



போர்முனைக்கு அப்பால் குடிமனைகள் மீது எறிகணைகளை வீசுவது, சிங்கள எறிகணை வீச்சுப் பிரிவுக்குப் பிடித்தமான ஒரு பொழுது போக்கு. குண்டு வீசுவதே சிங்கள விமானப்படையின் முழுநேர வேலை.

வலிகாமச் சமரின் போது, தென்மராட்சி மீதும், வடமராட்சி மீதும் இராணுவம் எறிகணைகளை அள்ளி வீசியது.

வலிகாமத்தை விட்டு மக்கள் இடம் பெயரமுன்னர் அங்கிருந்த ஊர்மனைகள் மீது கொலைவெறியுடன்—கடுமையான எறிகணை வீச்சுக்களையும் வான் தாக்குதல்களையும் சிங்களப் படைகள் செய்திருந்தன. ஆனால், வலிகாமம் மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அந்தத் தாக்குதல்கள் தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. போர்முனையை வெல்வது மட்டுமல்ல, தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதும் சிங்களப் படைகளின் நோக்கம் என்பதை இவை தெளிவாக்குகின்றன.

மக்களை இலக்கு வைத்து சிங்களப் படைகள் நடாத்தும் இந்த வெறித்தாக்குதல்களை நிறுத்த ஏதாவது வழி உண்டா? சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் மனிதாபிமான முறையில் வேண்டுகோள்களை விடுத்தும்கூட, மக்கள் மீதான தாக்குதலை அரச படைகள் நிறுத்தவில்லை. அவ்விதம் நிறுத்தப்படும் என எதிர்பார்க்கவும் முடியாது. ஏனெனில் தமிழர்களை இனஅழிப்புச் செய்வதுதான் சிங்கள அரசின் இராணுவக் கொள்கை.

எனவே குடாநாட்டில் சிங்களப்படைகள் குந்தியிருக்கும்வரை— தங்களுடன் ஒரு எறிகணைவீச்சுப்பிரிவை அவர்கள் வைத்திருக்கும்வரை—எங்கள் மண்ணில் எந்நேரமும் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கலாம். கள்வனை வீட்டுவளவில் குடியிருக்க அனுமதித்துவிட்டு களவை எப்படித்தடுப்பது! கள்வன் ஊரைவிட்டு வெளியேற்றப்படவேண்டும்.

குடாநாட்டை விட்டு சிங்களப் படைகள் வெளியேற்றப்படவேண்டும். அப்போதுதான் எமக்கு நிம்மதி பிறக்கும். அனுராதபுரத்தில் இருந்து வடமராட்சிக்கு எறிகணை வீச முடியாது. மதவாச்சியிலிருந்து தென்மராட்சிக்கு ஆட்லறி அடிக்க முடியாது என்பதை எண்ணிப்பார்ப்பது பொருத்தமானதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று வட தமிழீழத்திலே இலட்சக் கணக்கான எம்மக்கள் ஓரிடத்திலே பரவி நின்று ஒன்றைப் பற்றியே எப்போதும் சிந்திக்கின்றார்கள். மாபெரும் மன மாற்றத்திற்கு வித்திடப் போகும் இச்சிந்தனை உறைவிடத்திற்கும், உணவுக்கும் அலையும் நேரம் போக மிகுதி நேரத்தில் நடக்கின்றது. ஒரு முழுமையான மீளாய்வு பூரணமான ஒரு இருப்பெடுப்பு–தம்மைப் பற்றித் தாமே செய்கின்றார்கள். எதை இழந்த போதும் தமது சிந்தனைத் திறனை இழக்காத எம்மக்கள் தாம் இழந்தவை பற்றி அவை மீட்கப்பட வேண்டியது பற்றி தமது எதிர்காலம் பற்றிப் பாரிய தேடல் முயற்சி ஒன்றை இப்போது தொடங்கியுள்ளார்கள். இதுவரை நாம் எவ்வாறிருந்தோம்? இப்போது என்னவானோம்? இனி என்ன நாம் செய்ய வேண்டும்? என்பன பற்றி அவர்களது ஓயாத உரத்த சிந்தனை சுழல்கின்றது.

ஏனென்றால் எல்லாமே இருந்தது அவர்கட்கு ஒரு கணம், எதுவுமே இல்லாமற் போனது மறுகணம். ஒரு இரவில் அவர்கள் கதை மாறியது. பூகம்பம் நிகழ்ந்தது போல் எல்லாமே தலைகீழாகிவிட்டது. இருப்பவன், இல்லாதவன், கற்றவன், கல்லாதவன், மேலவன், கீழவன் என்கிற வேறுபாடுகள் மாயமாக மறைந்துவிட்டன. மனிதமே இன்று மிஞ்சி நிற்கின்றது. வெளித்தோற்றத்திற்குப் போர்த்திய போர்வைகள், தன்னை மறைக்க அணிந்த முகமூடிகள் எல்லாமே நீங்கிவிட்டன. அதேவேளை தமது சுயஇருப்பு கருவறுக்கப்பட்டு தமது அடையாளங்கள் அழிக்கப்பட்டு அலைய நேர்ந்தது ஏன் என்கிற வினாவே மிஞ்சுகின்றது. ஏன் என்கிற இக் கேள்விக்கு பதிலே இப்போது தேடப்படுகின்றது.

தானென்ற மமதையுடன் கூடிய நினைப்பு அழிந்து நாமென்று நினைக்க வைத்துவிட்டான் எதிரி. மெத்தையிலே படுத்தோர்க்கும் செத்தையிலே படுத்தோர்க்கும் கட்டாந்தரையே படுக்கையானது ஏன்?

# உரத்த சிந்தனை

நித்திரையிலேயே நிம்மதி பிடுங்கி எறியப்பட்டது ஏன்? எலி வளையானாலும் தனிவளைவேண்டுமென்று தனியே காணிவாங்கி தனிவீடுகட்டி நீட்டி நிமிர்ந்து வேப்பமர நிழலில் காற்றாட சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த வாழ்வெங்கே?....

ஏனென்றால், ஒரு குடும்பத்தின் உறுப்பினர் என்ற வகையில் ஒவ்வொருவரும் தனக்கென வாழாமல் தனது குடும்பத்திற்காக வாழ்ந்து மாடாகத் தேய்ந்து ஓடாக உழைத்து தமது குடும்பங்களைக் கரை சேர்த்தவர்கள் எம் மக்கள். அவ்வாறிருந்தும் இந்நிலை ஏன் ஏற்பட்டது?

ஒரு சமூகத்தின் உறுப்பினர் என்கிற வகையில் பணிவை, ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து கல்வியே கருந்தனம் என இரவு, பகலாக கற்று விசேட சித்திகள் எய்திய பட்டங்கள் பல பெற்று பாங்கான பதவிகளில் அமர்ந்து பிறர்க்கு இடைஞ்சல் இல்லாமல் வாழ்ந்தவர்கள் எம்மக்கள். அவ்வாறிருந்தும் இந்நிலை ஏன் ஏற்பட்டது.

முழுமானிட குலத்தின் உறுப்பினர் என்கிற வகையில் பண்பட்ட வாழ்வொன்றை இலக்காகக் கொண்டு உலகறிவோடு அறிவியல் அறிவையும் பெற்று ஆய்வுகள் செய்து வாழ்ந்தவர்கள் எம் மக்கள். அவ்வாறிருந்தும் இந்நிலை ஏன் ஏற்பட்டது?

ஒரு அரசின் பிரசை என்கிற வகையில் அது பேரினவாத அரசு என்ற பொழுதும் கூட அதன் சட்டங்கள் நடைமுறை விதிகள் போன்றவற்றை இறுக்கமாகப் பேணி நேர்மையாகப் பெறும் வேதனத்திற்குப் பெறுமதியான உழைப்பை நல்கியவர்கள் எம் மக்கள். அவ்வாறிருந்தும் இந்நிலை ஏன் ஏற்பட்டது?

வயலில் உழைத்து கடலில் பிழைத்து தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்தவர்கள் எம் மக்கள். அப்படியிருந்தும் என்ன நடந்தது அவர்கட்கு?

இவ்வாறாக சுத்தம் பேணி, சுகாதாரம் பேணி, நல்லொழுக்கம் பேணி, ஆலயங்கள் அமைத்து நல்லறம் ஓதி வாழ்ந்தவர்கட்கு என்ன நடந்தது இன்று?

தமிழ் வளர்க்க விழாவெடுத்து– பட்டி மன்றம், விவாத மேடை சொற்போர் நடத்தி– கம்பன், வள்ளுவன் புகழ்பாடி தமிழ்த்தொண்டும் செய்தவர்கள் எம் மக்கள். அவர்கட்கு ஏன் இக்கதி ஏற்பட்டது? இதுவேதான் அவர்கள் சிந்தனை.

இவ்வாறு சிந்திக்கத் தொடங்கிய எம் மக்கள் இப்போது விடையை அண்மிக்கின்றார்கள். அவ் விடை இதுதான். வீடேநாடென்று இருந்தவர்கட்கு இப்போது நாடுதான் வீடென்பது புரிந்துவிட்டது. வீட்டைக்கட்டி அறைகட்டி பூட்டும்போட்டு சுற்றி மதில் சுவர் கட்டி வாயிலுக்கு பெரும் பூட்டும் போட்டவர்கள் நாட்டுக்கு வேலியிட மறந்து விட்டனர். அதையுணரும்போதே நாடும் கிடைக்கும் வீடும் கிடைக்கும் இழந்த வாழ்வும் மலரும்.

# வீரத்தமிழ்க்குலம் விலங்கு சுமக்காது

எங்கள் பகைவனே இது எங்கள் தேசம்
புரிந்துகொள்.......
இலங்கை இரண்டு தேசமே
அறிந்து கொள்......
எம் விலங்கை, விலங்குணர்வுள்ள – நீ
விலக்கமாட்டாய்....அறிவோம்!
உணர்ந்து கொள்! வீரத்தமிழ்க்குலம்
விலங்கு சுமக்காது – உன்
கனவும் பலிக்காது.
அதர்மமும் வீரமும் ஓரணியில் நிற்காது

எமது துப்பாக்கிகள் துருப்பிடித்துவிட்டதென
எவன் சொன்னான்? – எம்மண்ணில்
கரும்புலி கூட கர்ப்பத்தில் தரிக்கிறான்.......
தினம் தினம் ஆயுதம் உன்னிடம் பிடுங்குவோம்
உன் கொள்வனவெல்லாம் எமக்குரியதே!
ஒரு வார்த்தை–
எங்கள் கைகள் என்றும் இரும்படா......
எங்கள் கைகளில் என்றும் நீ துரும்படா.......

–இ. ஓவியநாதன்

# இணைந்த கரங்கள்

## நாம் பொறுப்புடன் இயங்க வேண்டும்

- போராட்டத்திலிணைந்த மாணவன்

"இந்த அரசில் நாம் படித்து எமக்குத் தொழில் வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.....எமது உயர்கல்விக்கும் சிங்கள அரசுகள் உத்தரவாதம் அளிக்கப் போவதில்லை...மாறாக எமது மண்ணிலிருந்து எம்மைப் பூண்டோடு ஒழிக்கும் இனவெறியுணர்வுடன் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. இந்நிலையில் எமது அடுத்த தலைமுறையினராவது எமது சொந்த மண்ணில் சகல உரிமைகளையும் பெற்று கௌரவமாக வாழ வேண்டுமாயின் இன்றைய மாணவ சமுதாயம் எமது இன்றைய நிலையின் அபாயத்தன்மையைப் புரிந்துகொண்டு சிறீலங்கா இனவாத அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக, இராணுவ

**"இன்று நாம் எமது பொறுப்பை உணர்ந்து செயற்பட, அதாவது போராட்டத்தில் எம்மை இணைத்துக் கொள்ள தாமதிப்போமானால் நாம் எமது சொந்த அடையாளங்கள் அனைத்தையுமே இழந்து வெறுமையாகி அழிய நேரிட்டுவிடும்."**

ஒடுக்குமுறைக்கு எதிராக, ஆயுதம் ஏந்திப் போராட முன்வரவேண்டும் என நான் விரும்புகின்றேன். இந்த நியாயபூர்வமான போராட்ட உணர்வே என்னையும் விடுதலைப் புலிகளுடன் இணையுமாறு தூண்டியது."

–இப்படிக் கூறுபவர் வல்வெட்டித்துறை மானாங்கணையைச் சேர்ந்த சாம்பசிவம் சிறீகுமார் என்ற 17 வயது மாணவர் ஆவார்.

"எனது தாயார் 1988 ஆம் ஆண்டில் எம்மண்ணில் நிலைகொண்டிருந்த 'அமைதிப்படை' யென்ற இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே போல் என் மூத்த அண்ணனும் இதே இந்திய வெறிப்படையினரால் காயமடைய நேரிட்டது....."

**"இன்று புலிகள் போராடுவது ஒரு புனிதமான இலட்சியத்திற்காக, வருங் காலத் தலைமுறையின் வளமான வாழ்விற்காக, எமது மண்ணினதும், மக்களினதும் பூரண விடுதலைக்காக என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன்"**

"இச்சம்பவம் நடந்தபோது எனக்கு வயது ஒன்பது, அப்போது எனக்கு போராட்டம் என்றால் என்ன என்பதன் கருத்தும் உணர்வும் தெரிந்திருக்கவில்லை."

"ஆனால் தற்போது நான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அத்தியாவசியத்தையும், அதில் இணைந்து போராடாவிடின் ஒட்டு மொத்தமாக தமிழினத்தின் எதிர்காலமே நாசமாகிவிடும், நமது சொந்தமண் முற்றிலுமே சிங்கள இனவெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிந்துவிடும் என்ற உண்மையினை புரிந்து கொண்டுள்ளேன். அதுவே என்னை போராளியாக்கியுள்ளது."

"போர் எம் மண்ணை முற்றிலும் ஆக்கிரமித்த நிலையில், கல்வியையே குறிக்கோளான எமது மாணவ சமூகம் பாடசாலைகள் – பல்கலைக் கழகங்கள் மூடப்பட்ட நிலையில் அன்றாட வாழ்வின் நிச்சயத்தன்மையே சந்தேகத்திற்குரியதாகி உள்ள சூழலில் வெறுமனே வீட்டிலிருந்து இழந்தவற்றை யோசித்து ஒடுங்கிக் கிடப்பதும் அல்லது வீணே விரக்தியுற்று வெட்டிப்பொழுதினை போக்குவதும் நல்லதல்ல.... இன்று நாம் எம்பொறுப்பை உணர்ந்து செயல்பட தாமதிப்போமானால், நாம் எமது சொந்த அடையாளங்கள் அனைத்தையுமே இழந்து வெறுமையாகி அழிய நேரிட்டுவிடும்..."

"இன்று புலிகள் போராடுவது ஒரு புனிதமான இலட்சியத்திற்காக, வருங்காலத் தலைமுறையின் வளமான வாழ்விற்காக, எமது மண்ணினதும், மக்களினதும் பூரண விடுதலைக்காக என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன்.... இதேபோல் மாணவ சமூகம் முழுவதும் சிந்திக்குமேயானால், எமது மண்ணில் எதிரிக்கு சமாதிகட்டி, சுதந்திர விடியலில் திளைக்கலாம் என்பது மட்டும் நிச்சயமான நிச்சயமாகும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோழையாக வாழ்ந்துசாவதை விடவும் போராடிச் சாவதே மேல்.....

## -போராட்டத்தில் இணைந்த இருபிள்ளைகளின் தாய் கூறுகிறார்

"விடுதலைப் புலிகள் இரவு பகலாக ஊண் உறக்கமின்றித் தமது உயிர்களையும் தியா-கம் செய்து எம்மையும் எமது மண்ணையும் காப்பாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது, நான் மட்டும் குறுகிய நோக்குடன் வாழ விரும்பவில்லை. இதுவரை காலமும் சோர்ந்து கிடந்த என் மனம் துடிக்கிறது. எமது மண்ணிலிருந்து சிறீலங்காப் படைகளை விரட்டியடித்த பின்பே யாழ்ப்பாணத்திற்குள் காலடி வைப்பேன்"

என உறுதியாகக் கூறுகின்றார், அரியாலையைச் சேர்ந்த அன்ரன் மக்மிலன் ஜெரின் எனும் 23 வயது நிரம்பிய இரு பிள்ளைகளின் தாயார்.

பளை மகளிர் அமைப்பு வட்டச் செயலகத்தில் தன்னையும் தனது இரு வயது நிரம்பிய மகனையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொண்டுள்ள இவ் இளம் தாயைச் செவ்வி கண்டபோது,

"அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் குருநகரைச் சேர்ந்த அன்ரன் மக்மிலனை திருமணம் செய்தேன். எனக்கு ஆறு வயதிலும் இரண்டு வயதிலும் இரு ஆண்பிள்ளைகள் இருக்கின்றனர்."

"கடந்தாண்டு புத்தாண்டு தினத்தன்று போர்நிறுத்தம் அமுலில் இருந்த வேளை வீட்டுக்குள் இருந்தபோது, வீட்டுக்குள் இருந்த எனது கணவர் மண்டைதீவிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணைக்குப் பலியானார். ஒன்றுமறியாத என் கணவர் போர்நிறுத்தம் என உலகிற்கு அரசு காட்டிக் கொண்டு நடத்திய எறிகணைக்கு இரையாகியமை, என்னை மனமுடையச் செய்த அதேவேளை, விழிப்படையவும் செய்துவிட்டது."

"மனிதாபிமானமற்ற முறையில் மிலேச்சத்தனமாக எமது மக்களைக் கொன்று குவிக்கும் சிறீலங்காப் படைகள் மீதும், அரசு மீதும் என்னை அறியாமலேயே பழிவாங்க வேண்டும் என்ற கோபாவேசம் பிறந்தது. சொந்த நிலமும், சுதந்திரமும் இருந்தால்தான் நானோ எனது பிள்ளைகளோ நிம்மதியாக வாழ முடியும் என்ற முடிவிற்கு வந்ததால், பிள்ளைப்பாசத்திற்கும் மேலாக நாட்டுப்பற்றும், விடுதலை உணர்வும் பிறந்தது. அதனால் பிள்ளைகளையும் விட்டுவிட்டு 1994 யூன் இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டேன்."

"நான் இயக்கத்தில் இணைந்துவிட்டதைக் கேள்வியுற்ற எனது பெற்றோரும் மாமனாரும், அங்கு வந்து இரவு பகலாக அழுது குளறி என்னை வீட்டிற்கு இழுத்துச் சென்றுவிட்டனர். வீட்டில் சென்று வாழ்ந்தேனே தவிர, என் மனம் எப்படியாவது விடுதலைப் போராட்டத்தில் இணைந்து ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற எனது முடிவில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதனால் எப்படியாவது மீண்டும் இயக்கத்திற்குப் போய்விட வேண்டும் என்ற எண்ணத்துடன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தவாறு காலத்தை நகர்த்தி வந்தேன். வசதி படைத்த என் மாமனார் நல்ல முறையில் என்னையும் என் பிள்ளைகளையும் பராமரித்து வந்தார். மனமாற்றத்திற்காக யாழ் நகரில் தனியார் மருத்துவமனையில் வேலை செய்து வந்த போதிலும் என் மாம னார் எனக்கும் பிள்ளைகளுக்கும் நல்ல பாதுகாவலராக இருந்து வந்தார். நான் மீண்டும் இயக்கத்திற்குப் போய்விடுவேன் என அவர்கள் நினைத்ததால் அவர் மட்டுமன்றி, அவரது குடும்பத்தினரும் என்னைப் பின் தொடர்ந்த வண்ணமேயிருந்தனர். இதனால், எனது இலட்சியத்தை நிறைவேற்ற முடியாது திணறினேன்."

"யாழ் நகரை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. எமது மண்ணை எதிரி ஆக்கிரமிக்கிறான். எமது மக்கள் அனைத்தையும் இழந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற துன்பம் என்னை ஒரு புறத்தில் வாட்டி வதைத்த போதிலும், இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கி இயக்கத்தில் இணைந்து விடலாம் என்ற எண்ணம் மனதில் குடிகொண்டது."

"இடம்பெயர்ந்து வந்த நாங்கள் புலோப்பளையில் இருக்கும் தேவாலய முகாமில் தங்கியிருந்தோம். சம்பவதினம் விடுதலைப் புலிகள் அங்கு வந்து தொலைக்காட்சியில் இராணுவ அட்டூழியங்களைப் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்கள். என் பின்னால் மாமனார் மற்றும் குடும்பத்தினர் நின்றனர். பெரும் சிரமப்பட்டு நானும் எனது கண வனின் சகோதரியான மைத்துனியும், என்னுடன் உட்கார்ந்திருந்த எனது இளையமகன் பிரசாந்த்ராஜாவையும் தூக்கிக் கொண்டு இயக்கத்தில் இணைந்து கொண்டோம்."

"மற்றைய மகன் மாமியாருடன் இருந்தபடியால் கூட்டிவர முடியவில்லை. அவர்கள் தமது மகனின் ஞாபகமாக எனது மகனை வளர்க்க விரும்பினால் வளர்க்கட்டும். வசதி படைத்தவர்களாக அவர்கள் இருந்தாலும் அவர்களைவிட, செஞ்சோலையில் எனது பிள்ளைகளை இணைத்து விடவே விரும்புகின்றேன். ஏனெனில் அவர்கள் என்னைவிட என்னுடைய பிள்ளைகளை நன்றாகப் பராமரிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். இப்படிச் சொல்வதால் எனக்கு என் பிள்ளைகள் மீது பாசம் கிடையாது என யாரும் கருதக்கூடாது. குடும்பம், உறவு, பாசம் இவை அனைத்திற்கும் மேலாக விடுதலை என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது. என்பிள்ளைகள் நிம்மதியாக வாழ வேண்டுமானால், நானும் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும். மற்றவர்கள் போராடி எமக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவார்கள் என எண்ணியிருக்க விரும்பவில்லை. போராடும் அவர்களுக்கு உந்துசக்தியாக நானும் என்னை இணைத்துக் கொண்டுள்ளேன்."

"யாழ்ப்பாணத்தை விட்டு ஓடிய நாங்கள் இனி எங்கேயுமே ஓடக்கூடாது. திரும்பிச் சொந்த இடத்திற்குப் போய் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை விரைவில் வரும் என்ற நம்பிக்கையுடன்தான் போராட்டத்தில் இணைந்துள்ளேன். அநியாயமாகச் சிங்களப்படைக-ளிடம் சிக்கிச் சாகவும் கூடாது. எமது மண்ணில் அவர்கள் கால்பதித்து நிற்கவிடவும் கூடாது. இனியும் நாம் சிங்களவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வாழவே கூடாது. வீணாகக் கோழையாக இருந்து சாவதிலும் பார்க்க, போராடிச் சாவதே மேலானது. அநியாயமாக அழிவதிலும் பார்க்க எதிரிகளை அழித்துவிட்டு அழிவேன்" என்றார் மனவுறுதியுடன்.

வலிகாமம் மக்கள் செய்த வரலாற்று இடப்பெயர்ச்சியும் தமிழர் படையின் உறுதியான போராட்டமும் உலகத் தமிழர்கள் மத்தியில் இன உணர்வையும் – அரசியல் விழிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன. சிங்கள அரசினதும் அதன் படைகளினதும் ஆக்கிரமிப்புச் செயல்களைக் கண்டித்தும், புலிகள் இயக்கத்திற்கு உலக அங்கீகாரமும் – ஆதரவும் வழங்கும்படி கோரியும் உலகத் தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்தி வருகின்றனர். இந்த மக்கள் போராட்டம் எமது சுதந்திரப் போருக்கு ஒரு அரசியல் வலுவை வழங்கி வருகின்றது. அதேவேளை, தமிழீழத்தில் வசிக்கும் மக்களுக்கு உற்சாகத்தையும் – போராட்ட வெற்றியில் நம்பிக்கையையும் ஊட்டி வருகின்றது.

பணம் தேடும் நோக்குடனோ அல்லது கல்வி பயிலும் நோக்குடனோ எமது மண்ணை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலும், அந்த மக்கள் தமது தாயகம் பற்றிய எண்ணங்களுடனும் – ஏக்கங்களுடனும் தான் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் இந்த மன உணர்வுகளை பி.பி.ஸி தமிழோசை, வெரித்தாஸ் மற்றும் மலேசியா – சிங்கப்பூர் வானொலிகள் ஒலிபரப்புக்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இதேவேளை, தமிழ்நட்டில், இன்று அதிகரித்துவரும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான உணர்வலைகளை, குறைத்து மதிப்பிட முடியாது. சுயநல அரசியல்வாதிகளின் அர சியல் சித்து விளையாட்டுக்களால் தமிழ்நாட்டு மக்கள் இனஉணர்வு இழந்து கிடக்கின்றனர். ஆனால் தற்போது, இந்திய மத்திய அரசுக்குச் சில அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு இன உணர்வும், அது காரணமாக எமது போராட்டத்தை

## நாங்கள் 8 கோடி; 18 இலட்சம் அல்ல

ஆதரிக்கும் தன்மையும் அங்கே பெருகி வருகின்றது.

உலகத் தமிழர் மத்தியில் பெருகிவரும் போராட்ட ஆதரவைக்கண்டு தமிழீழ மக்கள் மகிழ்ச்சி அடைவதைவிட, சிங்கள அரசு அடையும் பதற்றம் அதிகமானதாகும். உலகத் தமிழர்களின் ஒட்டு மொத்த ஆதரவு புலிகள் இயக்கத்திற்குப் போய்ச் சேருமாயின் அதன் விளைவுகள் எப்படி இருக்குமென்று சிங்கள அரசு கணித்துப் பார்க்கின்றது. அதனால் தான் புலிகளை தனிமைப்படுத்துவதற்காக "இது ஒரு பயங்கரவாத அமைப்பு" என முத்திரை குத்த, அரசு படாதபாடு பட்டது. ஆமினும், உலகத் தமிழர்கள் புலிகள் இயக்கத்திற்குப் பகிரங்கமாகக் காட்டிய ஆதரவு அலைகளால் அரசின் முயற்சி அடிபட்டுப்போய்விட்டது.

"யூதர்களைப் போல் தமிழர்களும் சக்திமிக்க ஒரு சர்வதேசச் சிறுபான்மை இனம்" என ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் ஒருமுறை கூறியதை இங்கு சுட்டிக் காட்டலாம். இஸ்ரேல் நாட்டை அமைக்க யூதவிடுதலை அமைப்புக்கு உலகெங்கும் வாழ்ந்த யூத மக்கள் வழங்கிய பொருளாதார உதவிகள் இஸ்ரேல் நாட்டை, விரைவாக அமைக்க உதவியது என்பது வெளிப்படையான உண்மை. அதுபோல உலகத் தமிழர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெருமளவில் பொருளுதவிகள் – பண உதவிகள் செய்வார்களாயின் எமது விடுதலைப் போரின் இறுதி வெற்றியும் மிக விரைவில் கிடைத்துவிடும் என்ற அச்சம்தான் ஜே. ஆரின் அந்தக் கருத்தில் பொதிந்துபோய் உள்ளது. இது பொய் என்றும் கூறிவிடமுடியாது.

ஆயினும், பொருளாதார உதவிகள் ஒரு விடுதலைப் போரை வெற்றியை நோக்கித் தள்ளிவிடும் என்று நாம் கற்பனை பண்ணக்கூடாது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகைப் பணம் போய்ச் சேர்ந்திருந்தும்கூட அது விடுதலைப் போரை வெல்லவில்லை. ஒரு சிறந்த தலைமையும் – ஒரு சிறந்த படையும் ஒன்றிணையும்போது, நிதிவளம் போரில் வெற்றியைத் தேடித்தரும். ஒரு சிறந்த தலைவனை வரலாறு எமது இனத்திற்குத் தந்துள்ளது.

எனவே, உலகெங்கும் வாழும் தமிழர்கள் இந்தப் போராட்டத்திற்கான நிதித் தேவையை ஈடுகட்ட உதவ வேண்டியது அவர்களது தேசியக் கடமை ஆகும். அதேவேளை தமிழீழம் என்ற தனி அரசை அமைப்பதற்குத் தேவையான ஆட்பலத்தை ஈழம்வாழ் மக்களால்தான் வழங்க முடியும்.

எமது தாயகம் ஏறக்குறைய 18 இலட்சம் தமிழர்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் நாங்கள் 8 கோடி மக்களைக் கொண்ட தமிழ் இனம் என்பதும் உண்மையாகும்.

## மாவீரர்கள்

படுகொலைக்குப் பலியானவர்களல்ல.....
விடுதலைக்கு உரமானவர்கள்,
பட்டினியால் பாழ்பட்டவர்களல்ல.....
படையணி இணைந்து பகையழித்தவர்கள்,
நாதியற்றவர்களல்ல.....
தாய் மண்ணில்
நீதி கேட்டவர்கள்,
வெய்யிலுக்கஞ்சி விருட்சத்தின் கீழ்
படுத்தவர்களல்ல.....
வெய்யிலில் படுத்து
விருட்சத்தை –
சுதந்திரக் கிளை பரவ
வளர்த்தவர்கள்,
விடுதலைப் பயிருக்கு.....
உயிர்ச்சத்தை அளித்தவர்கள்,
தாய் மண்ணின் விடியலுக்காய்
தலைவன் வழிநின்று களம்
வென்றவர்கள்.

-இ. ஓவியநாதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








# பொஸ்னியா சம(ர)தானம்?

## சென்ற இதழ்த் தொடர்ச்சி....

தங்கள் தலைவர்களைத் தெரிவு செய்யும் சனநாயக உரிமை மக்களுடையது என்றும், தம்மைக் கைது செய்ய நேட்டோ படையினர் முயற்சி செய்தால் இரத்தக்களரி தோன்றும் என்றும் றடவன் கறட்சிச் அவர்கள் கூறி வருகின்றார்.

மேலும், ஒரு தேசத்திற்குள்ளேயே, 'சொந்த இராணுவங்களைக் கொண்ட இரு நாடுகள்' என்ற ரீதியில் அமைந்திருக்கும் இந்தத் தீர்வுத் திட்டத்தில் எழும் பல சந்தேகங்கள் இது வரை தீர்க்கப்படாமலேயே உள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பொஸ்னிய, சேர்பிய, குறேயேசிய அதிபர்கள் இந்த ஒப்பந்தத்தை எற்றுக் கொள்ளப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. குறிப்பாக,

சேர்பிய அதிபர் மிலோசவிச் அவர்களை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்த முக்கிய காரணங்களாக, இழந்து போயிருந்த சர்வதேச நன்மதிப்பைச் சேர்பியாவிற்கு மீண்டும் பெற்றுக் கொடுத்தல், சேர்பியா மீதான ஐ. நா. பொருண்மியத் தடையை விலக்கச் செய்தல் என்பன வற்றைக் குறிப்பிடலாம்.

**இந்திரன்**


எல்லாச் சேர்பியரையும் அடக்கிய முழு சேர்பியா பற்றிப் பேசுவதை, 3 வருடங்களுக்கு முன்னரே சேர்பியா நிறுத்தியிருந்தது. அண்மையில் குறேயேசிய சேர்பியர் குறேயேசியப் படைகளால் வெற்றி கொள்ளப்பட்டபோது, திரு. மிலோசவிச் அவர்கள் சேர்பியருக்கு உதவி செய்யத் தவறினார். இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம், ஒன்று சேர்ந்த சேர்பியாவின் மேல் விருப்புக் கொண்டிருந்த பொஸ்னியத் தலைவர்களையும் அவர் கைவிட்டதாகக் கருதப்படுகின்றது.

பல ஆய்வாளர்கள் எதிர்பார்ப்பதைப் போல, இந்த உடன்படிக்கை பொஸ்னியாவை ஒன்றாக வைத்திருக்கத் தவறுமானால் மீண்டும் ஒரு போர் வெடிப்பதைத் தவிர்க்கமுடியாமற் போகும்.

திரு. மிலோசவிச் அவர்களது அரசியல் எதிர்காலம் அவர் சேர்பியாவிற்கும், பொஸ்னிய சேர்பியருக்கும் இடையில் நல்லுறவை வலுப்படுத்துவதில் பெரிதும் தங்கியிருக்கும்.

சுலோபடன் மிலோசவிச்சின் கொள்கைகள் எவ்வளவு மிதவாதத் தன்மையானதாக இருந்தாலும், தேசிய ரீதியில் இன்னுமொருவர் பதவிக்கு வரும்வரைதான் இவை நீடிக்கும்.

இதேபோல, பொஸ்னியாவில் குறேயேசியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள உறவை விட, பெரிய குறேயேசியாவிலுள்ள குறேயேசியர்களுக்கும் பொஸ்னிய குறேயேசியர்களுக்கும் இடையிலான உறவு வலுவானது. திரு. துஜ்மன் அவர்களுடைய ஆளும் கட்சியில் (Croatioan Democratic Union) உள்ள ஒன்று சேர்ந்த குறேயேசிய நாடமைப்பதற்கு ஆதரவானவர்களின் பலமான நிலையும், அவர்களது கொள்கைக்கு ஆதரவான பொஸ்னிய குறேயேசியர்களும் குறேயேசியாவிற்கும், பொஸ்னியக் குறேயேசியப் பகுதிகளுக்குமான இணைப்பை அதிகரிக்கவே முயற்சி செய்வார்கள்.



பல ஆய்வாளர்கள் எதிர்பார்ப்பதைப் போல, இந்த உடன்படிக்கை பொஸ்னியாவை ஒன்றாக வைத்திருக்கத் தவறுமானால் மீண்டும் ஒரு போர் வெடிப்பதைத் தவிர்க்கமுடியாமற் போகும். அதுமட்டுமன்றி மேற்குலக ஆளுமைகட்கு ஆப்பு வைத்தது போன்று அமைவதோடு திரும்பவும் அவர்கட்கு சவாலாகவும் அமைந்து விடும்.

## நேட்டோ படைகள்

பாரிசில் கடந்த 14 ம் திகதி நடைபெற்ற சம்பிரதாய பூர்வமான ஒப்பந்தக் கைச்சாத்திடுதலின் பின்னர், 60,000 நேட்டோப் படைகள் பொஸ்னியாவில் அமைதியை அமுலாக்கற் படையாக (Peace Implementation force) செல்கின்றன. ஏற்கனவே பொஸ்னியாவிலிருந்த ஐ.நா படைகளின் இராணுவ நடவடிக்கைகளை நேட்டோப் படைகள் பொறுப்பேற்றுக் கொண்டன. ஆனால், ஐ.நா வின் மனிதாபிமான உதவி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் ஐ.நா வின் உதவி வழங்கும் அமைப்புகளே மேற்கொள்ளும்.

இந்த நேட்டோப் படைகள், ஐ.நா படைகளைப் போலல்லாது முழு இராணுவப் பலத்தோடு இருக்கும். இவை ஆட்லறி படைப்பிரிவு, தாங்கிகள், பலம் வாய்ந்த விசிறி விமானங்களைக் கொண்டதாக இருக்கும். அந்தப் படைகள் ஒப்பந்தத்தை அவதானிப்பதோடு, அதை அமுறப்படுத்தும் படையாகவும் இருக்கும்.

எந்தவிதமான இராணுவமேலாண்மைகளையும் நேட்டோப் படைகள் தமது பலம் கொண்டு தாக்கும். தமது பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவித மான நடவடிக்கைகளையும் இராணுவப் பலத்தின் மூலம் முறியடிப்பர்.

சுமார் 60,000 படையினரைக் கொண்ட இந்த நேட்டோ படையில் 20,000 அமெரிக்கத் துருப்பினரும், 13,000 பிரித்தானியத் துருப்பினரும், 10,000 பிரென்சுத் துருப்பினரும் 4,000 ஜேர்மன் துருப்பினரும், வேறு நேட்டோ நாடுகளிலிருந்து அண்ணளவாக 10,000 துருப்பினரும், நேட்டோவில் அங்கம் வகிக்காத நாடுகளான மலேசியா பாகிஸ்தான் வங்காள தேசம் மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சுமார் 10,000 துருப்பினரும், இரஸ்சியாவிலிருந்து 2000 துருப்பினரும் அடங்குவர் எனக் கணிப்பிடப்படுகிறது.

ஐ.நா படையின் தளபதி லெப். ஜெனரல் றூபட் ஸ்மித்திடமிருந்து இராணுவப் பொறுப்புகளை நேட்டோ படைகளின் தளபதி லெப். ஜெனரல் மைக்கல் வோக்கர் ஏற்றுக்கொள்வார். நேட்டோப் படைகள் அமெரிக்கத் தளபதி ஜோர்ஜிடமிருந்து மட்டுமே கட்டளைகளைப் பெறுவர்.

ஏற்கனவே பொஸ்னியாவிலுள்ள ஐ.நா படையின் சில படையணிகள் நேரடியான அல்லது மறைமுகமான நேட்டோத் தலைமையின் கீழ் கொண்டு வரப்படும்.

பொஸ்னியாவில் அமுல்படுத்தும் படையினர் மூன்று பகுதிகளாக, அமெரிக்க– ரஸ்யப் படைகள் பொஸ்னியாவின் வடக்கு– கிழக்குப் பகுதிகளுக்குப் பொறுப்பாகவும் (துஸ்லாவை –Tuzla மையமாகக் கொண்டு), பிரித்தானியத் துருப்புக்கள் வட– மேற்குப் பகுதிகளுக்குப் பொறுப்பாகவும் (கோன்ஜி –வேகப்பை Gornji Vakuf மையமாகக் கொண்டு), பிரென்சுத் துருப்புக்கள் சறயேவோ உட்படத் தென்பகுதிகளுக்குப் பொறுப்பாகவும் (சறயேவோவை மையமாகக் கொண்டு) இயங்குவர்.

உடனடியாக ஆயத்த வேலைகளுக்கென சில நூறு படையினர் இந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டாலும் முழுப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட சில

தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை



# உறவுகள்

எழுதியவர் - நெடுந்தீவு மன்ரேசா

மயக்க நிலையில் இருந்த இராஜியை, இடையில் கேட்ட முனகல்கள் கதறல்கள்– அவல ஓலங்கள்– சனக் கூட்டத்தின் அல்லோல கல்லோல நடமாட்டம் என்பன தட்டி எழுப்பின.

கண்களை அரையும் குறையுமாக திறக்க முற்பட்டவள் சற்று அதிர்ந்தே போனாள்.

எங்கே இருக்கிறேன்? யார் இவர்கள் எல்லாம்? காயங்கள் கட்டப்பட்ட நிலையிலும், இரத்த வெள்ளத்திலும், ஆடைகள் கிழிந்தும் கறைபடிந்தும், குருதிதோய்ந்தும்......தொடர்ந்தும் அவளாற் சிந்திக்க முடியவில்லை. என்ன நடந்திருக்கும்? தனக்குள்ளேயே வினாவிய அவளுக்குத் தலையில் வலி ஏற்படவே, தன் தலையிலும் காயம் என்பதை உணர்ந்து கொண்டாள். எழுந்திருக்க முற்பட்டும் முடியாதவளாக, பார்வையை ஓடவிட்டாள். பலர் உயிரற்ற பிணங்களாகவும், ஊனமுற்ற சிதைந்த நிலையிலும் கொண்டுவரப்படுவதைக் கண்டாள். பணிபுரியும் மருத்துவர்கள், ஊழியர்கள் அவசர அவசரமாகச் சிகிச்சை அளிப்பதையும், அடுக்கடுக்காகக் கொண்டு வரப்படும் காயமடைந்தவர்களுக்கு அங்கு நின்றவர்கள் உதவியளிப்பதையும் அவதானித்தாள். அக்கணத்தின் நிலையினை அவளால் ஊகிக்கமுடியவில்லை.

"சண்டைக் கெண்டா வந்தவன்? சனங்களையெல்லோ அழிக்க வந்தான்" ஆத்திரக் குரலில் வயதானவர் ஒருவர் குமுறுவது கேட்டது. "படுபாவி சனத்தைப் பார்த்தல்லோ போடுகிறான். தஞ்சம் தேடி ஓடிப்போயிருந்த கோயிலுக்கெல்லோ போட்டுவிட்டான்" அவர் கூறிமுடிக்குமுன், இன்னொருவர் குரல் தொடர்ந்தது.

இராஜியால் ஓர் அளவிற்கு நிலைமையினை உணர முடிந்தது. நடந்த சம்பவங்கள் மெல்ல மெல்ல நினைவிற்கு வரத் தொடங்கின. அந்நேரமே அவளது நினைவுகள் அவள் அன்னையையும், சகோதரர்களையும் சுற்றி வட்டமிட்டது. "நாங்களும் அந்தக் கோயிலுக்குள் தானே இருந்தோம்" மீண்டும், மீண்டும் வாய் உச்சரித்து ஓய்ந்தது. அவளால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. படுக்கையில் நினைவுகளை மீட்டுக் கொண்டாள்.

அப்பொழுதுதான் அவள் கண்ணயர்ந்திருப்பாள். "பிள்ளை! ஏதோ குண்டுச்சத்தம் கேட்கிறதுபோல் இருக்கு: எழும்பு" இராஜியைத் தாய் தட்டி எழுப்பினாள். குண்டுச்சத்தம் அவர்களுக்குப் புதிதல்ல. நித்தம் கேட்பதும், பழகிப்போனதும் தான். இரவு பகல் பாராமல் உழைத்துக் களைத்த இராஜிக்கு எழுந்திருக்க முடியவில்லை. இராஜி தனது சிறு வயதில் தந்தையை இதே குண்டில்தான் இழந்தாள். இதனாற் தானோ என்னவோ, அவள் அன்னைக்குக் குண்டுச் சத்தம் என்றாலே ஒரு பயம். குடும்பத்தில் மூத்தவளான இராஜி, குடும்பப் பாரத்தைத் தன் தலையிற் சுமந்து கொண்டாள். உயர்தரப் பரீட்சை சித்தி எய்தியவுடன், தனியார் நிறுவனம் ஒன்றிற் கடமையாற்றினாள். கிடைக்கும் ஊதியம் அவளுடன் ஆறாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் தேவையை எப்படி நிறைவு செய்ய முடியும்? தன் உடல் வருத்தத்தினைப் பாராமற் தையல் வேலையும் செய்து மேலதிகமாகச் சிறு தொகையினைச் சம்பாதித்து வந்தாள். வழமைபோல் அன்றும் அவள் வேலை முடித்து வீடு திரும்ப, மாலை ஆறுமணி ஆகிவிட்டது. பின், தையல் வேலை செய்துவிட்டுப் படுக்கைக்குச் செல்லும்போது, நேரம் ஒரு மணியைத் தாண்டிவிட்டது. உழைத்துக் களைத்து உறங்கிப் போன இராஜியின் உறக்கத்தை, இத்தனை பெரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறிய குண்டினாற்கூடக் கலைக்க முடியவில்லையே. நித்திரைத் தூக்கத்தில் எழுந்திருக்க முடியாதவளாக, "அம்மா அது எங்கோ தூரத்திற் கேட்குது படுங்கோ" சொல்லி முடிக்குமுன், பாரிய இரைச்சலுடன் பக்கத்து வீட்டில் வீழ்ந்து வெடித்தது இன்னொன்று. இராஜி நிலைகுலைந்து போனாள். எங்கே ஓடுவது? அம்மா, சகோதரிகளை எப்படிக் காப்பது? இனி விழப்போவது எமது வீட்டிற்தானா? சிந்தனை வலையிற் சிக்கியவளை, "பிள்ளை! அடுத்தது வருமுன் போய்விடுவோம்" என்றாள் அம்மா. பயத்துடனும், நடுக்கத்துடனும் மேலே சிந்திக்க முடியாதவளாக, உயிர்கள் மட்டும் மிஞ்சினாற் போதும் என்ற முடிவுடன் வீட்டைவிட்டு வெறுங்கையுடன் இரவோடு இரவாகப் புறப்பட்டனர்.

புறப்படும்போதுதான், ஊரே அல்லோல கல்லோலப்படுவது தெரிந்தது. குழந்தைகளின் கதறல்கள் ஒரு புறம், வயதானவர்களின் முனகல்கள் மறுபுறம், பிள்ளைகளைப் பிரியாமல் இடையிடையே அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைப்போர் இன்னொருபுறம். பெருமூச்சுடனும், பயப் பீதியுடனும், ஓட்டமும் நடையுமாகச் செல்லும் மக்கள் வெள்ளத்துடன் இராஜியின் குடும்பமும் சேர்ந்து கொண்டது. வரும்போது, வழியில் இடையிடையே வெடிக்கும் ஷெல்லிடமிருந்து தப்புவதற்காகத் தரையில் வீழ்ந்து படுப்பதும், தலைக்கு மேலாகப் பறக்கும் விமான அரக்கனிடமிருந்து தப்புவதற்காக ஓடி ஒளிப்பதுமென அவலப்பட்டனர். வெடிக்கும் ஷெல்லும், வீழும் குண்டும் எத்தனை மக்களின் உயிர்களை உறிஞ்சி வெறும் பிணங்களாக்கின. யார், யாரைக் காப்பது? உறவுகளானாலும் இந்த நேரத்திற் பிணங்களைக் கூடத் தூக்கவில்லையே. தூக்கவும் முடியவில்லையே. பிரிந்த மனங்கள், மனச்சுமையினை ஓவென அலறி, கண்ணீராய் ஓடவிட்டு நடந்து கடந்தன. காயமடைந்தவர்களைக் காப்பதற்கும், கண்ணுக்கெட்டியவற்றைத் தூக்குவதற்கும் சென்ற வாகனங்களின் விரைவு, இராஜியின் மனதில் ஒரு வைராக்கியத்தையும் ஆறாத் துயரினையும் தூண்டிவிட்டது.

இராஜியின் குடும்பத்துடன் நடந்து வந்தவர்களிற் சிலர் வழியில் இருந்த கோயில் ஒன்றினுள் தங்கினர். இரவோடு இரவாக நடந்த களைப்புடனும், எங்காவது தங்கி நிற்கலாம் என்ற ஏக்கத்துடனும் வந்த இராஜிக்கும் அவள் குடும்பத்தினருக்கும், துணைக்குக் கிடைத்தவர்கள்போல் அவர்கள் தெரிந்தது. "பிள்ளை நாங்களும் இந்தக் கோயிலுக்குள் கொஞ்ச நேரம் ஆறிப் போவோம்" தாயின் வார்த்தைகளை இராஜியால் தட்ட முடியவில்லை. நடந்து வந்த களைப்பினாலும் பய உணர்வினாலும், அவளது அன்னையும் சகோதரிகளும் நன்றாகக் களைத்துப் போய்விட்டார்கள் என்பதை அவளால் உணர முடிந்தது. கோயிலுக்குள் சென்றவர்கள், நிம்மதிப் பெருமூச்சுடன் ஓரமாக உட்கார்ந்தனர். கோயிலில் இருந்தாலும் இராஜியின் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்தன. எத்தனை கஷ்டங்களை மக்கள் அனுபவிக்கின்றார்கள்? தமிழராகப் பிறந்த ஒன்றிற்காகவா இவை? பிறந்த மண்ணையும் பறிகொடுத்த பின், மீண்டும் மீண்டும் ஓட்டமா? அந்நியரின் ஆக்கிரமிப்புப் போர் எமது மண்ணைப் பிடிக்கவா? முடியாது. ஆக்கிரமிக்கவே விடக் கூடாது. எமது உயிர்கள் உடைமைகளைப் பறிகொடுத்த பின்னும் அடிமைகளாக வாழ்வதா? செத்து மடிந்தாலும், எமது மண்ணைக் காக்க வேண்டும். சிந்தும் குருதியால் எமது மண் உரம் பெறவேண்டும். அந்நியரை எம் மண்ணிலிருந்து அடித்துத் துரத்த வேண்டும். அநியாயமாக உயிர்களைக் கொல்லும் அரக்கரைக் கொன்றொழிக்க வேண்டும். குமுறும் அவளின் மனதில், கொந்தளிக்கும் அலைகள் ஓயுமுன், "என்ன கோயிலைச் சுற்றிப் பறக்கிறான் போலிருக்கு" உடன் இருந்தவர்கள் முணுமுணுத்துப் பரபரப்படைந்தனர். ஆனால் இராஜி "கோயில்" என்ற மன அமைதியில் இருந்தாள். அங்கு இருந்தவர்கள் அங்கும் இங்கும் அங்கலாய்த்தனர். "ஐயோ! ஆண்டவனே! ஆண்டவனே!" என்ற குரல்கள் மேல் நோக்கி எழுந்தன. அவ்வளவுதான், அவள் நினைவுக்கு எட்டியது. என்ன நடந்திருக்கும்? அவன்..... குண்டு..... போட்டானா? உலகமே கண்முன் சுற்றியது. என்ன நடந்திருக்குமென அறியத் துடித்தாள்.

நாட்கள் மூன்றாக நகர்ந்தன. வைத்தியசாலையில் முன்பின் அறியாதவர்கள் அவளைப் பராமரிப்பதையும், அன்போடு ஆறுதல் கூறி அவளுக்குப் பணி புரிவதையும் கண்டு உள்ளூர வியந்து கொண்டாள். ஆனால் அம்மாவும் சகோதரிகளும் ஏன் இன்னும் தன்னைப் பார்க்க வரவில்லை? விநாடிகள் நகர்ந்திருக்கும். அவளது அயல் வீட்டில் உள்ளவர் அவளது கட்டிலின் அருகில் நிற்பதையும் கண்களில் அனுதாபமும் கவலையும் குடிகொண்டிருந்ததையும் அவளாற் கண்டுகொள்ள முடிந்தது. இருந்தும், அவர் ஏதோ சொல்ல வந்தும் சொல்ல முடியாமல், கண்களிலிருந்து கண்ணீர் ஓடியது. "இராஜி! அம்மாவும் தங்கைமாரும் போய்விட்டார்கள்". அவர் சொல்லி முடிக்க முடியாமற் பதற்றப்பட்டார். நிலை குலைந்த இராஜியின் கண்கள் நீர் சொரிய ஆரம்பித்தன. விம்மி விம்மி அழுதாள். வேதனையிற் துடித்தாள். தனிமரமாகத் தவித்தாள். "நான் என்ன தவறு செய்தேன்? இறுதியாகக் கூட உங்களைப் பார்க்க முடியவில்லையே. எல்லோருமே என்னைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டீர்களே. என்ன பாவம் செய்தேன்" ஓவென அழுதாள்.

"கொடிய அரக்கன், உங்களைத் தேடியா வந்தான்? தஞ்சம் அடைந்த உங்களின் உயிரையா பறிக்க வந்தான்?" ஆவேசம் கொண்டவளாகக் கண்ணீர் வடித்த அவளது கண்கள் கனலைக் கக்கின. வடிந்த கண்ணீரைத் துடைத்தவள், மனதில் உறுதியுடன் கட்டிலிலிருந்து எழ முயன்றாள். விழுப்புண் ஏந்தியபடி பக்கத்துக் கட்டில்களில் சில போராளிகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் முகங்களிற் தெரிந்த தீட்சண்யம் அவளுக்கு நம்பிக்கையூட்டியது.

**அப்பொழுதுதான் அவள் கண்ணயர்ந்திருப்பாள். "பிள்ளை! ஏதோ குண்டுச்சத்தம் கேட்கிறதுபோல் இருக்கு, எழும்பு" இராஜியைத் தாய் தட்டி எழுப்பினாள். குண்டுச்சத்தம் அவர்களுக்குப் புதிதல்ல. நித்தம் கேட்பதும், பழகிப்போனதும்தான். இரவு பகல் பாராமல் உழைத்துக் களைத்த இராஜிக்கு எழுந்திருக்க முடியவில்லை.**

## ஈழத் தமிழருக்காக தமிழகம் வேறுபாடுகளை உதறித் தள்ளியது

தமது வேறுபாடுகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு தமிழகம் ஒரேயணியில் நிற்கிறது என்ற செய்தியை தமிழகத்தில் நடைபெற்ற கதவடைப்பு எடுத்துக் காட்டியுள்ளது. தமிழகப் பொது வாழ்விற் பல்வேறு திருப்பங்களை ஏற்படுத்திய பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் ஒரேயணியில் நின்று ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தமை பாராட்டப்பட வேண்டியது. இவ்வாறு சென்னையிலிருந்து வெளியிடப்படும் தினமணி நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்திற் குறிப்பிட்டிருக்கிறது.

அதில் மேலும் குறிப்பிடப்படுகையில், இந்தக் கதவடைப்பு மூலம் புதுடில்லியும், கொழும்பும் பெறவேண்டிய படிப்பினையைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கிறோம். வழக்கம் போல தனது அமைதியின் மூலம் இந்தச் சிக்கலையும் அணுகினால், தமிழர்களை இந்தியத் தேசியத்தின் ஒரு கூறு என்று மத்திய அரசு கருதவில்லை என்ற எண்ணமே தமிழகத்திற் தோன்றும். ஈழத் தமிழர்கள் அரசியல் ரீதியில் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் இனம், மொழி, பண்பாட்டு அடிப்படையில் தமிழினத்தின் ஒரு கூறு – தமிழகத்தின் ஒரு அங்கம். தாய்த் தமிழகம் தனது ஒரு அங்கம் இழக்கப்படுவதாற் துடித்துக் கதறுகிறது. இதனை டில்லியும், கொழும்பும் உடனடியாக உணர்வது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐரோப்பாவில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள்





நோர்வேயில் இடம் பெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியின்போது...

## இத்தாலியில்

இத்தாலி பலெர்மோ மாநகரில் டாந்தே அரங்கில் நடைபெற்ற மாவீரர் எழுச்சி விழாவில் வாசலில் தமிழர்களின் பண்பாட்டுச் சின்மாக கும்பம் வைக்கப்பட்டு விழாவிற்கு வந்திருந்த அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளையின் மகளிர் அமைப்பினரால் வரவேற்கப்பட்டனர். இம் மகளிர் அமைப்பானது, இத்தாலியில் இம் மாவீரர் நாளன்றே உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஒரு ஆளுயர குத்துவிளக்கும், மாவீரர் வளைவுகள், வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களில் சிலரது பெயர்கள் எழுதப்பட்ட மாவீரர் நினைவுக்கற்களும் வைக்கப்பட்டிருந்தன.



விழாவின் தொடக்கத்தில் தமிழீழத் தேசியக் கொடியை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும், அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளருமான திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் ஏற்றி வைத்தார். தேசியத் கொடியேற்றலின் போது "ஏறுது பார் கொடி ஏறுது பார்" கொடிப்பாடல் ஒலிப்பதிவு நாடாவிலிருந்து ஒலிக்கப்பட்டது. தொடர்ந்து ஈகைச் சுடரேற்றல், மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த கடற்கரும்புலி கப்டன் மணியரசனின் தங்கை, பூநகரிச் சமரில் வீரச்சாவடைந்த 2ஆம் லெப். குமரப்பாவின் அண்ணன், 1987 இல் வடமராட்சி மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த கப்டன் வீமனின் தம்பி ஆகிய இம்மூவரும் சுடரேற்றி வைத்தனர். அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளையினரால் இயற்றப்பட்ட மாவீரர் அஞ்சலிப்பாடலான "தாயகம் ஒளிபெற தம்மினம் விழிபெற சென்றவர் வாருங்கள்" என்ற பாடல் விழாவிற்கு வந்திருந்த மக்கள் அனைவராலும் எழுந்து நின்று உருக்கமாகப் பாடப்பட்டது. மக்கள் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்த தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தினச் செய்தி நிகழ்ச்சியின் தொடக்கத்தில் வாசிக்கப்பட்டது.

மேடைநிகழ்சிகளில் முதலாவதாக, கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "மாவீரர் அஞ்சலிக் கானங்கள்" எனும் தலைப்பில் விடுதலைக் கானங்கள் பாடப்பட்டன. இதில் இரு பாடல்கள் இத்தாலிக் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் இயற்றப்பட்டு பாடப்பட்டன. இசை நிகழ்ச்சி "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலுடன் நிறைவு பெற்றது.

இரண்டாவதாக திலீபன் கல்வி நிலைய மாணவர்களுக்கான மாவீரர் பேச்சுப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர்கள் மேடையில் விடுதலைக்கு வித்தான மாவீரர்களைப் பற்றியும், எம் மண்ணின் விடுதலைக்கு நாம் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் சிறப்பாக உரையாற்றினார்கள். இவ் உரைச் சுருக்கத்தினை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இத்தாலிய மக்களுக்காக, செல்வி. பிரான்ஸ்சிக்கா, இத்தாலிய மொழியில் மொழிபெயர்த்துக் கூறினார். இவரைத் தொடர்ந்து **Bonomo Mariya** எனும் இத்தாலியப் பெண்மணியும் மாவீரர் சிறப்புரையை ஆற்றினார். இவர் மிக அண்மையில் களிமண்ணினால் மாவீரர் உருவச் சின்னத்தினைச் செய்து நிறம் தீட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளைக்கு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் மாலதி கலைப் பள்ளியினரின் அபிநய நடனங்கள் மூன்றும், கோலாட்டம் ஒன்றும் இடம்பெற்றது. "படையணி நகரும்", "உன்னத விடுதலை உச்சங்களே", "அங்கையற்கண்ணிக்கு ஆயிரமாயிரம் அக்கினித் தீபங்கள் ஏற்று", போன்ற உணர்வுபூர்வமான பாடல்களுக்கு விடுதலைப் புலிப் படையணிகளின் சீருடைகள் போல் அணிந்து வந்து அபிநயம் செய்து நடனமாடினர். இதனைத் தொடர்ந்து "கரும்புலி வீரர்கள் பாய்ந்தனர்" என்ற பாடலுக்கான கோலாட்டத்தை ஆண்களும் பெண்களுமாக வழங்கினர்.

அடுத்து, சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும், அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளருமான திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள், தனதுரையில், மாவீரர்களின் தியாகங்களைப் பற்றியும் தற்போது சந்திரிகா அரசின் யாழ் மண் மீதான இராணுவ நகர்வுகளைப் பற்றியும், இந்நகர்வின்போது வலிகாமம் மக்களுக்கு ஏற்படவிருந்த பாரிய உயிரிழப்புக்களிலிருந்து விடுதலைப் புலிகளினால் இவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்க்கப்பட்டதைப் பற்றியும் விளக்கினார்.



அவர் மேலும் கூறுகையில், "சந்திரிகா இராணுவமானது மரபுவழிப் போருக்கு விடுதலைப் புலிகளை வரவழைத்து, மிகவும் அதிகளவில் எறிகணைகளையும், விமானக் குண்டு வீச்சுக்களையும் நடாத்தி, மிகவும் அதிகளவில் உயிரிழப்புக்களை விடுதலைப் புலிகளுக்கும், மக்களுக்கும் எற்படுத்த நினைத்தது. ஆனால் தமிழீழ தேசியத் தலைவரின் மதிநுட்பத்தால் விடுதலைப் புலிகள் மக்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தித் தங்கள் படையணிகளின் பின்நகர்வினை நடாத்தியதொடு, கெரில்லா முறையில் இராணுவம் மீதான வெற்றிகரமான தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பதன் மூலம் சந்திரிகா இராணுவத்திற்கு மிகவும் பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் சந்திரிகா, தமிழ் மக்களை முற்றுகையிட்டு, பெரிய அளவில் இனப்படுகொலையினை நடாத்தி, அரைகுறை அரசியல் தீர்வினை துரோக தமிழ் குழுக்களை வைத்து நிறைவேற்ற முடியாத அரசியல் தோல்வியினை சந்தித்து இருக்கின்றார். சந்திரிகாவின் யாழ் மண் மீதான இவ் இராணுவ நகர்வு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இன்னும் வேகப்படுத்திருக்கின்றதென்றும் யாழ் மண்ணிலிருந்து மட்டுமல்லாமல், தமிழீழ மண்ணிலிருந்து முழுவதுமாக இராணுவம் அழிக்கப்பட அல்லது விரட்டியடிக்கப்பட புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் தங்களது பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும் என்றும் கூறி இறுதியில் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று மேடையில் நின்றவாறு தனது கைகளை உயர்த்தி அவர் முழங்க, அரங்கத்தினை நிறைத்திருந்த மக்கள் அனைவரும், தங்கள் கைகளை உயர்த்தி, மிகவும் உணர்புபூர்வமாக, "........தமிழீழத் தாயகம்" என்று டாந்தே அரங்கம் அதிரும்வண்ணம் குரலெழுப்பினர்.



தொடர்ந்து இத்தாலிக் கிளையினரால் தயாரித்தளிக்கபட்ட "ரணசுறு, சூரயா...." என்ற பாடலுக்கான அபிநயநடனத்தை ஐந்து இளைஞர்கள் கரும்புலிகள் மாதிரியான உடையணிந்து மிகவும் சிறப்பாக வழங்கினர்.

இடைவேளையின் பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தபட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து புலிச் சின்னமும் பெயரும் பொறிக்கப்பட்ட எழுதுகோல் வெளியிடப்பட்டது. இதனை சம்பிரதாய பூர்வமாக, இத்தாலியப் பெண்மணியான செல்வி. பிரான்சிஸ்கோவிற்கு மேடையில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மேடை நிகழ்ச்சியில் இறுதியாக கலை பண்பாட்டுக் கலைஞர்களுடன் இணைந்து குருநகர் நாடகக் கலைஞர்கள் வழங்கிய, "அவதாரங்கள்" எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. வரலாற்று நூல்களுக்கு ஒப்புவமையாக தமிழீழப் பெண்ணொருத்தியும், ஆணும் தமிழீழ மக்களின் நல்வாழ்விற்காகத் தங்களை போராட்டத்தில் இணைத்துக்கொள்கின்றார்கள். இறுதியில் மண்மீட்புப் போரில் வீரச் சாவைத் தழுவுகின்றார்கள். இயற்கையோடு கூடிய நடிப்பினை பல இடங்களில் காணமுடியவில்லை என்ற ஒரு விமர்சனத்தையும் மக்கள் தெரிவித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும், இந் நாடகத்தில் "மக்கள் அடக்குமுறைக்கும், அநீதிக்கும் உட்படுத்தப்படும் போது, அவற்றிக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடவே மதங்கள் அனைத்தும் கூறுகின்றன" என்ற உண்மைக் கருத்தினை வலியுறுத்தியதால், இந் நாடகக் கலைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழீழத் தேசியக் கொடியினை திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் இறக்கி வைத்தார். இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளைப் பிரதிநிதி திரு. மேதா அவர்கள் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற பாடலைப் பாட மக்கள் அனைவரும் கைதட்டி அவருடன் இணைந்து உணர்வுபூர்வமாக அப்பாடலைப் பாடி மாவீரர் எழுச்சி விழாவினை இனிதே நிறைவேற்றினர்.

இவ்விழாவில் ஆயிரத்தி நானூறுக்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் இத்தாலி மக்களும் கணிசமான அளவு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யேர்மனியில்



25–11–95 அன்று யேர்மனியின் கிறிபீல்ட் நகரில் மாவீரர் நாள் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது. பேரூந்துகளிலும், தனியார் வாகனங்களிலுமாக யேர்மனியின் பல பாகங்களில் இருந்தும் அலை அலையாய் மக்கள் வந்து கூடினர். மாவீரர் நாள் நிகழ்வு நடைபெறும் மண்டபத்தின் முன்னால் மாவீரர்களின் தியாகம் நிறைந்த வீரச் செயல்களை விபரிக்கும் பிரமாண்டமான ஓவியங்களும் வளைவுகளும் மக்களை வரவேற்று நின்றன. ஒரு வீரத்தாய் மகளை நெற்றியில் திலகமிட்டுப் போருக்கு அனுப்பும் பிரமாண்டமான ஓவியம் பலரது கவனத்தையும் ஈர்த்தது. மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கவிருந்த பிற்பகல் 3.00 மணிக்கு முன்னரே மண்டபம் நிறைந்து மக்கள் மண்டபத்திற்கு வெளியேயும் கூடி நின்றனர். 7000 த்திற்கும் அதிகமான மக்கள் முன்கூட்டியே வருகை தந்திருந்தனர்.



தமிழீழக் கொடியை விடுதலைப் புலிகளின் யேர்மனிப் பிரதிநிதி திரு. சிவனேசன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து ஈகச்சுடரேற்றலும், மலரஞ்சலியும் நடைபெற்றது.

மாவீரர் தியாகங்களையும், மாவீரர் சாதனைகளையும் சின்னஞ்சிறு மழலைகள் எடுத்தியம்பியபோது, எதிர்காலத் தமிழர் சந்ததியின் உள்ளங்களையும் விடுதலை ஏக்கம் நிறைத்துக் கொண்ட காட்சியை காணக்கூடியதாக இருந்தது.

திருமதி சாவித்திரி இம்மானுவேல், திருமதி வானதி தேசிங்குராஜா, செல்விகள் தேனுகா காந்தராஜா, யாமினி சர்வானந்தன், பவித்ரா செல்வகாந்தன், சுகன்யா சிவசுதன் ஆகியோர் விடுதலைக் கனல் நடனங்களை வழங்கினர். 'பூகம்பம் இது ஆரம்பம்' என்ற நடனத் தொகுப்பு உணர்வுடன் ஆடப்பட்டதாகப் பலரும் கூறினர்.



தமிழீழம் இசைக்குழுவின் மெல்லிசைப் பாடல்கள் மாவீரர் புகழ் பாடி நின்றன. 'பயணம்' என்ற தாளலயம் ராஜகுமாரன்–ராஜன் ஆகியோரது தயாரிப்பில் மேடையேறியது. 'சந்திரிகாவுக்கு நன்றி' என்ற விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக நாடகம் சிங்கள இனவாதக் கொடுமைகளையும் மீறி, தமிழீழ விடுதலை உணர்வு, தாயக மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பதையும் – அடக்குமுறைகளால் விடுதலை உணர்வை அடக்க முடியாது என்ற யதார்த்த நிலையையும் வெளிப்படுத்தியது.

சிறப்புப் பேச்சாளராகத் தமிழகத்தில் இருந்து வந்து கலந்து உரையாற்றிய, தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் விடுதலை இயக்க நிறுவுனர் அருட்திரு அந்தோனிசாமி சேவியர் அருள்ராஜா அடிகளார், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியதுடன் துரோகச் செயலுக்குத் துணைபோகும் இந்திய அரசையும் கண்டித்தார். தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஈழத் தமிழர் சிக்கல் பற்றிய விழிப்புணர்வையும் ஈழத்தமிழருக்காக குரல்கொடுக்கத் தமிழ்நாடு தயாராகின்றது என்பதையும் விளக்கினார்.

தலைமையுரை வழங்கிய விடுதலைப் புலிகளின் யேர்மனிப்பிரதிநிதி சிவனேசன் அவர்கள் இன்றைய காலக்கட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் கடமைபற்றி வலியுறுத்தினார். **"தமிழ் மக்கள் மீது குண்டுகளைப் பொழிந்த விமானங்கள் வீழ்த்தபட்டத்தில் யேர்மனி வாழ் தமிழருக்கும் பங்குண்டு" எனக்கூறிய அவர் "பங்களித்த தமிழருக்கே அந்தப் பெருமையுண்டு, பங்களிக்காதவர் வேடிக்கை பார்க்க மட்டுமே முடியும்" என்றும் பார்வையாளர்கள் பங்காளிகளாக மாற வேண்டும்** என்றும் கரகோசத்தின் மத்தியில் பேசினார்.

'விடுதலை வேள்வி' என்ற நாட்டிய நாடகத்தின் ஒலித்தட்டை வெளியிட்டு வைத்த அருட்திரு. அந்தோனிசாமி அடிகளார் அவர்கள் உணர்வோடு எழுதப்பட்ட கவிதைகளையும், உயிரோட்டம் மிக்க இசையமைப்பையும் பாராட்டினார்.

'சோலைக்கலைமாலை' என்ற செஞ்சோலை அமைப்பின் வெளியீடான ஒளிப்பேழையையும், மாவீரர் மலர் என்ற விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட புத்தகத்தையும் வெளியிட்டு வைத்தனர்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் விடுதலைச் செய்திகளை அழகாக வெளிப்படுத்தி திரு. சிவம் அவர்கள் பாரம்பரிய கலையைத் தந்தது பலரது பாராட்டையும் பெற்றது.

புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் திரு. ஆனந்தராஜா அவர்கள் கொடியை இறக்கி மாவீரர் நாள் நிகழ்வை முடித்து வைத்தார்.

### கிழக்கு யேர்மனியிலும் மாவீரர் நாள் வழிபாட்டு நிகழ்வு

27–11–95 அன்று கிழக்கு யேர்மனியின் RADEBERG நகரில் அகதிகள் குடியிருப்பு ஒன்றில் மாவீரர் வழிபாடு நடைபெற்றது.

மாதம் 60 மார்க் மட்டுமே கைச்செலவுக்குப் பெறும் நிலையில் உள்ள தமிழர்கள் உணர்வோடு கூடி இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

அங்கு உரையாற்றிய திரு. கா. சிவநாதன் அவர்கள் "ஆசை வார்த்தைகூறித் தேயிலைத் தோட்டத்திற்கு அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழரின் நிலை இன்று எமது எதிர்காலச் சந்ததிக்கு வரக்கூடாது என்றால், நாம் எமது சுதந்திரத் தமிழீழத்துக்காக உழைக்க வேண்டும். தமிழீழ மலர்வே எமது எதிர்கால விடிவு!' என்றார்.

# ஏசன்நகரில்(யேர்மனி) கலைத்தென்றல் நிகழ்ச்சியும் நல்வாய்ப்புச் சீட்டிழுப்பும்

02–12–95 அன்று எசன் நகரில் அமைந்துள்ள மேனிலைப் பள்ளி மண்டபத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக்கிளை புனர்வாழ்வுக் கலைத் தென்றல் நிகழ்ச்சியை நடாத்தியது. 1995ஆம் ஆண்டிற்கான நல்வாய்ப்புச் சீட்டிழுப்பும் அந்த மேடையில் நடை–பெற்றது.

சாவித்திரி இம்மானுவேல், சுகன்யா சிவசுதன் ஆகியோரது நடன அமைப்பில் நடனங்களும் ஐசாக் இன்பராஜா அவர்களின் நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சியும், வில்லிசை ராஜன் அவர்களின் வில்லிசையும் நாட்டின் நடப்புகளை மிகத் தெளிவாக விளக்கி நின்றன.

விழாவின்போது உரையாற்றிய திரு. கா. சிவநாதன் "குழந்தைகள் பெரியவர்களில் இருந்து, மிருகங்கள், மரங்கள் வரையில் எல்லாமே அழிக்கப்பட்டுச் சுடுகாடாக்கப்பட்ட கிழக்கு மாகாணக் கிராமமான கொக்கட்டிச்சோலை மீண்டும் தளிர்த்து விடுதலைக் கிளைபரப்பிச் சிங்கள ஏகாதிபத்தியத்தை விரட்டி இந்த ஆண்டு மாவீரர் நாளில் தமிழீழக் கொடி யேற்றியுள்ளது. இன்றைய யாழ் மண்ணில் எதிரியின் கால்கள் பட்டுவிட்டாலும் கூட அவை விரைவில் எரிந்து, யாழ் மண் புனிதப்பட்டு மீண்டும் புலிகளின் அரவணைப்போடு விடுதலை உணர்வுள்ள மக்கள் வாழ வழி ஏற்படும்" என உதாரணம் காட்டி விளக்கினார்.

### மியுஸ் நகரில் புனர்வாழ்வுக் கலைத்தென்றல் 1995ஆம் ஆண்டின் 18வது கலைநிகழ்ச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக்கிளை, யேர்மனியின் பல பாகங்களிலும், புனர்வாழ்வுக் கலைத்தென்றல் என்ற பெயரில் கலைநிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது.

அல்லறும் தாயக மக்களுக்கு உதவும் குறிக்கோளோடு நடாத்தி வரும் இந்த முயற்சியில் 1995ஆம் ஆண்டிற்கான 18வது நிகழ்ச்சியாக 02–12–95 அன்று மியாபுஸ் நகரில் புனர்வாழ்வுக் கலைத்தென்றல் நடந்தேறியது.

இது இந்த ஆண்டிற்கான இறுதிநிகழ்ச்சியாகும். நானூறுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியாக இது அமைந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளையின் பிரச்சாரப் பகுதி பிரதிநிதி திரு. சிவகணேசன் அவர்கள் வரவேற்புரை கூறி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

'லூஸ் மாஸ்ரர்' புகழ் ஐசாக் இன்பராசா அவர்கள் நகைச்சுவையூடே பல நல்ல சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொடுத்தார்.

வில்லிசை ராஜன் அவர்களின் வில்லுப்பாட்டு, யதார்த்த நிலையை விளக்கும் கலைப் படைப்பாக பலரது மனத்திலும் இடம் பிடித்தது.

'தமிழீழம்' இசைக்குழுவின் 'பாச இசைமழை' என்ற மெல்லிசை நிகழ்ச்சி, விடுதலை உணர்வுள்ள பாடல்களை இனிமையான பின்னணி இசையுடன் தந்து, தரமான ஒரு இசை நிகழ்ச்சியாக அமைந்தது.

திருமதி ரஞ்சித் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

தாய்நாட்டின் இன்றைய நிலையில் வெளிநாட்டில் வாழும் தமிழர் அனைவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு பங்களிப்பதன் மூலம், நமது சொந்தங்களின் துயர் துடைக்கலாம் என்பதை வலியுறுத்திய ஒரு கலை நிகழ்ச்சியாக இது அமைந்திருந்தது.

# டென்மார்க்கில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையினரால் நடாத்தப்பட்ட மாவீரர் நாள் கார்த்திகை 25ஆம் 26ஆம் ஆகிய இரு தினங்களில் டென்மார்க்கின் இரு பிரதான நகரங்களில் நடைபெற்றது.

டென்மார்க்கின் சகல பாகங்களிலிருந்தும் கலைஞர்களும், பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். மாவீர மலர்கள் என்ற தலைப்பில் மாவீரர் தொடர்பான சொற்பொழிவுகள் நடைபெற்றன. தேசந் தேடும் ராகங்கள் என்னும் தலைப்பிட்டு இசை நிகழ்ச்சிகளும், அவற்றோடு நாட்டிய நாடகங்கள், பாடலுக்கு அபிநயம், நாடகங்கள் என்பவற்றோடு தாயக தரிசனங்கள் என்னும் அனுபவ விபரிப்புக்களும் இடம்பெற்றன.

இன்று நமது தாயகமாம் தமிழீழத்தில் இனஅழிப்பு வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. மக்கள் இலட்சக் கணக்கில் தமது வாழிடங்களை விட்டுப் புலம்பெயர்ந்துள்ளார்கள். இந்த வெள்ளத்தை மண்ணள்ளிப்போட்டுத் தடைசெய்ய வேண்டியது ஒவ்வொரு மக்களதும் தேசியக்கடமை. வெள்ளம் பெருக்கெடுத்தால், பிட்டு விற்றுப் பிழைக்கும் செம்மனச் செல்வி கூட மண்ணள்ளிப் போடவேண்டு மென்பது புராணகாலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு விதி. இதை நாம் அனைவரும் புரிந்து செயற்பட வேண்டுமென விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "மற்றெல்லா மாவீரர் நாட்களையும் விட இந்த மாவீரர் நாளுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவமிருக்கிறதெனவும் தெரிவித்தார். இதுவரை நினைவுகூரப்பட்ட மாவீரர் நாளையும் இச்சூழலில் இது நடக்குமா? என்று யாருமே கேட்டது கிடையாது. இன்றைய போர்ச்சூழலில் மக்கள் பெருமளவில் அகதிகளாக்கப்பட்டுள்ள சூழலில் மாவீரர்நாள் எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படுமா? என்று சந்தேகத்துடன் இம் முறை மட்டும் சிலர் கேட்டனர். மாவீரர் நாள் ஒருபோதும் நின்றுவிடாது. இது எமது தேசிய மாவீரர்களின் தினம். விடுதலைக்காக இன்னுயிர் தந்த தியாகிகளை அஞ்சலித்து விளக்கேற்றும் புனிதமான நாள். இந்த நாளுக்கு இனி வரலாற்றில் எந்த ஆண்டும் ஓய்வில்லை. தமிழீழம் அமைக்கப்படும்போது தமிழீழப் போர் ஓயும். ஆனால் தமிழீழம் அமைக்கபட்ட பின்பும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும் ஒரு தினமே இம் மாவீரர் நாளாகும்" என்றார் அவர்.

உலகத்தில் கொண்டாடப்படும் தேசியவீரர் தினங்களெல்லாம் விடுதலைக்கும் தேசியத்திற்கும் உயிர் கொடுத்தோருக்கே கொண்டாடப் படுகிறது. ஆனால் இந்த மாவீரர் நாளில் இக்கணம் விடுதலைக்கு உயிர்கொடுக்கும் வேங்கைளுக்கும் விளக்கேற்றுகிறோம். இவை சாதாரண விளக்குகளல்ல. உயிர் விளக்குகள் தமிழீழத் தேசத்தை மீட்டெடுக்கும் தியாக விளக்குகள் என்றும் தெரிவித்தார்.

www.tamilarangam.net

# இனி ஓயோம்!

சுடுகாடாய் மாறிச்
சுதியிழந்த எம்மண்ணை
"இறுதிவரை மோதி எடுப்போம்"
எனமறவர்
அணிதிரண்டு நெஞ்சால்
ஆணையிட்டார்
தமிழனது.....
கடைத்தெருவில் ஏறிக்
கால்பதித்த முழுப்படைக்கும்
குடமுடைத்
வைப்போம் கொள்ளியென்றார்.
மக்களினை புண்படாது
மீட்ட புலிவீரர்
வந்தவர்க்கு மண்போட்டு வேள்வி
மடைவைக்கச் சூளுரைத்தார்.
எதற்குமே சோரா இளம்புயல்கள்
தாயகத்தைத் தவிக்கவிடோம்"
என்று தணலணிந்தார்,
வழியிருண்டு......
கூடு துறந்த
குலப்பொடியள்.....'படைதிரள'
ஊர்மீட்கச் செல்லும்
உதயத்தின் நாட்குறித்தார்!
மானம் குனியா மறப்போரில்
திசைசிவக்கும்.
போர் முகத்துக்கஞ்சாப்
பெருந்தலைவன் புன்னகைக்க
தூர்ந்திருக்கும் யாழ்மண் துளிர்க்கும்
பொலிவடையும்.
வேள்வியிலே வெற்றி விளையும்
எமையடக்கச் சூழ்ந்தவர்க்கெம்
தோட்டம் துரவில் சமாதியெழும்.
நீள் துயரம், ஈக
நெருப்பிடை போய்க்கருக
வாழ்விடிந்த தேசம் மகுடமிடும்
அதுவரைக்கும்....
தோள்களிலே நாமும் இடி சுமப்போம்.
நெருக்கடிக்குள் கால்பதிப்போம்.
கனவை நனவாக்க.....
பாரங்கள்
தூக்கும் கரத்துக்கு துணிவேற்றி.....
கற்பூரம் நேர்த்திவைத்துப்
பாட்டுப் படைப்போம். பணியோம்.
நிலம் மீண்டு
நிச்சயமாய் ஆடி நிமிர்வோம்,
இனி ஓயோம்.

--த. ஜெயசீலன்--





T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்